
# யாதுமாகி நின்றாள்



சுமதி ரூபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாதுமாகி நின்றாள்

சுமதி ரூபன்

மித்ர ஆர்ட்ஸ் & கிரியேஷன்ஸ்

32/9 ஆற்காடு சாலை சென்னை 24
தமிழ்நாடு இந்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mithra Books
ISBN 1 876626 93 3

Apart from any fair dealing for the purpose of Private Study, Research, Criticism or Review as Permitted under the Copyright Act, No part may by reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or any means, electronic, mechanical or photocopying, recording or otherwise without prior written permission from the publishers.

Mithra Publication books are published by
**Dr Pon Anura**

Publication Editor
**Espo**

# YATHUMAKI NINRAAL

A Collection of Short stories

By
## SUMATHY RUPAN

Mithra Books First Edition
**December 2003**

Cover Design
**P.R. Rajan**

**Mithra Arts and Creations**

1/23 MUNRO STREET
EASTWOOD 2122 AUSTRALIA
Ph: (02) 9868 2567
e-mail: www.anura@matra.com.au
Fax : (02) 9868 4205

30 VANNIAH STREET
BATTICALOA (EP)
SRI LANKA

375/8-10 ARCOT ROAD
CHENNAI 600 024 INDIA
Ph: (044) 372 3182
e-mail: www.mithra@md4.com.in
Fax : 0091-44-4721336

மித்ர : 88
விலை : ரூ. 30.00

முதற் பதிப்பு : டிசம்பர் 2003
பக்கங்கள் : 96

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

கொஞ்சம் கற்பனை....
கொஞ்சம் கனவு...
கொஞ்சம் அனுபவம் கலந்து
எழுத்தில் வடித்ததை
தரம் விமர்சனம் போன்றவற்றைக்
கருத்தில் கொள்ளாது
ஒரு பதிவாக உங்கள் முன் வைக்கிறேன்...
விமர்சனங்களை முழுமனத்தோடு ஏற்றுக்கொண்டு
மீண்டும் வருவேன் உங்கள் முன்...

சுமதி ரூபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

**த**மிழ்க் கனடியர்களுக்கு சுமதி ரூபனின் அறிமுகந் தேவையில்லை. அவர்கள் மத்தியிலே அவர் தம்மை ஓர் இலக்கியவாதியாகவும், எழுத்தாளராகவும் நிலைநிறுத்தியுள்ளார்.

இளைய தலைமுறையைச் சேர்ந்த புலம் பெயர்ந்த எழுத்தாளர்கள் முன்னெடுக்கும் சிறுகதை வடிவத்திற்கு உதாரணங்களாக 'யாதுமாகி நின்றாள்' என்கிற இச்சிறுகதைத் தொகுதியிலுள்ள கதைகள் அமைந்துள்ளன.

தமிழ் இலக்கிய 2004 விழாவிலே தானும் இணைந்து கொள்ளுதல் வேண்டும் என்கிற அக்கறையினால், இதனை மித்ர வெளியீடாகத் தருகின்றார்.

பொன். அநுர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா! இது உன் உலகம்

மெல்லிய குளிர் காற்று உள்ளங்காலில் வந்து குத்தியதால், உடல் புல்லரித்துப்போக சுருண்டு கொண்டாள் ஆர்த்தி. போர்வையை இழுத்து விட்டுத் தன்னைச் சூடுபடுத்திக்கொள்ள ஏனோ அவளுக்குப் பிடிக்கவில்லை. இப்போதெல்லாம் வேலை நேரம் போக, மிகுதி நேரத்தில் இப்படித் தன்னைச் சுருட்டிக் கொள்வது அவளுக்குக் கொஞ்சம் வேதனையாகவே இருந்தது. இழப்பு இயற்கை. பிறந்தவர் ஒவ்வொருத்தரும் இறந்துதான் ஆகவேண்டும்... கேட்டுக் கேட்டு அலுத்துவிட்டது... நோயுற்றுக் கட்டிலில் படுத்து, இறந்துவிடுவார் என்ற எதிர்பார்ப்பைத் தந்து விட்டு இறப்பவரின், மனம் தானே திடம் கொள்ளும். சரி திடீர் மரணம், படுத்தவர் காலையில் எழவில்லை... வேதனையானாலும் நல்ல சாவு என்று தேற்றிக்கொள்ளலாம்... ஆனால் யாரோ ஒருவர் செய்த தவறால் அவள் அப்பா... செல்ல அப்பா... ரோட்டோரம் சிதைந்துபோனது... ஆர்த்தியால் தாங்கமுடியவில்லை... மீண்டும் மீண்டும் "ஐயோ என்ர அப்பா அந்த நேரம் வேறு எங்காவது இருந்திருந்தால்.. சிறிது தாமதித்துப் போயிருந்தால்.. நல்லா வண்டி வைக்குது விடிய ஒருக்கா "வோக்" போட்டு வாங்கோ" என்று நான் அவரைக் கடிந்து கொள்ளாமல் இருந்திருந்தால்... இல்லை எல்லாம் நடந்துவிட்டது... அப்பாவைப் பொட்டலமாகக் கட்டி எரித்தாகிவிட்டது... நினைவுகள் மோதி மோதித் தடுமாற... கத்தி அழுத காலம் போய் வீடு வந்ததும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிலில் சுருளத் தொடங்கிவிட்டாள்... அப்பா எங்களுக்காக எப்படியெல்லாம் கஷ்டப்பட்டார்... ஓடியோடி வேலை செய்து எங்கட எதிர்காலம் ஒன்றை மட்டுமே எண்ணி... ச்சீ, ஒரு நிமிடத்தில் எல்லாம் போய்விட்டது... அப்பா என்னைத் தன் மகளாகவா நினைத்தார்... ஒரு நல்ல தோழியாக... எவ்வளவு அழகான உறவு எங்களுடையது... எண்ண எண்ண மனவலி உக்கிரமாக மீண்டும் அட்டைபோலச் சுருண்டாள் அவள்... ஆறு மாதங்கள் என்ன ஆறு வருடங்களானாலும் அப்பாவின் இழப்பை என்னால் தாங்க முடியாது! ஆர்த்தியின் வாய் புலம்பியது.

எனக்கே இப்படி இருந்தால்.. அம்மாவின் நிலை... வீட்டின் மகாராணியைப் போல் வலம் வந்தவள் அவள். விதவிதமான சேலைகள்... நகைகள்... அம்மா கேட்குமுன்பே வீட்டிற்கு வந்து விடும்... மகாலக்ஷ்மிபோல் அதையெல்லாம் அணிந்து கொண்டு அப்பாவுடன் காரிலேறிப் போகும்போது எவ்வளவு அழகாக இருப்பாள்... எத்தனைபேர் கண்பட்டதோ...? எல்லாம் போய் விட்டது... அப்பாவின் இழப்பு தாங்காமல் அம்மாவும் அறை யினுள் அடைந்து கொண்டுவிட்டாள்... கலகலப்பாக இருந்த வீடு அதீத அமைதியாகிச் சிறிது பயத்தை அவளுக்குத் தந்தது. வேலை, இடமாற்றம் என்று அண்ணாவும் போய்விட்டான்... காலை முதல் மாலைவரை வேலையுடன் என் பொழுதும் போய்விடும்... அம்மா பாவம் தனியாகப் பேச்சுத் துணைக்குக்கூட ஒருத்தரும் இல்லாமல்... ஆர்த்திக்குக் கொஞ்சம் குற்ற உணர்வாக இருந்தது... அம்மாவிடம் மனம்விட்டுப் பேசி எவ்வளவு நாட்களாகி விட்டன. பேசியதாக நினைவிலும் இல்லை... நேரத்தைப் பார்த்தாள். இரவு பத்துமணி... அம்மா படுத்திருப்பாளோ? எட்டி அறையைப் பார்த்தாள். வெளிச்சமாக இருந்தது... இல்லை அம்மா படுக்கவில்லை... சிறிது நேரம் அவளுடன் கதைத்தாலாவது மனம் ஆறுதல் கொள்ளும்.

கதவைத் தட்டிவிட்டு மெல்லத் திறந்தாள்... கட்டிலில் அவள் அம்மா நெஞ்சிற்குத் தலையணை வைத்துக் குப்புறப் படுத்துக் காலாட்டியபடியே எதையோ படித்துக் கொண்டிருந் தாள்... ஆர்த்தியைக் கண்டதும் "என்னடா நித்திரை வரேல்லையே" என்றாள்... குப்புறப்படுத்து அப்பாவின் மறைவை நினைத்து அழுதழுது கண்சிவந்து இருப்பாள் என்று எண்ணி வந்த ஆர்த்திக்கு, அம்மாவை இப்படிப் பார்க்க வியப்பாக இருந்தது... அம்மாவை அதிகம் சேலையில்தான் அவளுக்குத் தெரியும். மெல்லிய நீலநிறத்தில் நைட்டி அணிந்து... கறுத்த, சுருள் மயிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகத்தில் பரவிக்கிடக்க அம்மா தேவதைபோல் இருப்பதாக அவளுக்குப்பட்டது... அம்மாவின் கேள்வி இப்போது நினைவிற்கு வர, "இல்லை" என்பதாய்த் தலையாட்டிவிட்டு அருகில் வந்து இருந்தாள்... மகளின் தலையை வருடிக் கொடுத்துவிட்டபடியே "ஏனடா இப்பவெல்லாம் நீ ஒழுங்காச் சாப்பிடுறேலை... ரீவிகூடப் பாக்கிறேல்லை... வேலையால வீட்டை வந்தா ரூமுக்க அடைஞ்சு கிடக்கிறாய்... எழுந்திருந்து ஆர்த்தியை அணைத்துக் கொண்டாள்... "நீயும் அப்பாவும் எவ்வளவு க்ளோசா இருந்தனீங்கள் எண்டு எனக்குத் தெரியும்... அவர் இல்லாதது உன்னை நல்லாப் பாதிச்சிட்டுது...." "அப்பாவும் நீயும் எவ்வளவு க்ளோசா இருந் தனீங்கள் எண்டு எனக்குத் தெரியும்" என்று அம்மா கூற, அந்த வரிகள் ஆர்த்திக்கு என்னவோ செய்தது... அம்மா மறைமுகமாக எதைக் கூறுகிறாள்... அப்பாவுடன் மட்டும்தான் நான் க்ளோசாக இருந்தேன் என்பதைத்தானே... அப்பாவும் அவளும் படிப்பு, ஸ்போர்ட்ஸ், பொலிடிக்ஸ், ஹொலிவூட் என்று எத்தனையோ விஷயங்கள்பற்றி மணிக்கணக்காக அலசும்போது, அம்மாவை இவளுக்கு என்ன தெரியப்போகிறது என்ற பாணியில் விலக்கி விட்டது... இல்லை அம்மாவே விலகிக்கொண்டிருக்கலாம்... அவளுக்குப் பிடிக்காத ரொபிக்ஸ் அவையாக இருந்திருக்கலாம்... ஆனால் அம்மாவுக்கு என்ன பிடிக்கும் என்று ஒருபோதும் நானோ அப்பாவோ கேட்டறிய முயலவில்லை... சீலை, நகை, தமிழ் சினிமா போதும் என்ற சாதாரண மனுஷிக்குள் இலகுவாக அம்மாவை நாமாகவே பொருத்தி ஒதுக்கிவிட்டோம்...

ஆர்த்தி நிமிர்ந்து அம்மா முகம் பார்த்தாள்... அவளின் முகத்தில் ஒருவிதப் பூரிப்பு, உயிர்ப்பு புகுந்துகொண்டது போல் பட்டது. அவளுக்கு... அம்மாவின் கையிலிருந்த புத்தகத்தை வாங்கிப் புரட்டினாள்... புலம்பெயர்ந்த எழுத்தாளர்களின் புதுக் கவிதைத் தொகுப்பு அது... இரண்டு வரிகளைப் படித்துப்பார்த்த ஆர்த்திக்கு ஒன்றும் புரியவில்லை... ஆனால் கனமான வரிகள் அவை என்பது மட்டும் அவளுக்குப் புரிந்தது... மீண்டும் வியப் போடு அம்மா முகம் நோக்க "என்னடா அப்பிடிப் பாக்கிறாய்?" அம்மா கேட்டாள்... "இல்லையம்மா உங்களுக்குக் கவிதை பிடிக் குமா, அதுவும் புதுக்கவிதை?" அம்மா தலை குனிந்தாள்; முகம் சோபை இழந்தது... மௌனமானாள்... ஒரு நொடியில் தலை யசைத்துத் தன்னைச் சீர்செய்து புன்னகையை வரவழைத்தவள்... "பிடிக்கும் நல்லாப் பிடிக்கும்... படிக்கமட்டுமில்லை எழுதவும் பிடிக்கும்..." ஆர்த்தி வியப்போடு அம்மாவைப் பார்த்தாள்... "பொறுங்கோ வாறன்." எழுந்து சென்று எங்கோ கிண்டிக் கிளறிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிதாக ஒரு புத்தகம் எடுத்து நீட்டினாள். ஆர்த்தி வாங்கிப் பார்த்தாள்.... இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட கவிதைத் தொகுப்பது... பின்மட்டையில் இரட்டைப் பின்னலுடன் புன்னகைத்த அம்மாவின் முகம்... ஆர்த்திக்குக் கறுப்பு வெள்ளைப் படத்தில் தன்னைப் பார்ப்பது போலொரு சிலிர்ப்பு ஏற்பட்டது...

"அம்மா" ஆர்த்தியின் குரல் எழாத குரல் அனுங்கியது... "அதெல்லாம் ஒரு காலம்...." அம்மா பெருமூச்சோடு சொன்னாள்... "அப்ப பிறகு ஏனம்மா எழுதிறதை விட்டனீங்கள்..." ஆர்த்தியின் குரலில் அதற்கான பதிலின் புரிதல் தெரிந்தது.... "விட வேண்டிய கட்டாயம்... பிடிக்குதோ இல்லையோ கலியாணம் எண்டு வந்திட்டால் எல்லாத் தமிழ்ப் பொம்பிளைகளுக்கும் பிடித்திருக்கும் சாபம் இது..." கோபத்தினால் அம்மாவின் குரல் உயர்ந்து அடங்கியது. "அம்மா" அதற்குமேல் ஆர்த்தியால் ஒன்றும் கூற முடியவில்லை... எவ்வளவு சாதாரணமாக என்னுடைய அம்மாவை நான் எடை போட்டுவிட்டேன்... புலம்பெயர்ந்து விட்டதால் என் தனித்தன்மையை நிலை நாட்டும் சுதந்திரம் எனக்குக் கிடைத்திருக்கிறது. ஆனால் அம்மா போன்றோருக்கு.....

அம்மா சிறிது நேரம் எதையோ சிந்தித்தபடி நடக்கத் தொடங்கினாள்... ஆர்த்தி மௌனமாக அவளையே பார்த்தபடியிருந்தாள்... என் அம்மா மற்றப் பெண்களைப் போலில்லாமல் சிந்திக்கத் தெரிந்தவள்... அவளிடம் தனித்தன்மை இருக்கிறது... எம் நாட்டில் பிறந்து திருமணம் எனும்... பந்தத்திற்குள் அகப்பட்டு, தனித்தன்மை இழந்த பெண்கள் எத்தனை எத்தனை... இங்கே ஆண்களைக் குறை கூறுவதா? இல்லை பெண்கள் இப்படித்தான் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கும் எம் சமூகத்தைக் குறை கூறுவதா? ஆர்த்திக்குப் புரியவில்லை... ஆனால் ஒன்றில் மட்டும் அவள் உறுதியுடன் இருந்தாள்... அம்மாவை நான் புரிந்து கொள்ள வேண்டும்... அவளுடன் அதிக நேரம் செலவிட வேண்டும்... இனிமேல் அவள் என் தோழி...

ஆர்த்தியின் அருகில் வந்து இருந்து, அவள் கைகளைப் பற்றினாள் அம்மா... "ஆர்த்திக் கண்ணா உன்னோட நான் கொஞ்சம் மனம்விட்டுக் கதைக்க வேணும்... என்னை நீ புரிஞ்சு கொள்ளுவாய் எண்ட நம்பிக்கை எனக்கிருக்கு... இப்ப கொஞ்ச நாளா யோசிச்சு யோசிச்சு எடுத்த முடிவிது..." அம்மா புதிர் போட ஆர்த்தியின் தொண்டையை எதுவோ அடைத்தது... அழ வேண்டும்போல் துக்கம் எழுந்தது... இவ்வளவு நாளும் அம்மா என்று நான் எண்ணியிருந்த மனுஷி வேறு... இன்று நான் காணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனுஷி வேறு... திறமை, தனித்தன்மை, தன்னம்பிக்கை எல்லாம் கொண்ட பெருமைப்படக்கூடிய அம்மா என்னம்மா... இவள் சேலைக்கும் நகைக்கும் ஏங்கும் சாதாரணப் பெண்ணல்ல... “என்னம்மா... சொல்லுங்கோ... ஆர்த்தியின் குரலில் ஆதரவு தெரிந்தது... “இல்லை இருபத்தைந்து வருஷத்துக்கு முன்னம் நான் தொலைத்த வாழ்க்கையைத் தொடரலாம் எண்டு நினைக்கிறன்... எங்கட சமூகம் பற்றி உனக்குத் தெரியும்... எனக்கு அதுபற்றிக் கவலையில்லை... ஆனால் என்ர முடிவு உன்னைப் பாதிக்கு மெண்டால்... நான் யோசிக்க வேண்டியிருக்கு...” அம்மா குரல் தடுமாற ஆர்த்தி அவள் முகம் ஏந்தினாள்... “அம்மா நானொண்டும் சின்னப் பிள்ளை இல்லை... உலகம் தெரிந்த... மற்றவர்களின்ர உணர்வை மதிக்கத் தெரிந்த... உங்கட மகளம்மா நான்... ஏதோ சிலகாலம் எங்களுக்கு இடைவெளி வந்திட்டுது...” சிறிது நிறுத்தியவள்... “அம்மா உங்களிட்ட ஒண்டு கேட்டால் கோவிக்க மாட்டீங்களே?” என்றாள். “கேளடா கேள்... இப்பிடி மனம் விட்டுக் கதைச்சு எத்தினை வருஷமாச்சு... உன்ர சந்தேகங்கள் தீருமட்டும் இண்டைக்கு நாங்கள் மனம்விட்டுக் கதைக்கலாம்...” மகளை அணைத்துக் கொண்டாள் அவள்.

சிறிது மௌனத்திற்குப் பின்னர், “இல்லை நீங்கள் அப்பா வோட சந்தோஷமா இருக்கேல்லையாம்மா?” ஆர்த்தியின் முகத்தில் வேதனை தெரிந்தது. “என்னைக் காயப்படுத்தக் கூடா தெண்டு தயவுசெய்து பொய் மட்டும் சொல்லிப் போடாதேங் கோ... ப்ளீஸ் பீ ஓபண் வித் மீ அம்மா.” மன்றாடுவது போலொ லித்தது அவள் குரல். ஒரு நீண்ட பெருமூச்சை இழுத்துவிட்ட அம்மா ஆர்த்தியை ஆழமாகப் பார்த்தாள். மகளுக்குச் சந்தேகம் வந்துவிட்டது... அப்பா, அப்பா என்று எப்போதும் அவரோடு ஒட்டிக் கொண்டவள் மனதில், தான் எதையாவது கூறிக் குழப் பத்தை ஏற்படுத்தி விடுவேனோ என்ற தயக்கம் அவளுக்குள் எழுந்தது... இறந்தவரை விமர்சிப்பது மனிதத்தன்மை இல்லை... ஆர்த்திக்கு அவர் ஒரு நல்ல அப்பா... அம்மாவின் மௌனம் ஆர்த்திக்குப் புரிந்தது... “அம்மா, அப்பாமேல நான் வைச்சிருக்கிற பாசம், மரியாதை, பக்தி, இது ஒண்டும் உங்களோட நான் இப்ப கதைக்கிறதால குறைஞ்சிடாது... உங்களைப் பற்றி நான் புரிஞ்சு கொள்ள ஆசைப்படுறன். அதுதான் கேட்டன்... விருப்பமில் லாட்டிச் சொல்ல வேண்டாம்...” ஆர்த்தி அரைகுறையாக எதையோ புரிந்து வைத்திருக்கிறாள்... இவளை நான் தெளிவுபடுத்த வேண்டும். இது என் கடமை... அவலமாக இறந்துவிட்ட அவள் அப்பாவை அவள் ஒருபோதும் வெறுக்கக்கூடாது “ஆர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யம்மா... உன்ர அப்பாவோட நான் சந்தோஷமா இருந்தேனா எண்டு கேட்டால்... ஓம், இல்லை எண்டு மொட்டையாச் சொல்லி விட ஏலாது... ஒரு பொம்பிளை எதையெல்லாம் எதிர்பார்ப் பாளோ, அதெல்லாம் தேவைக்கும் மேலா கிடைச்சு தெண்டே சொல்லுவன்... கை நீட்டி அடிச்சதில்லை, குரல் உயத்திக் கதைச்ச தில்லை... வேறு பொம்பிளைத் தொடர்புமில்லை... எல்லாத்துக்கும் மேலால குடும்பம் எண்டா உயிரா இருந்தார்... ஆனால்..." அம்மா நிறுத்திக் கொண்டாள்... "என்னம்மா" என்ற ஆர்த்தி... "எங்கட சமுதாயம் ஒரு பொம்பிளை எப்படியெல்லாம் இருக்கவேணும் எண்டு எதிர் பாக்குதோ... அப்பிடித்தான் நீங்களும் இருக்க வேணும் எண்டு அப்பா எதிர்பாக்க, நீங்களும் மௌனமா அதை ஏற்றுக்கொண்டு சந்தோஷமா இருந்ததுபோல இவ்வளவு காலமும் நடிச்சீங்கள் என்னம்மா?" மகளின் தெளிவு அவளைத் தடுமாற வைத்தது... ஆம் என்பதாய் தலை அசைத்தவள் "உன்ர அப்பாவில பிழை இல்லையம்மா... எங்கட சமூகம் அப்பிடி, அவர் வளக்கப்பட்ட முறை அப்பிடி, நான் சிந்திக்கத் தெரிந்த வளாய் போனன் பார், அதுதான் பெரிய பிழை... இப்பிடி ஒரு புருஷன் கிடைக்க எல்லாரும் தவம் கிடக்க நான் மட்டும் அருமை தெரியாமல் தவிக்கிறன் அதுதானம்மா பிழை... யாராவது கேட்டால் உனக்கு இதைவிட என்னடி வேணும் என்று அடிக்க வருவீனம்... புருஷனுக்காகச் சீலை கட்டி... புருசனுக்காக நகை போட்டு அவருக்காகச் சாப்பிட்டு... அவருக்காகச் சிரிச்சு... அழுது... என்னை நான் தொலைச்சு எத்தினை வருஷமாச்சு எண்டு தவிக்கிறன் பார், அதுதான் பிழை." அம்மா விம்மினாள். அவள் விம்மல் சிறுகச் சிறுகப் பெருத்து குரல் உயர அழுகையாக மாறியது... அப்பா இறந்த அன்று இவள் இப்படி அழுதாளா தெரியவில்லை... ஆனால் இப்போது அழுகின்றாள்... தனக்காக அழுகின்றாள்.. தான் தொலைத்த வாழ்வுக்காக அழுகின்றாள். பத்துப் பொருத்தம் பார்க்கும் எம்மினம், மனப்பொருத்தம் பார்க்க மறந்ததை நினைத்து அழுகிறாள்... அழட்டும், வாய்விட்டு அழட்டும். ஆனால் இதுதான் இவள் அழும் கடைசி நாளாக இருக்கவேணும்... அப்பாவின் இறப்பு இவளுக்கு இழப்பல்ல; இவளைப் புதிதாக்கி இருக்கிறது... இழந்த சுதந்திரம் மீண்டும் கிடைத்திருக்கிறது... எனக்கு அப்பாவின் இறப்பு இழப்புத்தான்... கவலைதான்...

ஆனால் அம்மாவைப் பொறுத்தவரை இது சந்தோஷமே.... இதை நான் கொச்சைப்படுத்தக்கூடாது... மற்றவர்களையும் கொச்சைப்படுத்தவிடக்கூடாது... அம்மாவை, அவள் உணர்வை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் புரிந்து கொள்ள வேணும்… அப்பாவின் இறப்பு, அம்மாவை என்க்குப் பெற்றுத் தந்திருக்கிறது… அப்பாவிற்கு முன்னால் அம்மா இறந்துபோயிருப்பின் இந்தப் புரிதல் நிகழாமலே போயிருக்கும்… அம்மாவின் திறமை அறியப்படாமலே போயிருக்கும்…

இனிமேல் அம்மா அழக்கூடாது… என் செல்ல அம்மா அழக்கூடாது… நான் அவளை அழவிடமாட்டேன்… இனிமேல் நான் அவளிற்குத் தோழி… முதலில் புலம்பெயர்ந்த இலக்கிய எழுத்தாளர்களைக் கண்டுபிடிக்க வேண்டும்…. அம்மாவை அவர் களுக்கு அறிமுகம் செய்துவைக்க வேண்டும்… அம்மாவை மீண்டும் எழுதவைக்கவேண்டும்… இனிமேலும் அம்மா வீட்டில் அடைந்து கிடக்கக்கூடாது… இவ்வளவு காலமும் அம்மாவின் நண்பிகள் என்று இருந்தவர்கள் எல்லாம் அப்பாவின் நண்பர்களின் மனைவிமார்களே… சீலை, நகை எண்ணி, எண்ணிப் பெருமைப் படும் கூட்டம்… இனிமேல் அவர்கள் அம்மாவுக்கு வேண்டாம்… அம்மாவின் அலைவரிசையில் நண்பர்கள் அவளுக்குத் தேவை… தேடிப்பிடிப்பேன்… அம்மாவை புது மனுஷியாக்குவேன்… ஆர்த்தி யின் மனதிலிருந்த பெரிய பாரம் குறைந்துவிட… அம்மா என்ர செல்ல அம்மா… என்ர நல்ல சிநேகிதி… முணுமுணுத்தபடியே… ஆர்த்தி அம்மாவை அணைக்க, அவள் மகள் மடியில் சுருண்டு கொண்டாள்…

✦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவன் அப்பிடித்தான்...

சத்தியனின் மனம் வெம்பியது. அவன் கைகளின் நடுக்கத்தை, கையிலிருந்த சிகரெட் நுனிச்சிதறல்கள் காட்டிக் கொடுத்தன. அவன் கண்கள் அடிக்கடி வீட்டினுள்ளே புகுந்து வெளியேறின. தான் தனிமைப்படுத்தப்பட்டு விட்டோம் என்ற உணர்வு, அவனை அங்குமிங்கும் நிலையின்றி உலவ வைத்தது. தன் நிலை மெல்ல உணரப்பட அவனிடமிருந்து நீண்டதொரு பெருமூச்சு வெளியேறியது.

மெதுவான அந்தப் புற்தரையில், வெறும் காலோடு நடப்பது சத்தியனுக்குப் பிடித்தமான ஒன்று. இன்று காலைகூட அவன் தான் பின் தோட்டப்புற்தரையை அழகாக வெட்டிவிட்டிருந் தான். தோட்டத்தின் ஒரு பகுதியில், அவன் வைத்த தக்காளி, பீன்ஸ் வகைகள், பூக்களும் பிஞ்சுகளுமாய்த் தமது பருவத்தைக் காட்டிக் கொண்டிருந்தன. இவ்வளவு நாட்களும் அவன் பார்த்துப் பார்த்து அழகு செய்த தோட்டமும், வீடும் திடீரென்று அவனுக்குச் சொந்தமானதல்ல என்ற உண்மை உறைக்க, அவன் உறைந்து போனான். தரை முழுக்க, அவன் புகைத்து எறிந்த சிகரெட் துண்டுகள் சிதறிக் கிடந்தன, அவன் மனம் போல.

இன்று நான் என் உடமைகளுடன் வீட்டை விட்டு வெளியேறி விட்டால்? அதன் பின்னர் நிச்சயமாகப் பூட்டப்படப் போகின்ற என் வீட்டு வாசல் எனக்காகத் திறக்காது. இன்று நான் நிச்சயமாக முடிவெடுத்தே ஆக வேண்டும். என் குடும்பமா? இல்லை எனது வாழ்க்கையா?

என் குடும்பம் என்று இருந்துவிட்டால் என்னை இவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சும்மாவா விட்டுவிடப் போகின்றார்கள்? தமது விருப்பத்திற்கும், தமது கௌரவத்திற்குமாய், என் உணர்வுகளோடல்லவா விளையாடப் போகின்றார்கள்? அப்படியொரு இக்கட்டான நிலை வருவதற்கு முன்னால் வெளியேறி விடுவதே நல்லது. "என் உணர்வுகளைக் கிளறிப் பார்த்து மற்றவர்கள் கேலி செய்வதை நான் அனுமதிக்கப் போவதில்லை. இப்போதே இங்கிருந்து நான் வெளியேறியாக வேண்டும். ஆனால்... ஆனால்...."

அதன் பின்னர், அப்பா, அம்மா, அண்ணா, தங்கைகள் எல்லோரையும் பிரிந்து, வேறு உலகில் வேறு மாதிரி வாழ வேண்டும். என் உறவுகளைப் பிரிந்து என்னால் சந்தோஷமாக வாழ முடியுமா? மீண்டும், மீண்டும் அவன் மனதில் இக்கேள்வி எழுந்தாலும் தன்னை, தன் உணர்வுகளை மதிக்கத் தெரியாத, புரிந்து கொள்ள முயலாத அவர்கள் மேல் அவனுக்கு இயலாமையுடன் கூடிய கோபம் வந்தது.

ஏன் சத்தியன் எனும் மனிதனை, அவனாகவே ஏற்றுக் கொள்ள அவனது குடும்பத்தால் முடியவில்லை? ஒரு வேளை என் குடும்பம் ஏற்றுக்கொண்டாலும் இந்தச் சமூகம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. இந்த என் நிலையால் தங்கைகளின் எதிர்காலம் பாதிக்கப்பட்டுவிடுமா? சத்தியனுக்குச் சிரிப்பாக வந்தது. எந்த நூற்றாண்டில் இருந்துகொண்டு நான் இப்படியெல்லாம் சிந்திக்கிறேன்? தனி மனிதனின் உணர்வுகள் மதிக்கப் படவேண்டும் நான் கூறுகிறேன். என்னை போல் மற்றவர்களும் தான் கூறுகின்றார்கள். ஆனால் நடைமுறையில் எதுவுமே சாத்தியமற்றுப் போகின்றது. முற்போக்குச்சமூகம் என்பது வெறும் சொற்களால் ஆன ஒரு கனவு உலகு மட்டுமே. யதார்த்தம் எனும் போது, எமது சமூகத்தை நார் உரித்துப் பார்க்கும்போது, உள்ளே... எல்லாமே வேஷம்... இந்தச் சமூகத்திற்குள் தானே எனது குடும்பமும் அடங்கும். இதனால் தானா, எனது இந்த நிலையை எனது பெற்றோருக்கு விளங்கப்படுத்த நான் முயல்கையில், கிராமத்துப் பெண்களைப்போல் எனது அம்மா தலையில் அடித்துக் கதறினாள்? எவ்வளவுதான் படித்துப் பட்டம் பெற்றிருந்தாலும், மற்றைய மனிதர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாது, "நீ இப்படித்தான் இருக்க வேண்டும், இப்படி இருப்பது தான் உனக்கும் உன் குடும்பத்திற்கும் கௌரவம். அவன் குடும்பம் அவன் உணர்வுகளுக்கு வேலி போடும்போது, சத்தியன் உள்ளுக்குள்ளேயே துவண்டு போனான். நான் என்ன வேணுமென்றா இப்படி நடக்கிறேன்?... என் உணர்வுகள் மற்றைய மனிதர்களின் உணர்வுகளிலிருந்து வேறுபட்டுப் போனதற்கு நானா காரணம்? கோபம், அவமான உணர்வுகள் ஒன்றுகூட, அவனை அறியாமலே அவன் கண்களிலிருந்து கண்ணீர் உருண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகைந்து முடிந்து சிகரெட் கையைச்சுட சுயநினைவிற்கு வந்தான் சத்தியன். வீட்டினுள், இன்னும் அம்மா அழுது புலம்புவது கேட்டது. பாவம் அம்மா! எனக்கு ஏதோ தீர்க்க முடியாத நோய் வந்துவிட்டதாய் எண்ணி, எத்தனை வைத்தியர்களிடம் என்னை அழைத்துக்கொண்டு போனாள். "இது அவன் விருப்பம், இது ஒன்றும் மருந்து கொடுத்துத் தீர்க்கும் வியாதியல்ல" என்று மனோதத்துவ வைத்தியர்கள் கூறியபோது, "இவங்கள் இப்பிடித் தான் சொல்லுவாங்கள் நான் உன்னை எங்கட ஆக்கள் ஆரிட்டையும் கூட்டிக்கொண்டு போகப் போறன்." அம்மா மனம் தளராது கூற, அம்மா மனம் நோகக்கூடாது, அவளின் திருப்திக் காக என்று, அம்மா அழைத்த இடத்திற்கெல்லாம் ஒரு நாயைப் போல் பின் தொடர்ந்தான் சத்தியன்.

சத்தியனுக்கு, தான் ஆண்களால் கவரப்படுபவன் என்ற உணர்வு உணரப்பட்ட நாளும், அதனால் அவன் சிறிது தடுமாறிப் போனதும் நினைவிற்கு வந்தது. அவனுக்கு அப்போது பதினைந்து வயதிருக்கும். கொழும்பில் இருக்கும், ஒரு ஆண்கள் உயர்பள்ளியில் அவன் சேர்க்கப்பட்டான். முதல் நாள் அவன் வகுப்பறையை அடைந்தபோது எல்லோருமே புதிய மாணவர்கள்.

புதிதாக வந்திருக்கும் சத்தியனின் முகம் பார்த்து, ஸ்னேகமாகச் சிரித்தவர்கள் சிலர். ஒரு எதிரியைப் பார்ப்பது போல் பார்த்தவர்கள் சிலர். புதிதாக ஒருத்தன் வந்திருக்கிறான் என்ற சுரத்தையே இல்லாமல், தமக்குள் கதைத்துக் கொண்டிருந்தவர்களும் இருந்தார்கள். எல்லோரையும் கடந்து, தனக்கென்னிருந்த இருக்கையில் அமர்ந்தான் சத்தியன். ஆசிரியர் வந்து பாடம் தொடங்கினார். தன்னை யாரோ உற்றுப் பார்ப்பது போலொரு உணர்வு எழ, திரும்பிப்பார்த்தான் சத்தியன். சிறிது நீலமடிக்கும் கண்கள். அகன்ற தோள்கள். சிவந்த உதடுகள். அந்த முகத்தில் பெண்மையுடன் கூடிய ஒரு தேஜஸ்.

சிறிது காலமாகவே, இரவின் அவஸ்தைகளுக்குள் அல்லாடிக் கொண்டிருந்த சத்தியனுக்கு, இந்தப் புதிய முகம் ஏதோ கூறுவது போலப்பட்டது. அவன் கால்களில் மின்சாரம் பாய்ந்தது. கைகள் குளிர்ந்து போனது. முதற்பார்வையிலேயே சத்தியனுக்கு அவனைப் பிடித்துப் போயிற்று. ஒரு அழகிய பெண்ணைக் கண்ட வாலிபன், எப்படி உடல் சிலிர்த்துப் போவானோ, அதே நிலையில்தான் சத்தியன் இருந்தான் அப்போது. அவனுக்குத் தன் நிலையில் சிறிது வியப்பு ஏற்பட்டது.

பக்கத்து வீட்டு நிஷா, அடிக்கடி சத்தியனின் வீடு தேடி வந்து, அவனை உரசுவது போல் நின்று வம்பு பேசுவதும், "அவளுக்கு உன்னில ஒரு கண், பேசாமல் ஒரு நாளைக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையைப் போடடா.. நான் எண்டால் இவ்வளத்துக்கும்" அண்ணா காமக்கண்ணோடு சத்தியனைப் பார்த்துக் கண்ணடிக்க, சத்தியனுக்கு அருவருப்பாக இருந்ததே தவிர, உணர்வுகளில் எந்தவித மாற்றமும் ஏற்படட்டதில்லை.

ஆனால் இப்போது சத்தியனின் உணர்வுகளில் பல மாற்றங்கள். அந்த இளைஞனின் அழகிய முகத்தைத் திரும்பத் திரும்பப் பார்க்க வேண்டும் போலொரு உணர்வு. மனம் குழம்பிய நிலையில் மீண்டும் அவன் முகம் நோக்கினான் சத்தியன். மெல்லிய ஒரு புன்னகையுடன் சத்தியனையே பார்த்துக் கொண்டிருந்த அந்த இளைஞன், மெல்லத் தலை அசைத்தான். சிறிது கூச்சத்துடன் சத்தியனும் தலையசைத்தான். தாம் எதற்குத் தலையசைத்தோம் என்பது அவனுக்கே புரியவில்லை. ஆனால் அவனைத் தனக்கு மிகவும் பிடித்திருந்தது என்ற உண்மை மட்டும சத்தியனுக்குப் புரிந்தது.

பாடசாலை இடைவேளையின் போது, தனது பெயர் ஸ்ரீபன் என்று சத்தியனிடம் தம்மை அறிமுகம் செய்து கொண்டான் அந்த இளைஞன். ஸ்ரீபன் ஓர் ஆங்கிலக் கலப்பில் பிறந்தவன் என்பதை அவன் தோற்றம் சொன்னது. சத்தியன் தன்னை அவனுக்கு அறிமுகம் செய்து விட்டுத் தொடர்ந்து என்ன கதைப்பது என்று தடுமாறிக் கொண்டிருக்க, அங்கே வந்த ஒரு இளைஞர் கூட்டம் சத்தியனைப் பார்த்து "வந்த முதல் நாளே இந்தப் பெட்டையனோட சேந்திட்டாய். இனி உருப்பட்ட மாதிரித் தான்" என்று கூறிச் சிரித்து நகர்ந்தார்கள்.

சத்தியன் கேள்விக்குறியோடு ஸ்ரீபனைப் பார்த்தான். "என்னை எல்லாரும் இப்பிடித்தான் கூப்பிடுறவை" தலை குனிந்து அவன் சோகமானான். சத்தியனுக்கு, தான் சிறு வயதில் ஆண்களுடன் சேர்ந்து கொண்டு கிரிக்கெட், புட்போல் என்று விளையாடாமல், தங்கைகளுடன் சேர்ந்து கொண்டு, சீலை கட்டி, காப்பு, சங்கிலி போட்டு விளையாடும் போது, அவன் அண்ணா நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு, "பெட்டையன், பெட்டையன்" என்று கூறிச் சிரித்தது கண்முன்னே வர, தன்னைப் போல் ஒருவனை, தன் உணர்வுகளைப் புரிந்துக் கொள்ளக்கூடிய ஒருவனைக் கண்டு கொண்ட சந்தேஷத்தில் "நான் அப்பிடிக் கூப்பிடமாட்டன், எனக்கு உன்னைப் பிடிச்சிருக்கு நாங்கள் நல்ல ப்ரெண்ஸா இருப்பம்" உணர்ச்சிவசப்பட்டு ஸ்ரீபனின் கைகளைப் பற்றினான் சத்தியன். அவனுக்கு அப்படிக் கூற வேண்டுமென்று எப்படித் தோன்றியது. புரியவில்லை... ஆனால் ஸ்ரீபனின் கை பற்றியதும் மின்சாரம் பாய்ந்தது போல் தன் உடலில் ஏற்பட்ட மாற்றம், அதே மாற்றத்தால் தாக்குண்டவனாய் ஸ்ரீபனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தம்பித்து நின்றது. இருவருக்கும் தமக்குள்ளான உணர்வுகள் தெளிவாக, கைகளை விடுத்துக் கொண்டு மௌனமானார்கள்.

அவர்கள் உறவு சிறிது, சிறிதாய் இறுக்கமாகி, உணர்வுகள் பரிமாறப் பட்ட வேளை, நாட்டு நிலமை மோசமாகி, சத்தியனின் குடும்பம் கனடாவிற்குக் குடிபெயர்ந்து விட்டது. தம் உறவில் ஏதோ தவறு இருப்பதாகச் சத்தியன் எண்ணியதால், பெற்றோரிடம் ஸ்ரீபன் பற்றி மனம் விட்டுக்கதைக்கத் தயங்கினான். முடிவு? ஸ்ரீபனை அவன் இழக்க நேர்ந்தது.

கனடா வந்தபின் சில காலம், ஸ்ரீபனின் நினைவுகளால் அவன் அல்லாடிய நாட்களும் உண்டு. இருந்தும், புதிய நாடு, புதிய பாடசாலை என வாழ்க்கை முறையில் ஏற்பட்ட மாற்றங்கள். ஸ்ரீபனை அவன் சிறிது சிறிதாக மறக்க உதவின. பின்னர் பல்கலைக்கழகம் சென்று, ஜேம்ஸை சந்தித்தபோதுதான், மீண்டும் அவனிடம் அந்தப் பழைய உணர்வுகள் வெளிப்படத் தொடங்கின.

இப்போது சத்தியன் மிகவும் தெளிவாக இருந்தான். தன் நிலைபற்றித் தெளிவாகப் புரிந்து கொள்ளும் வயதும், பக்குவமும் அவனுக்கு இப்போது இருந்தன. தன்நிலை கண்டு, வெட்கப் படவோ, வேதனைப்படவோ இல்லை அவன். விரைவில் பெற் றோருடன், தன்நிலை பற்றிக்கதைக்கவும் அவன் முடிவு செய்திருந்தான்.

ஸ்ரீபனின் இழப்பை அவன் ஜேம்ஸிடம் கொண்ட உறவால் மீண்டும் பெற்றுக் கொண்டான். ஜேம்ஸைப்பற்றிப் பெற்றோரிடம் கதைக்கும் ஒரு நல்ல சந்தர்ப்பத்திற்காய் அவன் காத்திருந்த வேளை, அவன் சிறிதும் எதிர்பாராத வகையில் புயலாக அந்தச் சேதியை அவன் தாயார் கூறினாள். சத்தியனிற்குத் திருமணம் செய்து கொள்ளும் வயது வந்துவிட்டதாகவும், தனது நண்பியின் மகளை அவனுக்குத் திருமணம் செய்து வைப்பதற்குத் தாம் முடிவெடுத்திருப்பதாகவும், அவனின் சம்மதத்தையும் கேட்டாள் அவள்.

தனக்கு இப்போது திருமணம் வேண்டாம் என்று சத்தியன் கூற, வழமை போல் எல்லாப் பெற்றோர்களும் கேட்கும் கேள் வியையே அவனின் பெற்றோரும் கேட்டார்கள். “யாரையாவது காதலிக்கிறாயா?” தமது கௌரவத்திற்குக் குறைவில்லாது யாரை சத்தியன் காதலித்தாலும் தாம் திருமணம் செய்து வைக்கத் தயாராக இருப்பதாக அவர்கள் சொல்ல, சத்தியனுக்குத் தனது உண்மை நிலை புரியத் தொடங்கியது.

குடும்ப கௌரவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் தனது பெற்றோரிடம், ஜேம்ஸிடம் தான் கொண்டுள்ள காதலை எப்படி அவனால் கூறமுடியும். சத்தியன் மௌனமானான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது மௌனத்தைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு, திருமண ஏற்பாட்டில் அவனது பெற்றோர் அடி எடுத்து வைக்க, வேறு வழியின்றி ஜேம்ஸிடம் தான் கொண்ட உறவை உடைக்க வேண்டிய கட்டாயம் அவனிற்கு. வீடு உடைந்து போனது. முடி வில், சத்தியனுக்கு ஏதோ ஒரு வகை நோயென்று அவள் தாயாரும், இவன் இயற்கையில் இருந்து மாறுபட்ட ஒருவகை ஜந்து என்பதாய் அவன் தந்தையும், அவன் முகம் பார்த்துக் கதைக்கத் தயங்கிய அண்ணனும், கலங்கிய கண்களுடன் விலகிச் சென்ற தங்கைகளு மாய் சத்தியனை உலுக்கி எடுத்தார்கள்.

பல நாட்கள் போராட்டத்தின் பின்னர், சத்தியன் தன்னை மாற்றிக்கொள்ள வேண்டும், முடிவு செய்த பெண்ணையே திருமணம் செய்து கொள்ளவும் வேண்டும், மறுத்தால் இந்த வீட்டில் அவனுக்கு இடமில்லை என்பதாய் முடிவாயிற்று.

அவனுக்குக் கொடுக்கப்பட்ட கடைசி நாள் இன்றுதான்.

சத்தியன் நிலை கொள்ளாது தவித்தான். ஒரு பெண்ணை அவனால் காதலிக்க முடியாது என்ற உண்மை தெரிந்த பின்னரும், தமது கௌரவத்திற்காகவும், இந்தச் சமூகத்திற்குப் பயந்தும், தனது உணர்வுகளையும், ஓர் அப்பாவிப் பெண்ணின் வாழ்க்கையையும், பலி போடத்துணிந்த தனது பெற்றோர் மேல் சத்தியனுக்கு வெறுப்பாக வந்தது.

வீடு இப்போது அமைதியாகக் காணப்பட்டது. அவனு டைய பதிலுக்காக எல்லோரும் காத்திருப்பது புரிந்தது. மேல் அறை, திரைச்சீலையை விலக்கி விட்டு, அவன் தங்கைகள் அவனைப் பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

அண்ணனுக்குக் கலியாணம் ஆகிவிட்டது. தங்கையும் ஒருத் தனைக் காதலிக்கிறாள். விரைவில் கலியாணம் நடக்கவிருக்கிறது. ஆனால் எனக்கு மட்டும் ஏன் இப்படியாயிற்று? முதல் முறையாக கேள்விக்குறியானான் சத்தியன். தன்மேலேயே அவனுக்கு இரக்கம் எழுந்தது. என் இந்த நிலையால் நான் உயிராக நேசிக்கும் எனது குடும்பத்தை இழக்கப் போகின்றேன். வீட்டில் நடக்கும் ஒவ்வொரு விஷேட நிகழ்ச்சிகளுக்கும் நான் இல்லாது போகப்போகின்றேன். ஏன் என் ஏக்கம் இவர்களுக்குப் புரிய வில்லை? என்னை ஏன் ஏற்க மறுக்கின்றார்கள்? என் அம்மா கூட என்னை ஏற்க மறுக்கிறாளே! குழம்பிக் குழம்பி, சிந்தித்துச் சிந்தித்து எஞ்சிய வெறுப்போடு ஒரு தீர்மானத்திற்கு வந்த சத்தியன், வீட்டினுள்ளே புகுந்தான். ஆவ லோடு அவன் முகம் பார்த்த தாயாரின் பார்வை தவிர்த்து, தன் அறைக்குள் புகுந்து கொண்டவன், தன் உடைமைகளுடன் வீட்டை விட்டு வெளியேறினான். சத்தியனைத் தொடர்ந்தது, தாயாரின் அழுகை ஒலி மட்டுமே. (நன்றி : "Funny Boy" சியாம் செல்வதுரை)

✦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகச் சுவருக்குள் மீண்டும்

புரிதல் முழுமையற்ற நிலை வாழ்வு, வாழ்தல் பற்றிய தோற்றம் மயக்கம், கலாச்சாரப் பண்பாட்டின் மேலான பிரமை கூடிய பயம். சமத்துவத்தின் தெளிவின்மை. ஆதிக்கம், அடிமைத் தனம் போன்றவற்றின் உள்வாங்கல். புரிதலின் போது ஏற்படும் மோதலின் ஆதிக்க வீரியம் தரும் தடுமாற்றம் ஆமையாய் மீண்டும் உள்ளே...

அந்த அறையில் ஆழ்ந்த அமைதி நிலவியது. திறந்திருந்த யன்னலூடு வந்த காற்றுகூட, உள்ளே வர அஞ்சி நின்று போனது. திரைச் சீலைகள் விறைப்பாகிப் போயிருந்தன. வீதிகள் இயங்க மறுத்தன. நிசப்தம்... எங்கும் நிசப்தம்.

முழங்கால்களில் மணலின் நெருடல். மெதுவாகக் கையை நீட்டி முட்டியைத் துடைத்துப் பின் கையால் நிலத்தையும் தடவிச் சுத்தம் செய்தாள். கலா மெதுவாக நகர்ந்து முட்டுக்காலுக்குச் சுகமான இடம் தேடும்போது, தன் மனம் ஆண்டவன் மேல் லயிக்காமல் கால் நோகுமே என்று திரும்பியதற்காக வெட்கம் வந்தது. மெல்லக் கண்திறந்து மாமியைப் பார்த்தாள். மாமி அசைவின்றிச் செபித்துக் கொண்டிருந்தது கலாவிற்கு எரிச்சலைத் தந்தது. கண்களை இறுக மூடி மனத்தை ஒரு நிலைப்படுத்தி ஆண்டவரைக் கண்முன் கொண்டு வர முயல, கொத்தாக அவள் தலைமயிர் பிடித்திழுத்து முகத்தில் ஓங்கி ஒரு குத்து விட்டான் ரவி. கலா ஆடிப்போனாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் மனத்தை ஒருங்கிணைத்து மெல்ல.. மெல்ல ஆண்டவரை மனதுக்குள்.. அப்பாடா வந்து விட்டார். என்ன தேஜஸ் ஆன முகம். முகத்தில் சோகம் நிழலாடியது. உற்றுப் பார்க்க கண்களின் விளிம்பில் கண்ணீர் தெரிந்தது. கலாவின் உடல் புல்லரித்துப்போய் மனம் விம்மியது. தனது நிலை கண்டு கண்ணீர் சிந்தும் ஆண்டவர். உடலில் உஷ்ணம் மேவியது. 'ஆ' வென்று கத்தி ஆட வேண்டும் போலிருந்தது. ஆனால் முடியாது. ஆண்டவரின் இடத்தில் அதற்கு அனுமதியில்லை. மௌனமான பிரார்த்தனைக்குரிய இடமிது. அது எல்லாம் வேறு இடத்தில் தான். கலாவிற்குத் தான் எதையோ இழந்து விட்டது போலொரு உணர்வு. இல்லை நான் இழக்கவில்லை. ஓர் இடத்தில் கிடைக் காததை இன்னுமோர் இடத்தில் பெற்றுக் கொள்கிறேன். இது மனித இயல்புதானே. சமாதானமானாள்.

அன்றொரு நாள் பிள்ளையார் பால் குடிக்கிறார் என்று கேள்விப்பட்டுத் தலை முழுகி வெறும் வயிற்றுடன் (கைப் பிள்ளைக்காரி ஒரு வாய் சாப்பிட்டு விட்டுப் போ என்று மாமி கெஞ்சிக் கேட்டும் அவள் மசியவில்லை) பிள்ளையாருக்குக் கலா பால் கொடுக்க எவருக்கும் குடிக்காத வகையில் அவள் கொடுத்த பாலை மட்டும் அவர் மடக்கு, மடக்கு என்று குடித்ததும் அவள் பக்திப்பரவசமாகிக் கால்கள் நடுங்க உடல் புல்லரித்துப் பச்சை உடம்பில் உஷ்ணம் ஏறியதால் மார்புகள் நனைந்து போனது. திடுக்கிட்ட கலா உடல் உதறி "ஆ" வென்று கதற, ரவி பதறிப் போய் விபூதி எடுத்துத் தலையில் தடவ அமைதி அடைந்தவள், ஏன் வீண் வம்பென்று கழுத்தில் தொங்கிய பிள்ளையார் பென்ரன் கொழுவிய சங்கிலியைக் கழற்றி வைத்ததும் ஞாபகம் வந்து போனது.

எத்தனை, எத்தனை விரதங்கள் பிடித்திருப்பாள். இருந்தும் மகன் பிரசாந்தின் ஆஸ்மாவிற்கு எந்தக் கடவுளும் உதவாத வேளையில்... ஆண்டவரின் அருள் பற்றிக் கூறினாள் மாமி. முதலில் தயங்கினாலும் பின்னர் மகனின் உடல் நிலையை எண்ணி மாமியுடன் பிரார்த்தனைக்குப் போய் வந்தாள் கலா. என்ன அதிசயம்! மகனின் மூச்சுத்திணறல் மட்டுமல்ல போனசாகக் கலாவின் முதுகுவலியும் நின்றுபோனது.

சாத்தான் என்ற பெயரோடு முருகனும், பிள்ளையாரும் காட்போட் பெட்டிக்குள் புகுந்து கொண்டனர். பிள்ளையாருக் கும், முருகனுக்கும் தன்னுடன் அவ்வளவு சரியில்லை என்பதில் முன்பே சந்தேகமிருந்தது அவளுக்கு. அதற்கான காரணம் அவளுக்கு மட்டுமே தெரிந்த ரகசியம். தான் தெரியாமல் செய்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறிற்கு அவர்கள் தன்னைத் தொடர்ந்து கண்டித்துக் கொண்டு வருவது அவளுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை.

பாடசாலைக் காலத்தில் ஏழாம் வகுப்பு படிக்கும் போது, வகுப்புச் சரஸ்வதிப்பூசை வந்தது. கலா சரஸ்வதி கடாற்சம் உள்ளாள் என்று பாடசாலையில் எல்லோரும் நம்பினார்கள். தேவாரம் பாடுவது அவளுக்குப் பிடித்தயான ஒன்று. வகுப்புப் பூசை ஆயிற்றே. கலா மும்முரமானாள். முதல் நாள் இரவே மல்லிகை, சவ்வந்தி, கனகாம்பரம் என்று வீடுவீடாகச் சென்று பிடுங்கி வந்து இரவிரவாக இருந்து மாலை கட்டினாள். மூன்று கிழமைகளுக்கு முன்பே பூசைக்குப் போட என்று வெளுத்து வைத்த வெள்ளைச் சட்டையைப் போட்டு முழுகிய தலையை நுனியில் மட்டும் பின்னி, ஈரம் சொட்டச்சொட்டக் கையில் பூ மாலையுடன் பாடசாலைக்குத் தயாரானபோது அடிவயிற்றை வலித்தது.

கலா திடுக்கிட்டுக் கலண்டரைப் பார்த்தாள். கணக்குப் படி இன்னும் இரண்டு நாட்கள் இருந்தது. "இப்ப வராது" மனதைச் சமாதானப்படுத்தி விட்டுப் படியிறங்கத் துடைகள் இரண்டும் விண்விண் என்றன. தான் கட்டிய பூமாலை, வெளுத்த சட்டை, அவல், சுண்டல் வடை, கத்தி பிசகாமல் பயிற்சி செய்து கொண்ட "ஓம் சக்தி ஓம்" பாடல் எல்லாமே ஒரு கணம் கண் முன்னால் வந்த போது எதுக்கும் இருக்கட்டும் என்று நப்கின் துணையுடன் (அப்போதெல்லாம் பாட்டியின் பழைய சேலை) வெளியேறினாள்.

கட்டிய மாலையைக் கடவுளுக்குச் சாத்தி ஆரவாரப்பட்ட போது மனம் திக்திக்கென்று குற்றம் செய்வதாக ஓர் உணர்வு வந்து மனதைக் குத்தியது. இல்லை. இன்னும் இரண்டு நாட்கள் இருக்கிறது. கண்ணால் கண்ட பின்பும் கோவிலுக்குப் போயிருந் தால் அது பாவம். நான் தான் காணவில்லையே. வந்திருந்தாலும் எனக்குத் தெரியாது என்று சொல்லலாம். யாருக்குச் சொல்வது? கேள்வி எழுந்தது. யாருக்கு? சரஸ்வதிக்குத் தான். சரஸ்வதி அவள் மாலையில் ஜொலித்தாள். இவளும் பெண்தானே. இவளுக்கு வருவதில்லையா? மெதுவாக சரஸ்வதி முகம் நோக்கினாள். சரஸ்வதி மிகவும் சீரியஸாகத் தன் பூஜையில் லயித்து இருந்தாள். முருகன் ஊஹ்ம்.. அவளைக் கண்டு கொள்ளவில்லை. பிள்ளையார் மட்டும் வாய்க்குள் ஒரு நக்கல் சிரிப்புடன் கலாவைப் பார்த்தார். ("உந்தாளுக்கு எங்க பொம்பிளைகளோட பிரச்சனை விளங்கப் போகுது.") சிலுப்பிக் கொண்டாள் கலா.

சாம்பிராணி, சந்தனக் குச்சி, கற்பூரம், அவல், சுண்டல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கலவையாய் எழுந்த மணம் மூக்கைத்துளைக்க மெய்மறந்து "ஓம் சக்தி ஓம்" இழுத்துப் பாடினாள். அடிவயிற்றில் வலியால் உடல் பிசுபிசுத்தது. பக்திப் பரவசம், குற்ற உணர்வு, உடற் சோர்வு ஒன்று கூடி உடல் உதற "ஊ" என்ற ஒலியுடன் ஆடத் தொடங்கினாள். "கலாவிற்குக் கடவுள் கடாற்சம் நிறைய உண்டு." பாடசாலையில் பேசிக்கொண்டார்கள். இருந்து இரண்டு முறையும் கா.போ. த. சாதாரணத்தில் கலாவைப் பழி தீர்த்துக் கொண்டாள் சரஸ்வதி.

அதன் பின்பு படித்த வெள்ளை மாப்பிள்ளை கிடைக்க வேண்டும் என்று ஊராரோடு சேர்ந்து சூரிய உதயத்திற்கு முன் பெழுந்து தலைமுழுகி நடந்து நல்லூர் கோயில் போகத் தொடங் கினாள்... கண்ணீர் வடித்து மனம் உருகி வாயில் தேவாரத்துடன் வேண்டி நின்றவளின் மனதைக் கெடுத்தான், ரவி. முருகனை மறந்து ரவியை அவள் தரிசிக்க, இப்படியாக முருகனையும் பகைத்துக் கொண்டாள் கலா. காதலிக்கும்போது சினிமா வசனம் பேசிய ரவி, இப்போதெல்லாம் கை ஓங்கத்தொடங்கி விட்டான். நிச்சயமாக இது முருகனின் வேலைதான் என்று கந்தசஷ்டி விரதம் பிடித்து நூலும் கட்டிப்பார்த்துவிட்டாள். ரவி மாறுவதாக இல்லை.

மாமி கண்விழித்துக்கொண்டாள். ஒரு மணி நேரப் பிரார்த் தனை இருவரையும் தெளிவுபடுத்தியிருந்தது. எல்லை நிலை வரும் போது ஆண்டவன் எப்போதும் துணை நிற்பான் என்ற பலமான நம்பிக்கை சுகம் தந்தது. கலாவின் வாய் வெடிப்பிலிருந்து சிறிது இரத்தம் கசியத் தொடங்கியது. பிராத்தனைக்காய் அதிகம் வாய் அசைத்துவிட்டாள் போலும். கசிந்த இரத்தத்தைப் புறங்கையால் துடைத்துப் பாவாடையில் தேய்த்தாள். மாமி ரிஷு பெட்டியை எடுத்து ஒளித்துவிட்டாள். கேட்பதற்குக் கலாவிற்குப் பிடிக்க வில்லை. தொடக்கத்தில் காட்டிய அன்பு மாமியிடம் இப்போது இல்லை. புரிந்தது. புரியாதது போலிருந்தாள் கலா. என் செய்வது, புரிந்து ரோஷம் வந்து, என்ன பெரிதாக நடந்து விடப் போகிறது. ஒரு குழந்தையுடன் கனடாக் குளிரில் நாதியற்று நிற்பது தான் உண்மை. இதற்குள் ரோஷம் வேறு.

"நீ பிள்ளை ஒண்டுக்கும் யோசிக்காததை லோயர் மார் இப்பிடித்தான் காசு கறக்கிறதுக்குச் சொல்லுவாங்கள்." பத்தாம் முறைாகச் சொன்னாள் மாமி. எப்படியாவது பிரச்சனை இன்றிக் கலாவை ரவியுடன் சேர்த்துவிட வேண்டும். இல்லாவிட்டால் கலாவின் நிலைதான் எனக்கும். மாமியின் மனம் அடித்துக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்குப் பயமா இருக்கு மாமி"

"எனக்குப் பயமா இருக்கு, எனக்குப் பயமா இருக்கெண்டால், யோசிச்சு இருக்க வேணும். ஆம்பிளைகள் அப்பிடி இப்பிடித்தான் இருப்பீனம், நாங்கள் தான் அனுசரிச்சு நடக்க வேணும். உவங்களுக்கு எங்கட கலாச்சாரம் பண்பாடு எங்கை விளங்கப்போகுது. ஒரு கேஸ் கிடைச்சிட்டுது எண்ட உடன பிரிச்சு வைச்சிடுவாங்கள். உனக்கு இஞ்ச ஆர் இருக்கீனம். ஏதோ கொஞ்ச நாளைக்கு இஞ்ச இருக்கலாம். பிறகு. உனக்கு எல்லாம் ரவிதானே. சின்னப் பிள்ளையோட என்ன செய்யப் போறாய். அவன் எதிர்காலம் பற்றி யோசிச்சுப்பாத்தியே. ஏதோ பெரிய கெட்டித் தனம் செய்திட்ட மாதிரி பொலீசுக்கு அடிச்சுப் போட்டு அல்லாட்டி கொண்டு நிக்கிறாய்" மாமி சிலுப்புடன் நகர்ந்தாள்.

கலாவின் மனம் திக்திக்கென அடிக்கத் தொண்டைக்குள் எதுவோ சிக்கிக் கொண்டது. கேள்விகள் ஏதுமின்றித தன் பக்கம் குற்றப் பார்வைகள் விழத் தொடங்குவது புரிந்தது. கால் விறைக்கும் குளிர், மகன், நிரந்தரமற்ற வேலை, இருப்பது இவ்வளவுதான். இதற்குள் ரோஷம் என்றால் பொருந்தாது. தனக்குள் துவண்டாள் கலா.

இரண்டு பேருக்கும் எழுந்த வாக்குவாதம் கைகலப்பாகி முகத்தில் ஒரு சிறு காயம். எங்களுக்குச் சேர்ந்து இருக்கத்தான் விருப்பம். பிரச்சனை என்று பெரிதாக ஒன்றுமில்லை. கலாவின் வாக்குமூலம் இப்படியிருந்தால் ரவிக்குத் தண்டனை குறையும். ஒரு தமிழ் லோயரின் அட்வைஸ் அது. இரண்டு பேருக்கு எழுந்த கை கலப்பு என்ன ஒரு வார்த்தை. எனக்கு இப்போது பிச்சை வேணும். சாப்பாடு, படுக்கை, உடை, இதற்காக நான் வில்லி வேஷம் போட்டாக வேணும். ரவியைத் தண்டனையிலிருந்து காப்பாற்ற வேண்டும். வேறு வழி...

பத்துநாட்கள் ஆகியும் வாய்க்காயம் இன்னும் ஆறவில்லை. விண்விண்ணென்று வலி வேறு. கோரமா முகத்துடன் கொத்தாக அவள் தலைமயிர் இழுத்து ஓங்கி அறைந்தான் ரவி. பாவாடை நுனியில் வாயை ஒற்றிக் கொண்டாள் கலா. மாமிக்குக் கலாவைப் பார்க்க அருவருப்பாக இருந்தது. தலை இழுத்தால் மயிருடன் சீப்பை வைக்கிறாள். கழற்றிய உடுப்பு நிலத்திலும் கட்டிலிலுமாகச் சுருண்டு போய்க் கிடக்கிறது. ஒண்டுக்குப் போய்விட்டு வரும்போது கூடக்கைகழுவும் சிலமன் இல்லை. இவளுக்கு ரவி அடித்ததும் சரிது. ஒரு கணம் நினைத்த மாமி பின் பாவம். அப்பாவி. சொல்லிக் கொடுத்தால் தெரிந்து கொள்வாள். பாவப்பட்ட ஜன்மத்துக்கு உதவினால் எனக்குப் புண்ணியமாப் போகும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாமி நான் கொஞ்ச நேரம் படுக்கப் போறன்" கலா நகர்ந் தாள். வந்து பத்து நாள்கள் ஆகிவிட்டது. சாப்பாட்டுக்கு காசி பற்றிக் கதையில்லை. சரி, அதுதான் போகட்டும் எண்டு விட்டால் சமைக்கவாவது கொஞ்சம் உதவலாம். எந்த நேரமும் சாப்பிட்டுச் சாப்பிட்டுப் போட்டு ஒரு படுக்கை. மாமி மனதுக்குள் புறுபுறுத்தாள்.

இயலாமை மெல்ல மெல்லத் தன்னை ஆட்கொள்வதை உணர்ந்தாள் கலா. இனிமேலும் தாமதித்து ஆகப்போவது ஒன்று மில்லை. என் இந்த நிலை என்னால் வந்தது. இதற்கு முடிவும் நான் தான் எடுக்கவேண்டும். மகனுடன் தனியே இருக்கும் துணிவு என் னிடம் நிச்சயமாக இல்லை. புரிந்தது. மாமி முகம் சுளிப்பதற்கு முன் வெளியேறி விட வேண்டும்.

தலையணை ஒன்றை எடுத்துத்தொடைக்குள் சொருகி இறுக்கிய படியே மெல்லக்கண் மூடினாள். நிம்மதியாகப் படுத்து எத்தனை நாட்களாகி விட்டது. எதிர்காலம் கேள்விக்குறியாக, சாத்தான் என்று தூக்கிப்போட்ட சாமிகள் வந்து பயம் காட் டினர். சரி தவறு தெரியாது தவித்தாள். சிந்திக்கச் சிந்திக்க மாடி யில் இருந்து குதித்துச் செத்துப்போனோரின் பட்டியல் பயம் தந்தது. அம்.. அம்... கை நீட்டி மகன் அழுதான். நெஞ்சு கனத்தது. ரவியிடம் மன்னிப்புக் கேட்டு... தன்னை அழைத்துப் போகச் சொல்வதைக் தவிர வேறு வழியில்லை.

ரோஷம் காட்டி ரவிக்குத் தண்டனை வாங்கிக் கொடுத் தால் முற்றாகப் பாதிக்கப்படப் போவது தானும் மகனும் தான் என்ற உண்மை உறைத்தது. எப்படியாவது ரவியைத் தண்டனை யில் இருந்து காப்பாற்ற வேண்டும். மீண்டும் வீடு போய் நிம்மதி யாக வாழ வேணும்.

நிம்மதி. அவளுக்குச் சிரிப்பு வந்தது. எது நிம்மதி? அத்திய அவசியத் தேவைகள் பூர்த்தியாகி விட்டால் நிம்மதியான வாழ் வாகிப் போகுமா? இப்போது அவள் இருக்கும் நிலையில் ஆம் என்பதைத் தவிர வேறு வழியில்லை. அன்பு, பாசம், காதல் அற்ற நிலையில் பணத்துக்காக மட்டும் ரவியுடன் வாழ வேண்டிய அவல நிலை அருவருப்பைத் தந்தது. எனக்கும் ஒரு விபச்சாரிக்கும் என்ன வித்தியாசம்? அவள் பணத்துக்காக ஒவ்வொரு நாளும் ஒவ்வொருத்தனுடன் படுக்கையைப் பகிர்ந்து கொள்கிறாள். நான் பணத்துக்காக ஒருத்தனுடன் ஒவ்வொரு நாளும் படுக்கையைப் பகிர்ந்து கொள்ளுகிறேன். அவளுக்காவது பத்துப் பேரில் ஒருத்தன் அன்பாக நடந்து கொள்ளலாம். அவள் உணர்வுகளை மீட்டிப் பார்க்கலாம். ஆனால் எனக்கோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணமான புதிதில் என் உணர்வுகளை மீட்டிப் பார்த்தவன் தான் ரவி. ஆனால் காலப்போக்கில் என்னைப் பிடிக்கவில்லை. அவன் வேறு பெண்களுடன் எல்லை மீறுவதும் அவளுக்குத் தெரியும். உண்மையைக் கூறப்போனால் அவளுக்கும் அவனைப் பிடிப்பதில்லை. எங்காவது போய்ச் சந்தோஷமாக இருந்துவிட்டு வந்தான் என்றால் தான் நிம்மதியாக இருக்கலாம் என்று நம்பினாள். ஆனால் அதுவும் கிடைக்கவில்லை. அவளைத் தினம்தினம் புழுதியில் போட்டுப் புரட்டி எடுக்கின்றான். எடுத் ததற்கெல்லாம் கை ஓங்குகின்றான். கேட்டால் அதற்கும் கை ஓங்கல்தான். எதிர்த்து நிற்க என்னால் முடியுமா? தனியாகக் கனடாவில் நான் என்ன செய்து விடப்போகிறேன்? எங்கு போனாலும் ரவி முன்னால், நான் பின்னால் ஒரு நாயைப் போல. இதுதான் என் வாழ்க்கை. ரவி தான் எனக்குப் பலம்... பலவீனம் எல்லாம்.

தமிழ் லோயர் கூறியது போல், தனக்கும் ரவிக்கும் கைகலப்பு ஏற்பட்டதாகக் கூறி முடிவெடுத்துத் தண்டனையிலிருந்து ரவியைக் காத்துக்கொண்டாள். இப்போதெல்லாம் ரவி அவளுடன் அவ்வள வாக முகம் கொடுத்துக் கதைப்பதில்லை. கலாவிற்கு வேதனை யுடன் கூடிய மகிழ்ச்சி அது. தனது கடமைகளைச் செய்துவிட்டு அவளும் ஒதுங்கத்தொடங்கினாள். இனிமேல் தன்னை அதிகம் சிரமத்திற்கு உள்ளாக்க மாட்டான். மகனுக்காக இருவரும் ஒரே கூரைக்குக் கீழ் இருந்துவிட்டுப் போவோம். கனவுகளைத் தூக்கிப் போட்டுவிட்டு... வாழப் பழகிக் கொண்டாள்.

அன்று வேலைக்குக் கிளம்பிக்கொண்டிருந்த ரவி சாப்பிடு வதற்காக மேசை மேல் இடியாப்பத்தை வைத்துவிட்டுக் கறிக் கிண்ணத்துடன் வந்த அவள், அறைக்குள் சிணுங்கும் மகன் குரல் கேட்டுக் கிண்ணத்தை அவசரமாக மேசை மேல் வைத்து விட்டுத் திரும்பியபோது, தலைமயிரைக் கொத்தாகப் பிடித்திழுத்து முகத்தில் ஒரு குத்துவிட்டான் ரவி. சில நிமிடங்கள் நட்சத் திரங்கள் சுற்றத் தலையைப் பிடித்தவள் வாயிருந்து இரத்தம் வடிந்தது. ரவி சாப்பிடாமல் வேலைக்குச் சென்றுவிட, காயத்திற்கு ஐஸ் வைத்து ஒற்றியபடி நிலத்தில் சிந்தியிருந்த கறியைத் துடைக் கத் தொடங்கினாள் கலா... பக்கத்தில் ஒட்டிக் கொண்டு அவள் மகன்....

✦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதலினால் நாம்...

மெல்லிய தூவானம் மனதுக்கு இதம் தந்தது. தலையை வகிடு எடுத்தாற் போல் கறுப்பு. இரு பக்கமும் விலக, பெருஞ் சாலை வெளிச்சமானது. இப்போது மெல்லிய காற்று. நான் உணர, கைகளில் goose bumbs... தடவிக் கொள்கிறேன்.

அந்த ஜோடிப் புறாக்கள் மீண்டும் ஒருமுறை வட்ட மடித்து விட்டு இரும்புக்கம்பியில் வந்து அமர்கின்றன. பெண் புறாவிற்குக் குளிருகிறதோ... ஆணின் இறக்கைக்குள் அது புகுந்த தால் என்னுள் கேள்வி. ஆண் புறா ஆதரவாகத் தனது ஜோடியை அணைத்துக் கொண்டது. எனக்குள் ஆர்வம் கூடியது. கண்களை அகற்றாது புறாக்களின்மேல் வைக்கின்றேன். இப்போது அலகு களைப் பிணைத்துக்கொள்கின்றன. நான் சற்றே நிமிர்ந்து இருக்கின்றேன். பெண் புறா கண்களைச் செருகிக்கொண்டது. 'ஓ! இது காதல் முத்தமா? அடுத்த கேள்வி எனக்குள். புறாக் களின் அலகில் உணர்வு இருக்குமா?

மனிதனின் இதழ்கள் முட்டும் போது எழும் சுகம் அந்தக் கடினமான அலகிற்கு உண்டா?

முத்தம் ஈரம் தருமோ....? ஐயோ! அறிய ஆசையாக இருக்கு. யாரிடம் கேட்பது?

செருப்படி விழும். சிரித்துக் கொள்கிறேன்.

புறாக்கள் மீண்டும் பறந்துவிட எனது பார்வையும் திரும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. "You are in the right place". தமது கல்லூரியின் சிறப்பை screen saver இல் எழுதி நகர்த்திக்கொண்டு இருந்தார்கள். Libraryக்குப் போனால் புறாக்கள் பற்றிப்புத்தகம் கிடைக்கும். 'ஐயோ விசரி இருக்கிற வேலை காணாதெண்டு புதுசா ஒண்டா....' என்னை நானே கடிந்து கொண்டேன். ஆனால் புறாக்களின் முத்தம் பற்றி அறிய ஆவலாக இருந்தது. என்ன செய்வது. ம்.... Internet. களவு செய்ய எண்ணிவிட்டேன்.

பரவாயில்லை... இதுதான் கடைசித்தரம். இப்படிப் பல கடைசித் தரம் வந்து போய்விட்டது.

Mouse ஐ மெதுவாக எடுத்து Netscape இல் Click பண்ணுகிறேன். எத்தனை முறை Warn பண்ணிவிட்டார்கள். Study Time இல் Internet உபயோகிக்கக் கூடாதென்று. இன்று தான் கடைசி. மனதிற்கு ஆறுதல் சொல்லிக் கொண்டு pigeons, type பண்ணுகிறேன்.

"ஐயோ அக்கா ஒண்டையும் காணேலை. என்ர மூண்டு நாள் வேலை... எல்லாம் அழிஞ்சிட்டுது" மாது தோள்களைச் சுரண்டினாள் அழாத குறையாக.

'ச்சீ! கையை எடும். இப்படித் தோளைச் சுரண்டாதையும்' வேறு யாராக இருந்தாலும் எரிந்து விழுந்திருப்பேன். ஆனால் முடியவில்லை. மாதுவின் முகம் பார்த்துச் சீற என்னால் முடிய வில்லை.

"என்ன?" என்றேன்.

"அக்கா Please எனக்கு help பண்ணுங்கோ. என்ர project அழிஞ்சு போச்சு" விசும்பினாள்.

"என்ன துப்பல் போட்டே அழிச்சனீர்" வாய்வரை வந்ததை அடக்கிக் கொண்டேன்.

என்ர கடி Jokes ஒரு நாளும் அவளுக்குப் புரிந்ததில்லை. எனக்குச் சிரிப்பாக வந்தது. இவளுக்கு ஏனிந்தப்பதட்டம். ஆர்வம் நிறையவே இருக்கிறது. ஒரு நிமிடம் வீணடிக்காமல் படிப்பு, படிப்பு என்று படிக்கிறாள். ஆனால் எப்போதும் எதிலும் ஒரு பதட்டம். பயம்.

நிச்சயமாக அழிந்திருக்காது. பதட்டம். பொறுமையாக இருந்து தேடும் திடம் அவளிடம் இப்போது இல்லை. பதறுகிறாள். நான் போக வேண்டும். உதவி செய்ய வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறாள்.

என்னை விட மூன்று வயது தான் சின்னவள். அக்கா அக்கா என்று என்னைக் கிழவியாக்கும்போது எனக்குக் கோபம் வரும். சொல்லிப் பார்த்தேன். கேட்பதாய் இல்லை. விட்டுவிட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை எப்போதும் ஓர் அறிவு ஜீவி போல் உபயோகப்படுத்து கின்றாள். எனக்கும் பிடித்திருந்தது.

"சரி வாரும்"

போனோம். தேடினேன். அழியவில்லை. இடம் மாற்றப்பட் டிருந்தது. எனக்குச் சிரிப்பு வந்தது. சிரிக்கவில்லை. பாவம் காயப் படுவாள். தான் ஒன்றுக்கும் லாயக்கில்லாதவள் என்பாள். உங் களைப் போல் கெட்டித்தனம் எனக்கில்லை என்பாள்.

"ஒரு சின்ன break எடுப்பமா?" கேட்டேன்.

படித்து முடித்த களைப்புப்போல், மாது தயங்கினாள். "Project இண்டைக்குக் குடுக்க வேணும்" என்றாள்.

பிறகு சம்மதித்தாள்.

"ஏதாவது வாங்கிச் சாப்பிடுவமா?" என்றேன் வழமை போல்.

"ஏன் காசை இப்பிடி வீணாக்கிறீங்கள்?" கடிந்தவள், தான் புட்டும் இறால் பொரியலும் எனக்குச் சேர்த்துக் கொண்டு வந் திருப்பதாகக் கூறினாள். எனக்கு வாயில் நீர் சுரந்தது.

"எப்ப செய்தனீர்?" நான் வியந்தேன்.

"காலமை. அவருக்கு நல்ல விருப்பம்." அழுத்திச் சொன் னாள், ஏனென்று புரியவில்லை.

"ஏன், உமக்கு விருப்பமில்லையே இறால் பொரியல்?" என் நாக்கில் இறால் ருசித்தது.

"என்னிலும் பார்க்க அவருக்கு நல்ல விருப்பம்" என்று மென்று விழுங்கினாள்.

இரண்டு டொலரைப் போட்டு இரண்டு coke எடுத்து அவள் முன்னால் ஒன்றைத்தள்ளினேன்.

"அக்கா நீங்கள் ஆகத்தான் காசு சிலவழிக்கிறீங்கள். கடைக்குப் போனால் மூண்டு டொலருக்கு பன்னிரெண்டு can வாங்கலாம் தெரியுமே"

"ம்... இனிக் காவிக் கொண்டு வாருமன்" என்றேன் திமிராக.

"உங்களிட்டக் காசு கூடீற்றுது அதுதான் இப்பிடிச் சிலவழிக்கிறீங்கள்." கோபித்துக் கொண்டாள். முகம் சிறிது சிவந்தது, அழகாக இருந்தாள்.

"ராத்திரிப் பிரவீண் சரியா இருமினவன். இப்ப எப்பிடி இருக்கோ தெரியேலை" மாதுவின் முகம் சுருங்கிப் போனது. சிறிது நேரம் மௌனமாக வேறு உலகிற்கு அவள் போய்விட்டது போல் எனக்குப்பட்டது. பொறுத்திருந்தேன். என் முகம் பார்த்தாள். மெல்லிய ஒரு புன்னகை செய்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்ப அக்கா இந்தக் course முடிய உங்களுக்கு வேலையில promotion கிடைக்குமே" ஆவலாகக் கேட்டாள்.

"ம்..." என்றேன், என் படிப்புப் பற்றிக் கதைக்கும் சுவாரசியம் இன்றி.

"உங்கட படிப்புச் சரியான கஷ்டமேக்கா?"

அவளை உற்றுப் பார்த்தேன்.

"ஏன் நீரும் படிக்கப் போறீரே?" கேட்டவுடன் சிரித்தாள்.

"உங்களை மாதிரி நான் கெட்டிக்காரி இல்லையக்கா. அது சரியான கஷ்டம் எனக்குத் தெரியும்".

நான் சிரித்தேன்.

"மாது! நீர் கனடாவுக்கு வந்து எவ்வளவு காலம்?"

மாதுவைத் தெரியும். இரண்டு மூன்று மாதத்திற்கு முன்பு இந்தக் Collegeஇற்கு வந்து சேர்ந்தபோது தமிழ் என்பதால் ஒட்டிக் கொண்டோம். ஆனால் அவள் தனிப்பட்ட விபரம் அதிகம் தெரியாது. திருமணமானவள். பிரவீண் என்று ஒரு மகன். நான் கேட்கவில்லை. அவள் புலம்பும் போது காதில் விழுந்தவை. என்னைப்பற்றி அவள் கேட்கவில்லை. அதனால் நானும் சொல்ல வில்லை. ஒருவேளை தெரிந்தால், விலகிக் கொள்ளலாம். தான் ஒரு நல்ல தமிழச்சி என்று நிரூபிக்க.

இல்லாவிட்டால் பரிதாபமாகப் பார்க்கலாம், இதுதான் நிறைவான வாழ்க்கை என்று தனக்குத் தெரிந்தது போல. ஆனால் எனக்கு ஏனோ மாது இந்த இரண்டு வகையும் இல்லை என்றே பட்டது.

என்னிடம் எத்தனை பவுண் நகை இருக்கென்று இந்த இரண்டு மாதங்களில் அவள் கேட்டது இல்லை.

வீட்டில் இருக்கும் தளபாடம் பற்றி அவள் அக்கறைப் படவில்லை. என் கார் ஓட்டம் கண்டு வியந்தாள். நான் படிக் காமல் நேரம் வீணாக்க, உரிமையோடு கடிந்தாள். எனக்கு மாதுவை நிறையவே பிடித்திருந்தது.

"எட்டு வருஷம் ஆகுது அக்கா" நான் முகம் சுளித்தேன். அவள் சிரித்தாள்.

"அப்ப, இவ்வளவு நாளும் என்ன செய்தனீர்?"

என் கேள்வியால் தாக்கப்பட்டவள் போல் தடுமாறி விட்டு, "பிள்ளை வளரட்டும் எண்டு வீட்டிலை தான் இருந்தான். இவருக்குப் பிரவீணை day care இல விடுறது விருப்ப மில்லை"

என் கண்களின் ஊடுருவல் தாங்காது முகம் தாழ்த்தினாள். என் அடிவயிறு கலங்கியது. 'பெண்ணே! அப்போ உன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையை day care இல் விட்டுவிட்டு வேலைக்குப் போக உனக்குச் சம்மதம் தானே' எனக்குள் படபடப்பு.

இவள் நானா? இவள் என் பிம்பமா? பத்து வருடங்களுக்கு முன்பு நான் சொன்ன அதே பதில்.

வேலைக்குப் போய் வரும் பல பெண்களைப் பார்த்து எழும் ஏக்கம். ஆணை எதிர்க்கும் துணிவின்மை. முடிவில் என் கோழைத் தனம் வெளியில் காட்ட விரும்பாது, எவருக்கும் இல்லாத குழந்தைப் பாசம் எனக்கு மட்டும் என்பது போலொரு நடிப்பு.

'மாது நீயும் நடிக்கிறாயா? கேட்டுப் பார்ப்போமா? வேண்டாம் நாகரீகமில்லை.'

என் மனம் நொந்தது. இங்கே எத்தனை நான்கள் இருக்கிறார்கள்.

"கடவுளே!" சொல்லிவிட்டுச் சிரித்தேன். எப்போதிலிருந்து இந்தக் கடவுள்.

மாது என்னை வினோதமாகப் பார்த்தாள்.

"போகலாமா?" என்றாள்.

"நீர் போம். நான் பிறகு வாறன்."

மாது மறைந்தாள். நான் கேள்விக்குறியானேன். இன்னும் மூன்று நாட்களில் எனக்கு Exam. Project உம் முடித்தபாடில்லை. ஆனால் நான் கவலைப்படவில்லை. எனக்கு என்னைத் தெரியும். கடைசி இரண்டு நாட்களும் கண் விழித்துப் படித்து, தலையிடி யுடன் மருந்துபோட்டுப் பரீட்சை எழுதி A+ வாங்கும் ரகம் நான்.

ஏன் ஓர் ஒழுங்கில்லாமல் இருக்கிறேன். எது ஒழுங்கு? ஏன் என்னை நானே ஒழுங்கில்லை என்கிறேன்.

கை நிறையக் காசு. இருக்க ஒரு வீடு. ஓட்டுவதற்கு ஒரு கார். படு சுட்டியான இரண்டு குழந்தைகள். வேறு என்ன வேணும். தலைமுழுகி, சுமங்கலிவிரதம் பிடித்து, மூன்று வேளையும் வீட்டுச் சமையல் சாப்பிட்டு, சனிக்கிழமை ஜோடியாகத் தமிழ்ப் படம் போய்ப் பார்த்து இதுதான் சந்தோஷமா? அப்படி ஒரு காலம் நான் இருந்தது நினைவிற்கு வர சிரிப்பு வந்தது. நான் அப்போது சந்தோஷமாகவா இருந்தேன். இல்லை. இதுதான் வாழ்க்கையோ என்ற பயத்தில் நடித்தேன். ஐயோ எனக்கு இதெல்லாம் தாங்காது என்றபோது விலகிக்கொண்டேன். இப்போது சந்தோஷமாக இருக்கிறேன்.

'ஏய் ஏய் உனக்குக் கவலையில்லை. உன் மனதுக்குள் ஏக்கமில்லை. இப்போதும் நீ நடிக்கிறாய்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் தடுமாறிப் போனேன். நான் சந்தோஷமாக இல்லையா? சுதந்திரப்பறவையாய் சுத்தித் திரிகிறேன். விதம் விதமாய் உடுத்துகிறேன். விரும்பினால் மட்டும் சமைப்பது. இல் லாவிட்டால் வெளியில். ஏனென்று மிரட்ட ஒருத்தரும் இல்லை. (இல்லா விடடால் கேட்பதற்கு நாதியற்றுப் போய் விட்டேனா?) நான் சந்தோஷமாகத்தானே இருக்கிறேன்.

இருக்கிறேனா?

கேள்விக்குறியைப் பெரிதாக்கி உள்ளே செலுத்துகிறேன். சிறிது தெளிவு வரத் தடுமாற்றத்துடன் கூடிய நெஞ்சுப் பிசைவு.

அன்று அந்த ஜோடியை எதற்காகக் கண்வெட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தேன். அவர்களை எதற்காக அப்படி ஆராய வேண்டும்.

அவள் : சுருக்கு வைத்த கறுப்புப் பாவாடை. கால்களில் வெள்ளை socks. கறுப்பு shoe (சின்னதாக ஒரு குதி அதற்கு) பாவாடை, socks இற்கு இடையே கறுப்பாக வழிக்கப்படாத பொருக்கு விழுந்த கால்கள். சிவப்பு நிறத்தில் பெரிய பட்டன் வைத்த blouse. கவனிக்கப்படாத தலைமயிர் விரிக்கப்பட்டிருந்தது. நெத்தியில் குங்குமம். கழுத்தில் தாலிக்கொடி. கைகளில் இரு சோடிக் காப்பு.

அவன்: வெட்டப்படாத தலைமுடி. ஒரு பக்கம் சரிந்து படுத்ததால் சாய்ந்த கோபுரம் போல் காட்சி தந்தது. சிறிது மினுங்கல் கூடிய கறுப்பு நிறப் pants, வெள்ளை நிறத்தில் கோடு போட்ட shirt. நெற்றியில் விபூதி. கழுத்தில் தடித்த சங்கிலி. வெள்ளை sports shoe.

இவர்களை எங்கோ ஒரு கிராமத்திலிருந்து நேராகக் கனடா விற்குக் கொண்டு வந்து இறக்கியிருப்பது போலப்பட்டது எனக்கு.

ஏய் ஏய்… இது உன்ர நக்கல் குணம் தானே. மற்றவர்களின் தோற்றம் பார்த்து நக்கலடித்து என்ன சுகம் கண்டாய். எங்கே… எங்கே… அந்த ஜோடியின் முகத்தில் தெரியும் பூரிப்பை உன் முகத்தில் காட்டு பார்க்கலாம். உன்னால் முடியாது. அவர்கள் சந்தோஷமான ஜோடி. அவர்கள் சந்தோஷம் உனக்கு எரிச்சலைத் தருகிறது. உனக்குப்பொறாமை. அதுதான் அவர்களில் குறை கண்டு பிடித்து வக்கிரமாகத் திருப்திப்பட்டுக் கொள்கிறாய். அவள் சுமங்கலி விரதம் பிடித்து, தாலியைக் கண்ணில் ஒற்றிக் கொண் டால் உனக்கென்ன. அவளுக்கு உலகம் தெரியாது இருக்கலாம். அவள் உலகம் குறுகியது. அதற்குள் அவள் சந்தோஷம்.

உன்னைப்போல படிக்கவில்லை. வீடு, கார் என்ற வசதி யில்லை. ஆனால் உன்னிடம் இல்லாத ஒன்று. சந்தோஷம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களிடம் நிறையவே இருக்கிறது. வெளியாடைக்கே பொருத்த மாகக் கவனமாக உள்ளாடை தேர்ந்தெடுக்கும் நீ உன் துணையைத் தேடுவதில் தவறிவிட்டாய் என்ற அங்கலாய்ப்பு. அதுதான் மற்றவர் களில் நீ தேடும் குறைகள். பரவாயில்லை. ஒன்றாக இருந்து அழுந்திச் சாகாமல், நீ படித்திருப்பதால் அவனைத் தூக்கி எறிந்து விட்டுக் குழந்தைகளுடன் வசதியாக இருக்கிறாய்.

'பெண்கள் சிந்திக்கக்கூடாது' கதை நேரம் பாலுமகேந் திராவின் வரிகள் நினைவிற்கு வந்தன.

நான் சிந்திக்கிறேன். நிறையவே சிந்திக்கிறேன். எப்போதும் ஏனென்ற கேள்வி எனக்குள். சிந்தித்துச் சிந்தித்துக் கேள்வி எழுப்பிப் பதில் கிடைக்காதபோது கோபம் வருகிறது. அவ நம்பிக்கை வருகிறது.

"உம்மோட கதைக்கேலாது. உமக்கு விசர்" பலர் சலிப் படைந்து விலகிக்கொண்டு விட்டார்கள். ஏனென்றபோது 'உமக்கு விசர். அடங்காப்பிடாரி, நீயும் ஒரு பெண்ணா?' பாணியில் வசனங்கள்.

முகத்தில் அறை விழுந்தது. அறை விழ, அறை விழ ஏன் என்ற கேள்வி கூடிக்கொண்டுபோனதே தவிரக் குறையவில்லை. பெண் சிந்திக்கக்கூடாது என்பதின் கருத்து மட்டும் புரிந்தது. ஐயோ நான் ஏன் சிந்திக்கும் பெண்ணாகிப் போனேன். விரதம் பிடித்து, வகை வகையாய்ச் சமைத்து, சீலை நகை வாங்கி, அவருடன் படத்துக்குப் போய்... எவ்வளவு சுகம்... எவ்வளவு சந்தோஷம்.

பெண் சிந்தித்தால் கஷ்டப்படுவாள். நான் கஷ்டப் படுகிறேன். உடலால் இல்லாவிட்டாலும் மனதால் நிறையவே கஷ்டப்படுகிறேன். நான் சந்தோஷமாக இல்லை... நான் சந்தோஷ மாக இல்லை.

சந்தோஷம் என்று நீ கூறியது எல்லாம் உனக்கும் இருந்தது தானே? அப்ப எதற்காக எல்லாவற்றையும் தூக்கி எறிந்தாய்?

குழப்பம்... புரியவில்லை... எது சந்தோஷம்? எனக்கு எது இப்போது இல்லை? எதற்காக இந்த ஏக்கம்? செக்ஸ். புரிந்தது...

தனியாக வந்து மூன்று வருடங்கள் ஆகிவிட்டன. ஐயோ பாவம் என்று இரங்கிவிடாதீர்கள்.

பல்லிளிக்கும் பரதேசிகளை எனக்குப் பிடிப்பதில்லை. இல்லை, இல்லை... இனிமேல் ஆண் வர்க்கம்மீதே எனது பார்வை விழுமா என்ற சந்தேகம் எனக்குள். அந்த அளவுக்குப்பட்டு விட்டேன். ஆணின் நெருக்கம் உடல் சிலிர்க்க வைப்பதற்குப் பதில் அருவருக்கத் தொடங்கிவிட்டது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உன்ர மனுஷன் அப்பிடி எண்டதுக்காக" advice வேண்டாம் please விட்டு விடுங்கள். உண்மையிலேயே எனக்குப் பிடிக்கவில்லை. இரண்டாம் முறை முயன்று பார்க்க பயப்படு கிறேனோ... முயன்று பார்ப்பதா? ச்சீ... வேண்டவே வேண்டாம்.

மாதுவைக் காணவில்லை. வரவில்லை போலும். phone number உம் என்னிடம் இல்லை. விட்டுவிட்டேன். வரும்போது வரட்டும். ஆனால் மனம் ஏனோ தவித்தது. அவளின் சிரித்த முகம் அடிக்கடி வந்துபோனது. மனதை ஒரு நிலைப்படுத்திப் படிக்கத் தொடங்கினேன்.

படிப்பது பிடிக்காது. ஆனால் படிக்கத் தொடங்கக் கவனம் முழுவதும் ஒன்றாகி ஆர்வம் வந்தது. மூன்று நாட்கள் ஆகி விட்டது. நல்ல பிள்ளையாகிப் படிப்பதில் கவனம் செலுத்தினேன். கொஞ்சம் திட்டமும் போட்டேன். எத்தனை நாளைக்கு. அதையும் பார்ப்போமே.

நான்காம் நாள் மாது வந்தாள். முகம் வாடியிருந்தது. தனக்குக் காய்ச்சல் என்றாள்.

Phone number வாங்கி வைக்காததற்கு வருந்தினாள். மாற்றிக் கொண்டோம்.

சாப்பிடும் போது மெதுவாக மென்றாள். கவனித்தேன். கை கழுவும் போது சட்டைக் கையை உயர்த்த பெரிய தழும்பு தெரிந்தது. அவசரமாக மறைத்தாள். கவனித்தேன். காதடியிலும் பெரிய தழும்பு தெரிந்தது. மாதுவின் முகம் பார்த்தேன். தாழ்த்திக் கொண்டாள்.

இவள், இன்னுமொரு நான். பத்து வருடங்கள் முன்பிருந்த நான். தெளிவாகியது. இவளுக்கு இன்னும் பத்து வருடங்கள் இருக்கிறது. இப்போதைய நானாக. வேண்டாம். பாவம். இரக்கம் வந்தது.

பத்து வருடங்கள் மிகமிகக் கூடிவிட்டது. குறைந்தது ஒரு வருடத்திலாவது இவளை நானாக்க வேண்டும். முடியுமா?

நாலு மணிக்கு எழும்பி அவருக்குப் புட்டும் இறால் பொரியலும் பிடிக்கும் என்று செய்து கொடுப்பவள் ஒரு வருடத்தில் நானாகுவாளா? கேட்டு விடுவோமா? நாகரீகம் தடுத்தது.

இரண்டு மாதச் சினேகிதம் ஒன்றும் நெருங்கிய நண்பி இல்லையே. பேசாமல் விட்டு விடுவோமா.

ராட்சசி, என்னை நானே திட்டிக் கொண்டேன். துரோகி. கண்ணுக்கு முன்னே பாவம் நடக்கிறது, கண்டும் காணாமல்... எனக்குத் தெரியாதா பத்து வருடத்திற்கு முன்பிருந்த என்னை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது washroomஇல தடுக்கி விழுந்து விட்டேன். அதால கை, காது, தாடை எல்லா இடமும் அடி. பொருந்தாத பொய் வரும். மாது பொய் கூறுவது எனக்குப் பிடிக்கவில்லை. நான் ராட்சசி யில்லை. நண்பியாக ஏற்றுக் கொண்டால் அவளே சொல்லட்டும்.

படிப்பு தொடர்ந்தது. உடலில் அங்கும் இங்கும் காயங் களுடன் மௌனமாகப் படிப்பைத் தொடர்ந்தாள் மாது. நானும் புறா ஆராய்ச்சி முடிந்து, பக்கத்திலிருந்து என்னைப் பார்த்து sight அடிக்கும் பாகிஸ்தானிய இளைஞனுடன் கொஞ்சம் தனகிப் பார்த்தேன். மாது கவனித்தால் கோபிப்பாள்.

"அக்கா ஆனாலும் நீங்கள் ஆகத்தான் மோசம்" என்பாள். தவறாக எண்ண அவளுக்குத் தெரியவில்லை. எனக்கு மாதுவைப் பிடித்து விட்டது.

ஒரு நாள் இரவு படிக்கலாம் என்று நினைத்தபோது தொலைபேசி அழைத்தது. மறுமுனையில் மாது விக்கி விக்கி அழுதாள். Display இல் பார்த்தேன். Pay phone என்று தெரிந்தது.

நிற்கும் இடத்தை மட்டும் கேட்டுவிட்டுப் போய் அவளையும் ஒட்டிக்கொண்டு நின்ற மகனையும் வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு வந்தேன். கண்கள் வீங்கியிருந்தது. வாய் உடைந்து சிவந்திருந்தது. குழந்தை மிரண்டுபோயிருந்தது. எனக்குள் பல flash back. பிரவீணை சாப்பிட வைத்து என் மகனுடன் படுக்க வைத்தேன். மாதுவின் முகத்திற்கு ice வைத்தபடியே கேட்டேன் police ஐ அழைக்கவா என்று. வேண்டாம் என்றாள். நான் மௌனமானேன்.

மாது என் கை பற்றினாள். "அக்கா என்னால இனிமேலும் அவரோட இருக்கேலாது. என்னை உங்களோட கொஞ்ச நாளைக்கு இருக்க விடுங்கோ. எப்பிடியும் கெதியா ஒரு வேலை எடுத்துப் போட்டு, ஒரு இடம் பார்த்துக் கொண்டு போயிடுவேன்."

மாதுவிற்குப் பத்து வருடங்கள் தேவைப்படவில்லை. பெருமையாக இருந்தது. என் கோழைத்தனம் புரிந்தது.

சும்மா கிடந்த ஒரு அறை மாதுவிற்கானது. இருந்தும், ஒவ்வொரு நாளும் மனம் மாறிப் போய்விடுவாள். நினைத்துக் கொண்டேன்.

மாது அசையவில்லை. ஒரு நாள் அவன் வீட்டில் இல்லாத நேரம் பார்த்துப் பொருட்கள் எடுத்து வந்தோம். அறிந்தபோது வீடு வரை வந்து கெட்ட வார்த்தையில் பேசிவிட்டுப் போனான்.

"படிப்பை முடி. பிறகு வேலை தேடலாம்." என் கட்டளைக் குப் பணிந்தாள்.

வீட்டு வேலைகளை இழுத்துப் போட்டுக்கொண்டு செய்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பிள்ளைகள் அவளை விநோதமாகப் பார்த்தன.

அம்மா படு கள்ளி, புரிந்து கொண்டிருக்கும். புட்டும் இறால் பொரியலும் அடிக்கடி கிடைத்தது. அடிபட்டுச் சாப்பிட்டார்கள். எனக்குள் சிறிது குற்ற உணர்வு ஏற்பட்டது.

எல்லோரும் ஒன்றாகக் குதூகலமாகச் சந்தோஷித்திருந்தோம். இழந்துவிட்ட எதுவோ ஒன்று கிடைத்து விட்ட சந்தோஷம் எனக்குள். ஆழமாகச் சிந்தித்துப் பார்க்க நான் விரும்பமில்லை. புரிந்து விடுமோ என்று பயப்பட்டேனோ.

மழையில் நனைந்து காய்ச்சலை வரவழைத்துக் கொண்ட போது உரிமையுடன் கடிந்து கொண்டாள் மாது. நெற்றிக்குத் தைலம் தடவி, குடிப்பதற்குக் கைச்சலாக எதுவோ காய்ச்சித் தந்தாள்.

பக்கத்திலிருந்து மாய்ந்து மாய்ந்து கவனித்தது என்னை என்னவோ செய்தது.

படிப்பு முடியப் பதவி உயர்வோடு மீண்டும் வேலை தொடர்ந்தேன். மாதுவும் ஒரு வேலை தேடிக் கொண்டாள். ஒரு குடும்பம் உருவானது. எனக்குள் சின்னச்சின்ன மாற்றங்கள். விடை தெரியாது தடுமாறினேன். மாது வேலையால் வரப் பிந்தினால் தவித்தேன். நான் தடுக்கி விழ, அவள் பதறிப் போவது தெரிந்தது.

இருவரும் முகம் பார்த்துக் கதைப்பதைத் தவிர்த்துக் கொண்டோம்.

தற்செயலாக மோதிக் கொண்டால் முகம் சிவக்க sorry சொன்னோம். மாதுவின் காது மடலின் சிவப்புக் கண்டு நான் கிறங்கிப் போனேன். அதிகம் பேச்சின்றி பல நாட்கள் கடந்தன... "Pokemon" Movie பார்க்க வேண்டும். பிள்ளைகள் அடம்பிடித்தார்கள். அழைத்துச் சென்றோம். அருகருகில் இருந்து படம் பார்க்க உணர்வுகளின் உத்வேகம் கூடிற்று.

நான் அவள் முகம் பார்க்க என் தோளில் சாய்ந்து கொண்டாள். எனக்குள் தெளிவு பிறந்தது. இனிமேல் பதிலின்றித் தடுமாறப் போவதில்லை. நான் என் கைகளை அவள் கையுடன் பிணைத்துக் கொண்டேன்.

"சாரு..." முதல் முதலாய் என்னைப் பெயர் சொல்லி அழைத்தாள் மாது.

✦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜகுமாரனும் நானும்...

இரவு அடங்கிப் போகும் நேரம். காற்றின் ஒலி மட்டும் கேட்டது. மல்லிகை மணந்தால் எப்படி இருக்கும்.

நான் கிறங்கினேன். ஒரு, இரு வாகன ஒலிமட்டும் கேட்ட போது எனக்குக் கோபம் வந்தது. குழம்பொலி எங்கே, எனக்கு வேண்டியது அதுதான்.

தனிமை. தனிமை வதைபடுகிறேன். எங்கே என் ராஜ குமாரன். இன்று வரமாட்டானோ? மனம் தவித்தது. வருவான். நிச்சயம் வருவான். அவனில் எனக்கு நம்பிக்கை இருந்தது. நேரம் போகப் போகக் குழப்பத்துடன் கோபம் வந்தது. வருவான். அவன் வருவான். நம்பிக்கையுடன் உடைகளைத் தளர்த்தி விட்டேன். கண்மூடிச் சிறிது சோகித்து, முழித்தபோது அவன் நின்று கொண்டிருந்தான். என் ராஜகுமாரன். அதே கம்பீரம் கலந்த குறும்புச் சிரிப்பு. நான் சிரிக்கவில்லை. முகத்தை உம்மென்று தூக்கி வைத்துக் கொண்டேன்... "கோபமா" நான் பேசவில்லை. "என் கண்மணிக்கு என் மேல் கோபமா?" குழைந்தான். என் வயிற்றில் புளி கரைந்தது. இருந்தும் நான் மசியவில்லை. "என் கண்ணம்மா" நெற்றியில் முத்தமிட்டான். நான் கரைந்து போனேன். "ம்.. நேற்று ஏன் வரவில்லை" கேட்டேன். தலை குனிந்தான். என் கோபம் தலைக்கு ஏறியது. "அப்படியென்றால் நீ வேறு யாரோடாவது." நான் முடிக்கவில்லை. "ஐயோ என்ன இது" தன் இரும்புக் கரம் கொண்டு என் இதழ் பொத்தினான். எனக்கு வலித்தது. சுகமாகவும் இருந்தது. நான் அவன் விரல் நனைத்தேன். புன்னகைத்தான். மீண்டும் கேட்டேன். "நேற்று ஏன் வரவில்லை?" அவன் கண்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலங்கிற்று. இறுக்கமாகத் தன் இதழ் கடித்தான். நான் துடி துடித்துப் போனேன். "மன்னித்துவிடு. நான் கேட்கவில்லை. நீ காரணம் சொல்ல வேண்டாம்" "நான் வந்திருந்தேன். ஆனால்..." அவன் நா பிரண்டது. "வந்திருந்தாயா? எப்போது?" நான் குழம்பிப் போனேன். "வந்திருந்தால் ஏன் என்னிடம் நீ பேசவில்லை.?"

நான் வந்திருந்தேன்... ஆனால் நீ... பல் கடித்துக் கண்ணீர் விட்டபடியிருந்தாய். என்னால் சகிக்க முடியவில்லை. போய் விட்டேன்."

நான் விக்கி விக்கி அழத் தொடங்கினேன். "என் செல்லக் கண்ணம்மா. என் ராசாத்தி எதற்காக வதைபடுகிறாய் போய் விடு. ஓடிவிடு இங்கிருந்து. என்னால் தாங்க முடியவில்லை" விம்மினான். "உன் மாளிகையில் எனக்கு இடமுண்டா?" "நிச்சயமாக வந்துவிடு என்னுடன்" "நான் மட்டுமா? இல்லை குழந்தைகளையும் அழைத்து வரவா?"

"இது என்ன கேள்வி. உன் குழந்தைகள் எனக்கும் குழந்தைகள் தானே." மாளிகை எப்படியிருக்கும். இது கனடா மாளிகை கற்பனைக்குக் கொஞ்சம் கஷ்டப்பட்டேன். "என்ன அதுக்கிடேலை படுத்திட்டியே?" வில்லன் குரல். என் கற்பனை கலைந்தது. நான் அவசரமாக மூச்சை இழுத்துவிட்டேன். சிறிது குறட்டை விட முயன்றேன். முடியவில்லை.

"ஒரு பிசாசு ஒண்டு வந்து வாச்சிருக்கு. எனக்கு ஒண்டுக்கும் லாயக்கில்லை. எப்பப் பார்த்தாலும் மூசி மூசி நித்திரை கொள்ளத் தான் தெரியும்". பியர் வாடை கப்பென்று அடித்தது.

ராஜகுமாரன் போயிருப்பான். அவனால் இதையெல்லாம் சகிக்க முடியாது. எனக்குள் பெருமூச்சு எழுந்தது. இருந்தும் நித்திரை போல் நடிப்பதில் குறியாக இருந்தேன். பின்னால் எதுவோ ஊர்ந்தது. எனக்கு அருவருத்தது. சிறிது விலகிக் கொண்டேன். "வாடி இஞ்ச" அணைக்க முயன்றான். அவன் முரட்டுக் கரம் பட்டு விழித்தது போல் நடித்தேன். "எனக்கு நித்திரை வருகுது. நாளைக்கு வேலைக்குப் போகவேணும். "ஏன் நானும் தான் போக வேணும். இவ மட்டும் தான் உலகத்திலேயே வேலைக்குப் போறா" நக்கலாகக் கூறியபடியே இதழ் தேடினான். "எனக்கு வயித்துக்க நோகுது என்னால் இண்டைக்கு ஏலாது" தள்ளிப்படுத்தேன். "உனக்கு எப்பதான் ஏலும். இதைத்தானே நெடுகலும் சொல்லுறாய்." அவன் கை உடல் அளைந்தது. முழங்கை கொண்டு அவன் நெஞ்சில் இடிக்கத் தோன்றியது. கட்டுப்படுத்திக் கொண்டேன். அவசரப்பட்டால் காயப்படப் போவது நான்தான். "என்னால் ஏலாது நேற்றைய நோவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் போகேலை" விலகிக் கொண்டேன். அவன் ஏளனமாகச் சிரித்தான்.

"நேற்றோ! நேற்று என்னடி செய்தனி. மரக்கட்டை மாதிரிக் கிடந்துபோட்டு ஏண்டி உனக்கு வேற யாரோடையாவது சிநேகிதமோ" தொடங்கி விட்டான். இனி அவன் பேசும் பேச்சுக்கள் காது கொண்டுகேட்க முடியாமல் இருக்கும். "என்ன கேட்கிறன் பேசாமல் கிடக்கிறாய். சொல்லு, வேலைக்குப் போறன் எண்டு போட்டுஆரிட்டப் போய் மேஞ்சு போட்டு வாறாய்" "சும்மா இருக்கிறீங்களே. ஏன் இப்பிடியெல்லாம் கதைக்கிறீங்கள்" "அப்ப என்னோடையும் படுக்கமாட்டன் எண்டுறாய். வேறு ஒருத்தரோடையும் தொடர்பில்லை எண்டால் என்ன?" "ஐயோ என்ன இது". நான் காதுகளைப் பொத்திக் கொண்டேன். என் கண்கள் கலங்க மங்கலாக அவன் தெரிந்தான். ராஜகுமாரன் போகவில்லை இங்கே தான் நிற்கிறான்.

ராஜகுமாரா... ராஜகுமாரா.... நான் புலம்பினேன். ஓடிவந்து என் தலை வருடி விட்டான். "கூறிவிடு. என்னைப்பற்றி அவனுக்குக் கூறிவிடு" என்னை அணைத்துக் கொண்டான். "இல்லை ராஜகுமாரா. சொன்னால் உன்னையும் என்னிடம் இருந்து பிரித்து விடுவான். என் வாழ்வில் எனக்குத் துணையாக இருக்கும் ஒரே ஜீவன் நீதான். உன்னை நான் இழக்க மாட்டேன்" குறட்டை கேட்டது. அப்பாடா அவன் தூங்கி விட்டான். "என் னுடன் வந்து விடு" ராஜகுமாரன் கேட்டான். "எப்படி..." கண்ணால் வெளியே காட்டினான். எட்டிப் பார்த்தேன். வெள்ளைக் குதிரை வாலை ஆட்டியபடியே நின்றது.

"சரி" என்றேன். என்னை வாரி எடுத்துக் குதிரையில் இருத் தினான். அவன் மாளிகை என் வீடு போலவே இருந்தது. பொருட்கள் எல்லாம் அழகாக அடுக்கப்பட்டிருந்தது. "இன்று over time செய்து வீட்டு வேலையெல்லாம் செய்து களைத்துப் போயிருப்பாய் இதைக் குடி" நீட்டினான். ஆவி பறக்கும் தேன் கலந்த பால். குடித்தேன். "காலை வேலைக்குச் செல்ல வேண்டும் படுத்துக் கொள்"

"நீ"

"நானும் தான்" என்னை இழுத்து முத்தமிட்டு goodnight என்றான். நான் மனம் நிறைந்து போக நித்திரையானேன். "நித்திரை கொண்டது காணும். போ! போய் ஒரு தேத்தண்ணி போட்டுக் கொண்டுவா" நான் விழித்துக் கொண்டேன். பம்பரமானேன் வழமை போல. வெறுத்தது. வாழ்வு வெறுத்தது. எங்கே என் ராஜகுமாரன். தேனீர் கலக்கும் போது பின்னால் நின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணைத்துக் கொண்டான். "நான் தேனீர் கலக்கிறேன். நீ குழந்தைகளின் வேலையைப் பார்" என்றான். முரட்டுப் பிடியைத் தளர்த்தாது. "ச்சீ! என்ன இது பட்டப்பகலில்" நான் நெகிழ்ந்தேன்.

"என் கண்ணம்மாவை நான் எப்போது வேண்டுமானாலும் அணைத்துக் கொள்வேன்" பிடி மேலும் இறுகியது. "ஆ" "என்னடி தேத்தண்ணி கேட்டாக் குசினிக்க நிண்டு தானாக் கதைக்கிறாய்"

"ச்சீ! போ" நான் ராஜகுமாரனின் பிடி விலக்கி விரைந்தேன். ராஜகுமாரன் போய் விட்டான். வருவான். இன்று இரவு மீண்டும் வருவான். பகல் வேளை ஒரு பிசிறு மாறாமல், ஒவ்வொரு நாளும் ஒரே மாதிரி முடிந்து போனது. நான் களைத்துப் போனேன். குழந்தைகளைப் படுக்க வைத்துவிட்டுக் கட்டிலுக்கு வந்தேன். வழமைபோல் அவன் இல்லை. வருவான் பாதி இரவில், பாதி போதையில் வருவான். நான் அவனை என் நினைவிலிருந்து அகற்றினேன். இது ராஜகுமாரனின் நேரம். அவனுக்காக நான் காத்திருக்கும் நேரம். ராஜகுமாரன் வந்தான். நான் அவன் முகம் தேடினேன். போன வாரம் திரையில் பார்த்த ஜாடை கொஞ்சம். மூன்று நாட்கள் முன்பு வீடியோவில் பார்த்த முகம் கொஞ்சம். நண்பி வீட்டிற்கு வந்துபோன இளைஞனின் முகம் கொஞ்சம். சரியாக முடிவெடுக்க என்னால் முடியவில்லை. கொஞ்சம் பயமாகவும் இருந்தது. ஆனால் பிடித்திருந்தது. "என்ன" நான் குழைந்தேன். "நீ நல்ல அழகாக இருக்கிறாய்" என்றான்.

"ஆ! நீயும் தான்." என் உடல் உஷ்ணம் உணர்ந்தேன். அருகே வந்தான். நான் இருகை நீட்டினேன், அவன் முகம் நோக்கி. கதவு திறந்து கொண்டது. தள்ளாடியபடியே அவன் வந்தான். வில்லன். என் உடலின் உஷ்ணம் அடங்கிக் கொண்டது. கண் மூடினேன் அவசரமாக. தொம் என்று கட்டிலில் விழுந்தான். இறுக என்னை அணைத்துக் கொண்டான். நான் விலக முயன்றேன். முடியவில்லை. நான் திணறினேன்.

ராஜகுமாரா.... ராஜகுமாரா... காப்பாற்று என்னை. புலம்பினேன். ஓடிவந்து என் தலை வருடியபடியே "காலால் உதைத்து விடு" கதறினான். முயன்றேன் நான். முயன்றேன். முடியவில்லை. செய்வதறியாது தடுமாறினான் ராஜகுமாரன். "என் கண்ணே. என் ராசாத்தி" என் நெற்றியில் முத்தமிட்டான். நான் பரிதாபமாக அவனைப் பார்த்தேன். என்னை இறுக அணைத்துக் கொண்டான். அவனின் ஸ்பரிசம் சுகமாக இருந்தது. நானும் அவனை அணைத்துக் கொண்டேன். ராஜகுமாரன் தன் இதழ் கொண்டு என் உயிர் குடிக்க நான் கிறங்கிப் போனேன்.

✦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடு

"அந்த எண்ணம் எனை விட்டகல நீ தான் அருள்புரிய வேண்டும் பராபரமே" நொய்மைப் பிண்டம்: மெல்ல, மெல்ல மேலே எழுந்து சில நிமிடங்கள் இயங்க மறந்து, பின் தொப்பென்று கட்டிலில் விழுந்தது. அசைந்து பார்க்க அச்சம் வந்தது. பெருவிரல்கள் ஒன்றுசேர்த்து, பிணம் போல் உருவெடுத்து அசையாதுகிடந்தாள் மல்லிகா. கை விரல்கள் குளிர்ந்து சொடுக்கிக் கொண்டன. தலைமுடியின் ரப்பர் கழன்று தரையில் கிடந்தது. வியர்த்திருக்க வேண்டும், ஆனால் இல்லை! சீதளமும், உஷ்ணமும் இல்லாத நிலையில் உடல் ஊசலாடியது. மெல்லிய மேற்சொண்டும், தடித்த, பருத்த கீழ்ச்சொண்டும் நீர் வற்றி வெடிப்புக்கண்டிருந் தன. நெற்றிப் பொட்டில் மீண்டும், அதே வலி தொடங்கிக் காதோரம் பரவத் தொடங்கியது. பிணைப்பு விடுத்துக் கால்கள் அகட்ட, தொடைகள் இரண்டும் விண், விண் என்றது. அலை களுக்கு நடுவில் அகப்பட்டது போல் அந்த முகம் தெளிவற்று அவளைப் பார்த்துச் சிரித்தது. வலித்த இடம் தடவ ஈரம் உணர்ந் தாள். மெல்லிய பரிச்சயப்பட்ட நாற்றம் நாசியைத் தாக்கியது. குமட் டல் பித்தலாய் வழிய, அசைவுகள் அகன்று, மெல்ல, மெல்ல முகம் தெளிவுறத் திடுக்கிட்டாள் மல்லிகா — லண்டன் மாமா!

பெருஞ்சாலை கடக்கையில், வேகமாக வந்த குப்பை வண்டிச் சில்லுக்குள் சில நிமிடங்கள் அகப்பட்டு, சிதைந்து, கால் களில் கண்களும், காதுகளும் பொருத்தியது போல் இரத்த வெள் ளத்தில், நெடுந்தூரம் தூக்கியெறியப்பட்ட உடல், கண்டெக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டு, எரித்து, சாம்பலாக்கி எத்தனை வருடங்கள் ஆகிவிட்டன. மீண்டும் இங்கு எப்படி? விசா எடுத்து, பிண்டம் கனடா வந்து விட்டது போலொரு உணர்வு அவளுக்குள்! விடியற்காலைச் சொப்பனத்தின் விசேஷம் அறிந்ததால் பயம் கவ்வ, ஒரு மூக்கின் துவாரம் அழுத்தி, மூச்சிழுத்து, மறுமூக்கால் சுவாசம் விட்டாள். சவர்க்காரம் போட்டு, உடல் கழுவி, உடை மாற்றித் தன்னைத் தீவிரம் செய்தாள். ஆனாலும் பாழாய்ப்போன மனதில் மீண்டும் அதே கேள்வி! அஞ்சலி ஏன் கட்டில் நனைத்தாள்?

பத்து வயது. வயதுக்கு மீறிய வளர்ச்சி. குளிக்க வார்க்கும் போது, தற்செயலாகக் கை பட சட்டென்று தட்டி விட்டு, மிரள, மிரள முழித்துக்கொண்டு தலைகுனிந்து நின்ற விதம். சிக்கெடுக்க முடியாமல் முடிச்சுக்கள் நீண்டு கொண்டுபோனது. “உன்னுடைய அந்தரங்க உறுப்பில் உன் சம்மதம் இன்றி யாராவது ஸ்பரிசிக்கும் பட்சத்தில், உனக்கு நம்பிக்கை உள்ள, வயது வந்த ஒருவரிடம், நீ முறையிடல் வேண்டும்” பாடசாலையில் புகட்டப்பட்டது. “உன் சம்மதம் இன்றி” இந்த வரிகள் வைத்தியத்திற்காகக் கொடுக்கப் பட்டவை. நான் சம்மதம் கொடுத்தேனா? தெரியவில்ல. ஆனால் தடுக்கவுமில்லை. இது எதில் சேர்த்தி? மல்லிகா குழம்பினாள்.

நேசனை, வேறு இடம் பார்க்கச் சொல்ல வேண்டும். காரணம் கேட்டால் என்ன சொல்வது? என் காலைக்கனவும், அஞ்சலியின் கட்டில் நனைப்பும் போதுமானதா? சின்னத்தம்பி பாவம்! அப்பா, அம்மாவைப் பலிகொடுத்துவிட்டு அண்ணா தான் கதியென்று பல இலட்சங்கள் கொடுத்து, கப்பலேறி, பல மைல்கள் தாண்டி தஞ்சம் புகுந்திருக்கின்றான். அவனை என் சொப்பனம் சொல்லி விரட்டியடிப்பதா? சாடைமாடையாக என்று தொடங்கி, கொஞ்சம் பச்சையாகவே கேட்டுப் பார்த்தாகிவிட்டது, அஞ்சலி அசங்கவில்லை.

“மாடு, மாடு என்ன நாத்தமடி உன்ர மூத்திரம். சின்னஞ் சிறுசெண்டால், கழுவிக் காயப்போட்டுப் பாவிக்கலாம், ரெண்டு கழுதை வயதாகுது, உந்த வயசில காத்தால எழும்பி, குசினி மெழுகி, தேத்தண்ணி வைச்சு, அப்பனைக் கமத்துக்கு அனுப்பி யிருக்கிறன் நான். இது, இப்பதான் பாய் நனைக்குது”. விடாத புறுபுறுப்போடு தண்ணி மோந்து, கவிழ்த்துப் பாய் கழுவும் பாட்டி நினைவிற்கு வந்தாள். “மல்லிக்குட்டி! இரவு ஒண்டுக்குப் போக வேணுமெண்டால் என்னை எழுப்பு”. அம்மா, ஆதரவு தருவதாக எண்ணிக் கூறினாள். ஒருவரும் கேட்கவில்லை, அவள் பாய் நனைத்த காரணத்தை. ஆனால் மல்லிகா, அஞ்சலியிடம் துருவித்துருவிக் கேட்கிறாளே! “தெரியாதம்மா, தெரியாதம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிமேல் நனைக்க மாட்டன்" இவளுக்கும் பிடித்திருக்கிறதோ? தனக்கு வேண்டிய பதில் வராததால் மல்லிகாவிற்கு கோபம் வந்தது.

நான் சொன்னதில்லை. அப்பா, அம்மாவிடம் நான் சொன்னதில்லை. பயமா? இல்லை, எனக்கும் பிடித்திருந்ததா? பிடித்திருந்தால், இரவில் நடுநடுங்க ஏன் நான் பாய் நனைக்க வேண்டும்? தவறு என்று மட்டும் புரிந்தது. ஆனால் சொல்லும் துணிவு வரவில்லை. பக்கத்து வீட்டுவாசி, முதுகில் குத்த, அழுவதிலும் முந்திக்கொண்டு, அம்மாவிடம் கோள் சொன்ன எனக்கு, லண்டன் மாமா, நோக நோக என்னைத் தன்னுடன் பிணைத்துக் கொண்டது மட்டும் சொல்லத்துணிவு வரவில்லை. "உன் அந்தரங்க உறுப்பில், யாராவது உன் சம்மதம் இன்றி" இந்தப் பாடம், எனக்குச் சொல்லித் தரப்படவில்லை.

அம்மா கேட்டிருந்தால்? ஒரே ஒருமுறை, அம்மா கேட்டிருந்தால்? "ஓ" வென்றழுது கொட்டித் தீர்த்திருப்பேன். அம்மாவுக்குக் கால் வைக்கும் இடமெல்லாம் குழந்தைகள். நேரம் கிடைக்காமல் போயிருக்கலாம். சரி, நானாவது லண்டன் மாமா வீட்டிற்கு ஓடியோடிப் போகாமல் இருந்திருக்கலாம்.

லண்டன் மாமா வீட்டிற்கு மல்லிக்குட்டி ஓடியோடிப் போகப் பல காரணங்கள் இருந்தன. ஊரிலேயே ஹோர்லிங் பெல் கொண்ட ஒரே வீடு அவர்களுடையது. கதவு பரப்பித் திறந்திருந்தாலும், தொங்கித்தொங்கிப் பெல் அடிப்பதில் சுவாரசியம் நிறையவே இருந்தது. மாமி வந்து "என்னடி மல்லிக் குட்டி" என்று கேட்ட பின்பும், அவள் தொங்குவதை விடமாட் டாள். பகல் நித்திரை கலைந்து லண்டன் மாமா எழுந்து வந்தா லும் சிரிப்பாரே தவிரத்திட்ட மாட்டார். வீட்டிற்குள், குஷன் போட்ட இருக்கை. மல்லிக்குட்டி வீட்டில் ஒரேயொரு மர இருக்கை, அதுவும் அப்பா இருப்பதற்காக, இல்லாவிட்டால் யாராவது வந்தால் இருப்பதற்கு. கால்கள் ஓயும் வரை குஷன் போட்ட பஞ்சுக்கதிரைகளில் ஏறி நின்று துள்ளுவாள் மல்லிக் குட்டி. மாமிக்குக் கோபம் வந்தாலும், "பாவம் சின்னப்பிள்ளை விடு" என்பது மட்டுமல்ல, கை நிறைய நீளம், அகலம், வட்டம், சதுரம் என்று லண்டன் சொக்லெட்சும் அள்ளிக்கொடுப்பார் லண்டன் மாமா. எப்படி மல்லிக்குட்டி இதையெல்லாம் அசட்டை செய்வாள்?

ரூபவாஹினியில் தமிழ்ப்படம் போடுகிறார்களாம்! லண்டன் மாமா வீட்டில் கூட்டம் கூடிவிடும். வறுத்த கச்சான் பொரித்து, உப்பு மிளகாய் தூவிய கடலைப் பருப்பு சகிதம் ரீ.வீ முன்னால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழபழத்த நிலத்தில் பெண்களும் சிறுவர்களும் சப்பாணி கட்டி இருந்துவிட, லண்டன் மாமா மட்டும் பின்னால் கதிரையில் நிமிர்ந்து இருந்து, ராஜாபோல், ஆஜானுபாகுவாய் காட்சி அளிப்பார். லண்டன் மாமா வீடு, தனக்கு நல்ல அத்துப்படி என்பதையும் தான், மாமா, மாமியின் சின்ன, செல்ல மல்லிக்குட்டி என்பதையும், தனது நண்பிகளுக்குத் தெரியப்படுத்த மல்லிக்குட்டி துடிப்பாள். "மல்லிக்குட்டி, மாமாவிற்குத் தண்ணி கொண்டு வா". குரல் கேட்டால் போதும், எப்போது கேட்பார் என்று காத்திருந்தவளாய், பெருமை பொங்கும் முகத்துடன், ப்ரிஜைத் திறந்து தண்ணீர் எடுத்து வருவாள். வேண்டுமென்றே தானும் கொஞ்சம் குடித்தும் வைப்பாள். கண்கள் அகல, வைத்த கண் வாங்காமல், ஏக்கத்துடன் பார்க்கும் சிறுமிகளை மல்லிக்குட்டி கண்டு கொள்வதேயில்லை.

லைட் அணையும். படம் தொடங்கும். லண்டன் மாமா மல்லிக்குட்டியின் கை பிடித்திழுத்து, தன் மடியில் இருத்திக் கொள்வார். மெல்ல, மெல்ல அவர் கைகள் அவள் உடல் அளையும். பின்னர், அவள் பிஞ்சுக் கைபிடித்து தன்னுடல் துளாவுவார். மல்லிக்குட்டி நெளிவாள். கவலையால் நெஞ்சடைக்கும். ஆனால் பொறுத்துக் கொள்வாள், காரணமின்றி.

"ச்சீ, நாசமாப் போக! என் தலையில் இடி விழ! அப்பவே அம்மாவிடம் சொல்லி லண்டன் மாமாவை உண்டு இல்லையென்று பண்ணியிருக்கவேணும்". மல்லிகா வெம்பினாள். நான் சொல்லியிருந்தாலும் அம்மா நம்பியிருப்பாளா? எப்போதும், எதிலும் பெண்கள் தவறுசெய்பவர்கள், ஆண்கள் அனுபவிக்கப் பிறந்தவர்கள் என்றும், கைச் செலவிற்கும், கறி உப்பிற்கும் அடிக்கடி லண்டன் மாமா வீட்டை நம்பி வாழ்க்கை நடாத்தும் அம்மாவால் லண்டன் மாமாவைப் பார்த்துக் கேள்வி எழுப்ப முடிந்திருக்குமா? அதுமட்டுமல்ல, அம்மாவுக்கு எப்போதுமே லண்டன் மாமா மேல் ஒரு வெட்கம். மாமா முகம் பார்த்தே கதைக்க மாட்டாள். மாமி அதிர்ஷ்டம் செய்தவள் என்று அடிக்கடி கூறுவாள். ஆண்களின் உதாரண புருஷன் மாமா என்றும் அவள் நம்பி னாள். ஒரு வேளை அம்மாவிற்கும் மாமாவிற்கும்.. ச்சீ இருந்திருக் காது. எங்கே அதற்கெல்லாம் நேரம் அவளுக்கு?...

எனக்குப் பிடித்திருந்ததா? இல்லை. பயத்தால் எழுந்த சம்மதமா? எட்டு வயதில் உணர்ச்சிகளுக்கு உடல் ஏங்குமா? பல வருடங்களாகப் பலவிதமாகச் சிந்தித்தாகி விட்டது. பதில் கிடைக்கவில்லை. கூச்சம் விட்டுப் பிறருடன் அலசவும் பிடிக்கவில்லை. எனக்கு மட்டுமா இந்த நிலை! இல்லாவிட்டால் பல பெண்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கும் இருந்திருக்குமா இப்படி? பார்க்கும் இடங்களெல்லாம், பிண்டங்கள் பிணப்பதற்கு அலைவதாக அவளுக்குப்பட்டது. தன் சாபம், வேதனைதான் லண்டன் மாமா ரோட்டில் சிதைந்து போனதற்குக் காரணமோ?

அஞ்சலி கொஞ்ச நாளாய், விந்தி விந்தி நடப்பது போல் பட்டது மல்லிகாவிற்கு. தொடைகள் வலிக்கிறதோ? நேசன் மேல் வெறுப்பு வந்தது. நேசனின் கட்டிலில் அஞ்சலியின் தலைமயிர் தேடினாள் மல்லிகா. அஞ்சலியின் கட்டிலை உருட்டிப் பிரட்டினாள் தடையங்களுக்காய். எதற்குத் தடையம்? மல்லிகா நேசனை வெறுத்தாள். அஞ்சலியைக் காப்பாற்ற வேண்டும். நேசனை உடனை வீட்டிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும் தீர்மானித்தாள். "அண்ணி! அஞ்சலி ரெடியா?" நேசன் வந்தான். இவனுக்கென்ன அஞ்சலி மேல் இவ்வளவு அக்கறை. கார் வைத்திருப்பதால், அஞ்சலியை அலுங்காமல் குலுங்காமல் பாடசாலையில் விட்டுவரும் பொறுப்பை நேசனிடம் ஒப்படைத்திருந்தான் அவன் அண்ணன். அலுங்காமல் குலுங்காமல் விட்டு வருகிறானா? இல்லை, குலுக்கி எடுக்கிறானா என் செல்வத்தை? மல்லிகை பல்லு நெருமினாள். இரண்டு பேர் உழைப்பை நம்பி வீடு வாங்கியாகி விட்டது. காருக்கும் மாசம் மாசம் கட்டுக்காசு. நேசனும் வாடகை சாப்பாட்டுக்காசு என்று ஏதோ தன்னால் இயன்றதைத் தருகிறான். இனி வேலையை விட்டுவிட்டு வீட்டில் நிற்பதோ, இல்லை திடீரென்று நேசனை அப்புறப்படுத்துவதோ நடக்காத காரியம். வாழ்வின் சௌகரியங்களில் பெரிய இடி விழும். "நேசன் நல்லவன், அவன் லண்டன் மாமாவின் மறு உறு அல்ல" குழப்பத்துடன் மீண்டும் மீண்டும் மந்திரமாய் உச்சரித்தாள் மல்லிகா.

நேசனை நம்பியே ஆக வேண்டும். அஞ்சலியைப் பாடசாலைக்குக் கூட்டிச் செல்வது, மத்தியானம் அழைத்து வந்து சாப்பாடு சூடாக்கிக் கொடுப்பது, பின்னர் பாடசாலையால் அழைத்து வருவது. முகம் தூக்காமல் அவன் ஓடியோடிச் செய்வதை, அண்ணா பணம் ஏதும் கேட்காமல் தன்னை கனடா அழைத்து விட்டதன் பிரதியுபகாரமாகச் செய்கிறானா? இல்லை! கடவுளே.. அவள் மனம் மீண்டும் முருங்க மரத்தின் மேல் ஏறியது.

அப்பா நோய்வாய்ப்பட்டு, ஆஸ்பத்திரியில் படுத்துவிட, சாப்பாட்டுப் பார்சலுடன் லண்டன் மாமா ஓடித்திரிந்தது ஞாபகத்திற்கு வந்தது. துணைக்கென்று அவர் மல்லிக்குட்டியையும் அழைத்துச் செல்ல மறந்ததில்லை. ஆஸ்பத்திரி சென்று இறங்கு முன்பே, சைக்கிளின் முன் சீட்டில் இருக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிக்குட்டியின் முதுகுப் புறச்சட்டை, லண்டன் மாமாவின் கிருபையால் தேய்ந்து தேய்ந்து ஈரமாகிப் போயிருக்கும்.

பிள்ளை பெற்றுக்கொள்ள என்று மாமி தன் தாய்வீடு போய்விட, மாமி கேட்டுக் கொண்டதன் பேரில், மாமாவிற் கென்று விதவிதமாய் சமைத்து மல்லிக்குட்டியிடம் கொடுத்தனுப் புவாள் அவள் அம்மா. வெறும் வீடு. கேட்பதற்கு நாதியில்லை. பல வண்ண நிறச் சொக்லேட்டுக்களைக் மல்லிக்குட்டியின் கை களில் திணிப்பார் லண்டன் மாமா. ஒன்று, இரண்டு அவள் சாப்பிட்டு முடிக்கு முன்பே, வினோதமான நிறத்தில் ஐஸ் போட்ட ஜூஸ் கொண்டு வந்துஅவள் அருகில் வைப்பார். அவள் சொக்லேட் சாப்பிட்டுப் பின்னர் ஜூஸைக் குடிக்க மட்டும் பொறுமையாக இருந்துவிட்டு, அலாக்காக அவளைத் தூக்கி உயரப் போட்டு விளையாட்டுக் காட்டுவார். நெளிந்த படியே மல்லிக் குட்டி வாய்விட்டுச் சிரிப்பாள். (வேறு வழியின்றி) மெதுவாக அறைப்பக்கம் நகர்ந்து, கட்டிலில் அவளைத் தொப்பெனப் போடு வார். அவள் எதிர்ப்பதில்லை. வாய் விட்டுக் கதறுவதில்லை. இரு தயம் படபடவென்று அடிக்கும். பயம் நெஞ்சைக் கவ்விக் கொள்ளும். கைகள் குளிர்ந்து நடுங்கும். வலிக்குப் பயந்து, கண் களை இறுக மூடிக்கொள்வாள் மல்லிக்குட்டி. லண்டன் மாமா வின் கனம் உடலில் சரியும். மல்லிக்குட்டிக்கு மூச்சுத்திணறும். இந்த நேரம் பார்த்து யாராவது வந்து விடக்கூடாதே, எல்லாமே கெதியில் நடந்து முடிந்துவிட்டால் தான் வீட்டிற்குப் போய் விடலாம் என்பதாய் மனம் ஏங்கும். லண்டன் மாமாவின் வியர்வை அவள் நாசியைத் தாக்க, தொடைகள் வலிக்கும். பின்னர் ஈரமாகும். மாமா ஓய்ந்து போவார். மல்லிக்குட்டியின் முதுகு தடவி அவளை ஆசுவாசப்படுத்துவார். தீபாவளிக்கு அவளுக்குத் தர இருக்கும், லண்டன் சட்டை பற்றிக் கூறுவார். ஈரத்துணி கொண்டு அவள் உடல் துடைப்பார். மணம் அகன்று உடல் சுத்தமாகும். அவளை ஊஞ்சலில் இருத்தி ஆட்டுவார். குழாய் கொண்டு ரோஜாவிற்குத் தண்ணீர் பாய்ச்ச வைப்பார். மல்லிக் குட்டியின் முகத்தில் நோயின் சாயல் போய் சிரிப்பு வரும் வரையில் அவளை அங்கேயே வைத்துக்கொள்வார். போனவளை எங்கே காணோம்? வீட்டில் தேடுவார் இல்லை.

வீடு வந்ததும், லண்டன் மாமா தனக்குத் தந்த சொக்லெட் பற்றியும், தீபாவளிக்குக் கிடைக்கவிருக்கும் லண்டன் சட்டை பற்றியும் தங்கைகளுக்குக் கூறுவாள் மல்லிக்குட்டி. அவள் மனம் ஏனோ சலனத்துடன் கனக்கும்.

தன் கண் முன்னாலேயே அஞ்சலியை நேசன் அழைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு செல்ல, பிரமை பிடித்தவள் போல் அமர்ந்திருந்தாள் மல்லிகா. தொலைபேசி அழைத்தது. லண்டனில் இருந்து மாமி. மாமாவின் நினைவு நாளாம். விக்கி விக்கி அழுதாள். “எவ்வளவு நல்ல மனுஷன், ஒருத்தருக்கும் ஒரு தீங்கும் செய்ததில்லை, இப்படிப்பட்ட சாவு வந்திட்டுதே” ஒவ்வொரு வருடமும் இதே புலம்பல் தான். மல்லிகா கண்கலங்கினாள். வெளியே சோவென்று மழை. ரோட்டுக்கரையோரம் நெளிந்தபடியே அலையலையாய் நீரோடி இரும்புக் குழாய்க்குள் விழுந்து கொண்டிருந்தது. “மல்லிக் குட்டி என்னைக் காப்பாற்று” கத்தியபடியே கைகளை நீட்டிய லண்டன்மாமா, அலையோடு அள்ளுப்பட்டு இரும்புக் குழாய்க்குள் முகம் சிக்கிச் சிதைந்து காணாமல் போனார். மல்லிகா அசையாது நின்றாள்.

✦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிளாஸ்டிக்

விண்ணென்று விறைத்ததுபோல் அசையாதிருந்தேன் கட்டிலில். எட்டி எட்டிப் பார்த்துச் சென்றன என் செல்வங்கள். ராகம் போட்டு வாய்பிளந்து பால் வடியச் சிரித்துக் கொண்டிருந்தது இன்னுமொன்று பக்கத்தில். என் கடுப்பு எவ்வளவு நேரம். சிதைந்துவிடும் விரைவில். இதுதானே என் சுபாவம். எல்லை என்பதாய் ஏதோ வரும். பின்னர் புஸ்ஸென்று மறைந்து விடும். இன்றும் சில மணிநேரம் சிந்திக்கக் கிடைத்தால் ஏதும் செய்து விடுவேனோ என்று அஞ்சியே காலங்கள் கரைந்து கொண்டிருந்தன. இன்றும் அதுபோல் தான்.

பட்டு வேட்டி அவன் உடுத்தாயிற்று. பட்டில் என் செல்வங்களும் பளபளத்தன. இனி, பட்டுடுத்தி பிளாஸ்டிக் பொட்டு பூ வைத்து நானும் புறப்பட வேண்டும். இது எழுதாத எழுத்து. குளிரோ வெய்யிலோ வார இறுதியில் முதுகு கனக்கும் பாரத்துடன் நீண்ட பயணம் போல் கழிந்துகொண்டிருந்தது. பையைத் திறந்து பார்த்தேன். பால் போத்தல், போத்தல் சாப்பாடு, டயப்பர், வீணீர் துடைக்கும் துண்டு, சூப்பி, மாற்று டுப்பு, கம்பளி என்று கச்சிதமாய் எல்லாம் இருந்தது. நிமிர்ந்து பார்த்தேன். நிறைவாய்ச் சிரித்தான். எப்படிக் குறைகாண? மை நிரம்பிய கண்களுடன் தொடர்ந்தேன் அவனை. தூக்கிப் பிடித்த பட்டுப்பாவாடையுடன் ஓடிச்சென்று காருக்குள் தம்மைப் புகுத்திக்கொள்ளும் என்ர பெட்டைகளின் சிரிப்பைவிட என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேணும் எனக்கு. என் முகத்திலும் புன்னகை.

வியர்வை முகத்திலிருந்து வழிந்து கழுத்தால் எதையோ தேடி உள்ளே சென்றது. வாள், வாள் என்று கத்திமுடித்து விம் மலுடன் நித்திரை போயிருந்தான் என் மகன். பட்டிண்கள் கழன்ற மேற்சட்டையுடன் ஓடித்திரிந்து கொண்டிருந்த என் பெட்டைகள், குத்துவிளக்கடியில் வரும்போது மட்டும் தானாகவே தலைதிருப்பிக் கண்காணித்துக் கொண்டிருந்தான் நண்பர் களுடன் அரட்டையடித்துக் கொண்டிருந்த என் கணவன். வயிறு முணுமுணுத்தது. இன்னும் பொம்பிள்ளையே மணவறைக்கு வரவில்லை... குடிக்கவாவது ஏதாவது தரலாமே. பச்சை உடம்புக்காரி. என்ர பெட்டைகளுக்கு சொந்தங்கள் இல்லாத இடத்திலதான் மாப்பிள்ளை எடுக்க வேணும். எல்லாமே போலியாயிருந்தது. அந்த எல்லை வந்துவிடுமோ என்று அஞ்சி மகனை அணைத்தபடி மேலோட்டமாய் பார்வையை ஓட விட்டேன். பட்டுக்களின் நிறங்கள் இப்போதெல்லாம் எனக்குப் பயத்தைக் கொடுத்தன. ஓடிய பார்வையில் பலமுகங்கள். தெரிந் தவை தெரியாதவை எல்லாமே எனக்குப் பிடிக்காததாய். ஏனிந்தத் தண்டனை எனக்கு? அலுப்பு வாசல் வரை வந்தபோது அவன் கண்களை நான் சந்தித்தேன். பார்வை அவனைக் கடந்தபோது அவன் பார்வை என்னில் உற்று நிற்பது தெரிந்தது. குனிந்துப் பார்த்தேன். சீலை சரியாகவே இருந்தது. திரும்பிப் பார்த்தேன். சுவர்தான் தெரிந்தது. அவன் புன்னகைத்தான். என்னை நோக்கி நடக்கத்தொடங்கினான். நான் எதேட்சையாய் முகத்தை வைத்துக்கொண்டு பக்கத்தில் இருந்தவளிடம் எதையோ கேட்டு வைத்தேன். அவள் என்னை வினோதமாகப் பார்த்தாள். நான் சிரித்தேன். அவன் கால்கள் என் கண்களுக்குள் தெரிந்தது. கறுப்பு சப்பாத்து, கறுப்பு பாண்ஸ், கோட் கச்சிதமாய் இருந்தது.

வேட்டியுடன் இன்னும் அழகாய் இருப்பான். நான் பேசாமல் இருந்தேன். அவன் சிரித்தான். பின்னர் கேட்டான். "நீ... நீங்கள் மேகலாதானே..."? நான் திடுக்கிட்டு என் கணவனைப் பார்த்தேன். அவன் ஆழமாக எதையோ நண்பர்களுடன் வாதித்துக் கொண்டிருந்தான்... அனேகமாக இலங்கை அரசியலாய் இருக் கலாம். இனி அவன் என்னைத் திரும்பிப்பார்க்க பல மணிநேரங் களாகும். பெட்டைகளும் மூலையில் இருந்து வேறு குழந்தை களுடன் நுள்ளுப்பிராண்டி கிள்ளுப்பிராண்டி விளையாடிக் கொண்டிருந்தன. எல்லாக் குழந்தைகளுக்கும் அந்த விளை யாட்டுத் தெரிந்திருந்தது எனக்கு அதிசயமாய் இருந்தது. எல்லா வீட்டிலும் அப்பம்மா இருக்குப்போல... நான் ஆழ்ந்த நித்திரையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த மகனை சும்மா ஆட்டினேன். ஊரிலும் கனடாவில் நான் போன பாடசாலைகள், வேலைத்தளங்கள், திருமணங்கள், சாவீடுகள் என்று ஒரு முறை நினைவிற்குக்கொண்டு வர முயன்றேன்... இந்தக் கருப்புக் கோட்டுக்காரனின் முகம் தட்டுப்படவில்லை. அவன் சிரித்தான்.

"என்ன நான் கேட்டதுக்குப் பதிலைக் காணேலை"

பக்கத்தில் இருந்தவள் தன் கற்பைப் பாதுகாக்க எண்ணி எழுந்து சென்று விட அவன் இருந்து கொண்டான். ஒரு விதமான விலையுயர்ந்த மணம் அவனிடமிருந்து வெளிவந்தது. நிச்சயமாக எனக்கு அவனைத் தெரிய நியாயம் இல்லை. என் சீலையில் பொட்டில் மேக்கப்பில் கவனம் எடுக்காததற்காய் இப்போது வருந்தினேன். பசியால் உறுமும் பச்சை வயிறு. வாய் திறந்தால் மணக்குமோ என்ற அச்சம் எனக்கு. என்ன என்பதாய் புருவம் உயர்த்தினேன். அழகான அளவான அந்தச் சிரிப்புடன் மீண்டும் கேட்டான்.

"நீங்கள் மேகலா தானே"

அளவாக நானும் வாய் திறந்து

"ஓம் நீங்கள் ஆர் என்ர ஹஸ்பண்ட் பிரண்டோ அவரும் இஞ்ச வந்திருக்கிறார்"

அகலமாக உடலுடன் நெற்றியில் குங்குமம் கையில் குழந்தை என்று இருந்து கொண்டு எதற்காக அவசரமாக எனக்குக் கலியாணம் முடிந்து விட்டதையும் கணவன் அங்கே வந்திருப் பதையும் சொல்ல முயல்கிறேன். ஆசைக்கு அளவே இல்லை...

அவன் கண்கள் ஒரு முறை மிளிர்ந்து அடங்கியது எனக்குப் பயத்தைக் கொடுத்தது. அவன் சிரித்தான். இப்போது வாய் திறந்து பற்கள் தெரிந்தன. டெண்ரிஸ்ஸிடம் ஒழுங்காப் போறான் போல... டெண்ரல் பெனிபிட் இல்லாத என்ர மனுசன்ர வேலை மேல் எனக்குக் கோபம் வந்தது.

"நீங்கள் தின்னவேலி மசுக்குட்டி மாஸ்டரின்ர மகள்தானே..."

அவன் தோற்றத்திற்கும் வார்த்தைகளுக்கும் ஒத்துவராமல் இருந்தது எனக்குப் பிடித்திருந்தது. நான் சிரித்தேன்... அந்தஸ்து இடைவெளி குறைந்து விட்டிருந்தது.

"நீங்கள்... எங்கேயோ பாத்தமாதிரி இருக்கு. ஆனால் ஞாபகந்தான் வரேலை..." சும்மா பொய் சொன்னேன். "என்ன... நீங்கள் என்னை மறந்திட்டீங்கள்..." பொய்க் கோபத்துடன் அவன் சிணுங்கினான்... கணவன் இன்னும் ஆக்ரோசமாகக் கதைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தார். பெட்டைகள் குப்புறக்க விண்டிருந்து எதோ கதைத்துக் கொண்டிருந்தார்கள். என் அடிவயிற்றில் ஒரு வித நாதம் எழுந்தது. அவன் சிணுங்கலில் உரிமை தெரிந்தது. நான் பாடசாலையில் ஒருத்தனையும் காதலிக்க அனுமதிக்கப் பட்ட தில்லை.. கள்ளமாக மனதுக்குள் காதலித்தது கௌரியின் அண்ணனை மட்டும்தான். இது அவனில்லை... கனடாவில் அப்பிடி இப்பிடி ஒருநாள் சலனங்கள் வந்திருந்தாலும் இந்தள விற்குக் கச்சிதமானவனை நான் கனவில் கூட நினைத்ததில்லை...

"இன்னும் உங்களுக்கு நினைவுக்கு வரேலை போல என்ன...." அவன் குனிந்து தன் முகத்தை எனக்கு அருகில் கொண்டு வந்தான். நான் முகத்தை இழுத்துக் கொண்டேன். அவன் தன் கன்னத்தைத் தடவியபடியே "மசுக்குட்டி மாஸ்டரின்ர அடி இன்னும் எனக்கு விண்விண் எண்ட மாதிரி இருக்கு" என்றான். அவன் கன்னங்கள் சிவந்து போக கண்களில் எதுவோ தெரிந்தது... நான் எல்லா வற்றையும் ஒரு கணம் மறந்து அவன் கண்களைப் பார்த்தேன். அவனை இப்போது அடையாளம் தெரிந்தது. எனக்கு வோஸ் ரூமுக்குப் போக வேணும் போல் இருந்தது. அடக்கிக் கொண்டேன். சுகமாக இருந்தது. "சங்கரா?" சின்னதாக ஒரு குழறலுடன் கேட்டேன். அவன் சிலோ மோஸனில் "ஓம்" என்று தலையசைத் தான். என் உள்ளங்கைகள் குளிர மகன் அசைந்தான். ஒரு பெரிய வட்டத்திற்குள் விழுவது போலிருந்தது எனக்கு... என்னை நிதானப்படுத்த முயன்று முயன்று தோற்றுத்தோற்றுக் கடைசியில் கேட்டேன்.

"எப்பிடி இருக்கிறீங்கள்... உங்கட அப்பா அம்மா குடும்பம் எல்லாம் எங்க..." அவன் தலையசைத்து ஒரு விதமாகச் சிரித்த படியே "எல்லாரும் இஞ்சதான் இருக்கினம்.. ரேணு கலியாணம் கட்டி லண்டனில இருக்கிறாள்..." "உனக்குக் கலியாணம் முடிஞ்சுதா?"

மனதுக்குள் நான் கேட்க... "நான் இன்னும் கலியாணம் கட்டேலை..." என்றான் அவன். மேளச்சத்தம் அளவுக்கு அதிகமாய் இருப்பதுபோல் பட்டது... அவன் கலியாணம் கட்டாதது எனக்கு ஏனோ சந்தோஷத்தைத் தந்தது. அவன் என் மகனின் விரல்களைத் தடவி விட என் உடல் புல்லரித்தது.

வீடு அமைதியாக இருந்தது. அமைதியென்றால் இது மயான அமைதி. பெரிய இழப்பின் பின்னர் வரும் அமைதி... ஆனால் இங்கு இழப்பு இனிமேல்தான்... அக்காவின் விசும்பல் சத்தமின்றி சுவர் களில் மோதியவண்ணம் இருந்தது. ஆச்சி இருமல்களை விழுங்கிக் கொண்டிருந்தாள். அம்மா சுவரில் சாய்ந்து ஏமாற்றியவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகைக்காய்க் காத்திருக்கும் கதாநாயகிபோல் காட்சி யளித்தாள்... நான் அழுவதற்கு என்னைத்தயார் செய்த நிலையில் குப்புறப்படுத்திருந்து பென்சிலால் சத்தமின்றிச் சித்திரம் வரைந்து கொண்டிருந்தேன்...

மசுக்குட்டி மாஸ்டர் வீடு அடிக்கடி இப்படிக் காட்சி யளிக்கும்... இதற்கெல்லாம் காரணம் இந்த வீட்டிலிருக்கும் பெண் கள்... அது என்னில் தொடங்கி ஆச்சிவரை வயது வேறுபாடின்றி இருக்கும். பெண்கள் தவறு செய்யப் பிறந்தவர்கள்... தவறு செய்த வண்ணமே இருப்பார்கள்... ஆண்களுக்கு மானம் போகும்... தவறைத் தட்டி நிமிர்த்தி நேர்த்தியாக்கி ஒருவாறு பெண்களைக் காப்பாற்றி வருகின்றார்கள். பெண்கள் தவறுசெய்து தவறு செய்து ஆண்களின் கருணையால் ஏதோ அழிந்து போகாமல் இன்னும் வாழ்ந்த வண்ணமிருக்கின்றார்கள்...

எனது அக்காள் எனப்படும் பதினெட்டு வயது மங்கை மகா தவறைச் செய்துவிட்டாள்... எனது குடும்பத்திற்கு இருக்கும் கொஞ்ச நஞ்ச மானத்தையும் தன் நடத்தையால் கெடுக்கப்பார்க் கின்றாள்... இனி வீட்டுத்தலைவன் வரவேண்டும்... அவளைத்தட்டி நிமிர்த்தித் தவறை உணரப்பண்ணி வீட்டுமானத்தைக் காப்பாற்ற வேண்டும்.. அதற்காகத்தான் இந்தக் காத்திருப்பு... தன்னோடு படிப்பவன் பாடப்புத்தகம் கேட்டான். குடுத்தேன்... எனக்கும் அவனுக்கும் வேறு விதமாக ஒன்றுமில்லை. அக்காள் விம்மல் களுக்கிடையில் சொல்லிச்சொல்லிக் களைத்துவிட்டாள்... பாடப் புத்தகம் ஒரு பொடியனுக்குக் குடுத்தது முதல் தவறு. அதுவும் இளித்தபடியே குடுத்தது மகா தவறு... பாடப்புத்தகத்துக்குள் அக்காள் மறைத்து வைத்த காதல்கடிதத்தைப் பெற்று வர மசுக்குட்டி மாஸ்டர் பொடியன் வீட்டிற்குப் போய் விட்டார்.... கடிதம் இருக்குதோ இல்லையோ அக்காள் நிச்சயம் தட்டி நிமிர்த்தப்படுவாள்... காரணம் பெண்கள் எப்போதுமே தவறு செய்யப்பிறப்பவர்கள். ஆண்கள் அவர்களைத் தட்டி நிமிர்த்தி வாழப் பழகிக் கொடுப்பவர்கள்.. சட்டியில் மீன் குழம்பு காய்ந்து போயிருந்தது.. எனக்கு வயிறு அழுதது... இனிமேல் இரவுக்குச் சாப்பிட்டால்தான்...

இன்றும் சங்கர் வந்தான்... அவன் வருவான்... ஒவ்வொரு நாளும் வருவான்... இல்லாவிடில் நான் அவன் வீட்டிற்குப் போவேன்... இது எப்படியோ எழுதாத எழுத்தாகிவிட்டது. முற்றத்து நாவல்பழம் பொறுக்கி வாழைக்குத் தண்ணி கட்டி குட்டிச்சோறு கறியாக்கி மூலைக்கடை போய் சில்லறையாய் பொருட்கள் வாங்கி வந்து.. நானும் சங்கரும் பாடசாலை தவிர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரங்களில் ஒன்றாகக் கழிப்போம்… அவன் வீடு கோயிலுக்குப் போனால் நானும் அவர்களுடன்… என் வீடு கீரிமலை போனால் அவன் எங்களுடன்… இரு வீட்டு உறவும் எங்களால் பிணைந் திருந்தது. நான் இன்னும் பெருசாகாததால் இன்னமும் மூலைக் குள் குந்தத் தொடங்காததால் மசுக்குட்டி மாஸ்டரின் கவனம் என்மேல் திரும்பியிருக்கவில்லை…

ஆச்சி வினோதமான ஒரு போஸில் படுத்திருந்தாள். தலைமயிர் கலைந்து தலையணையை மூட மெல்லிய சூரிய ஒளி முகத்தைச் சிவப்பாக்கியிருந்தது. நான் குந்தியிருந்து அவளைக் கூர்ந்து பார்த்தேன். பின்னர் மெல்லத் தொட்டுப் பார்த்தேன். பயத்துடன் கைகளை மெல்லத் தூக்கிப்பார்க்க ஆச்சி இரு மினாள். உயிரோடதான் இருக்கிறாள்… எனக்கு யாருடனாவது கதைக்க வேண்டும் போலிருந்தது… அக்காள் இப்போதெல்லாம் என்னுடன் அவ்வளவாகக் கதைப்பதில்லை… அவள் கண்கள் சோபை இழந்தவையாய் எனக்கு அச்சம் தருகின்றன… அம்மா கேள்விகளுக்குப் பதில் சொல்லத் தெரியாதவள்.. நான் கேள்வி கேட்பதே தவறு என்பது அவள் எண்ணம்… அதிலும் என் கேள்வி சைக்கிள் மிதித்துச் சந்தைக்குச் சென்றுவிட்ட மசுக்குட்டி மாஸ்டரின் காதில் எப்படியும் விழுந்து விடும் என்பதாய்க் கண்களை அலையவிட்டுத் தவிப்பாள்…

சங்கரின் வீடு வெறுமையாய்க் கிடந்தது… நான் யாருக்கும் சொல்லாமல் முள்ளுக்கம்பி பிரித்து உடல் நுழைத்து அவன் வீட்டுக்கதவை கைசிவக்கத் தட்டிப் பார்த்துவிட்டேன்.. தோட் டத்துக் குருவிகள் சத்தமும், தூரத்தில் நாய்களின் குரைத்தலையும் தவிர எனக்காய் எந்த ஓசையும் அற்று அடங்கிப் போயிருந்தது அந்த வீடு… நானில்லாது முதல்முதலாய் சங்கர் வீடு எங்கோ சென்றுவிட்டிருந்து… இனி இது வெறும் கட்டிடம்.. இங்கே இனிமேல் எனக்கும், சிரிப்புகளுக்கும் இடமில்லை.. பழுத்த பலா இலைகள் காய்ந்து முற்றம் பாழாய்ப்போயிருந்தது… மாமரத்து ஊஞ்சலின் ஓரத்தில் சங்கரின் பழைய சேட் இன்னமும் அவிழ்க் காமல் கிடந்தது…

முள்ளுக்கம்பிக் கீறல்களுக்குத் துப்பல் போட்டுத் துடைத்து விட்டாள் ஆச்சி… "கொப்பனுக்குத் தெரிந்தால் கொண்டு போட்டி ருவான்.." தலையை இழுத்துப் பின்னியபடியே பொரிந்து தள்ளினாள்… கண்ணாடியில் என் கண்களின் சோபையைத் தேடி னேன்… என் கேள்விக்கு ஆச்சியிடம் தான் பதில் கிடைக்கும்… தலைமயிர் நுனியைக் கிழித்த துணியால் இறுக மடித்துக்கட்டிய படியே "அந்த ராஸ்கலுக்கு இந்த வயசில இப்பிடிப் புத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனால் கொப்பன் கொண்டுதானே போடுவான்" ஆச்சியின் பூடகப் பேச்சு விளங்காமல் இருந்தது....

"எந்த ராஸ்கல் ஆச்சி... அப்பா ஏன் சங்கருக்கு அடிச்சவர்... என்னை ஏன் இழுத்துத் தள்ளினவர்... சங்கரின்ர அப்பாவையும் அம்மாவையும் என் அப்பா பேசினவர்... சங்கர் ஆக்கள் எங்கை போட்டீனம் ஆச்சி" ஆச்சி என்னை வினோதமாகப் பார்த்தாள்... "நீயும் விட்டிருப்பாய் ஆர் கண்டது" எனக்கு ஆச்சியைப் பிடிக்காமல் போயிற்று... அப்பா, அம்மா, அக்கா, ஆச்சி ஒண்டுமே எனக்குப் பிடிக்காமல் போயிற்று... சோபை இழந்த கண்களுடன் வாழ நானும் பழகிக் கொள்ள... அமைதி — பூகம்பம், அமைதி — பூகம்பம் என்பதாய் மசுக்குட்டி மாஸ்டரின் வீடு வாழப்பழகிக் கொண்டது... என் உடல் மாற்றம் கண்டு மூலைக்குள் இருந்து... அக்காள் தாலி பெற்று, பின்னர் பிள்ளை பெற்று... நான் தாலி பெற்று, பின்னர் பிள்ளை பெற்று... இப்போது கடல் கடந்து மசுக்குட்டி மாஸ்டரின் பார்வையிலிருந்து தூரமாய்... ஒரு சின்ன மசுக்குட்டி மாஸ்டருடன் அமைதி — பூகம்பம் வடிவில் தொடர்கிறது என் வாழ்வு...

மணவறையின் ஆரார்த்தி எடுத்துக் கொண்டிருந்தார்கள்... சங்கர் மௌனமாக இருந்தான்... அவன் கன்னங்களை தடவி விடலாம் போலிருந்தது... சங்கர் என் முகம் பார்த்தான். "உனக்கு எப்பிடியோ தெரியேலை... ஆனால் உன்ர அப்பா நடந்து கொண்ட முறை சரியான கேவலமானது... சின்ன வயசுதான் எனக்கு இருந்தும் அந்தக்காயம் ஆறக் கனகாலம் எடுத்துது..." சங்கரின் முகம் இறுகிப்போயிருந்தது... சங்கர் என்னிலும் விட மூன்று வயது மூத்தவன். கன்னத்தில் மட்டுமல்ல மசுக்குட்டி மாஸ்டரின் நடத்தை மனதிலும் காயத்தை அவனுக்கேற்படுத்தியிருந்தது. இப்போது எனக்குப் புரிந்தது. நான் இழந்தது நல்ல ஒரு நண்பனை... நாள் முழுதும் விளையாடும் ஒரு நண்பனை... அதனால் எனக்குள் நண்பனை இழந்த காயம் மட்டுந்தான் ஏற்பட்டிருந்தது. அதற்கு மேல் புரியும் வயது வர சங்கரை நான் மறந்து போயிருந்தேன்... புதிய நண்பிகள் உறவுகள் என்று என் வாழ்வு மாறிப்போயிருந்தது...

நான் அவன் முகம் பார்த்து "அண்டைக்கு நடந்ததுக்கு இப்ப நான் உங்களிட்ட மன்னிப்புக் கேட்கிறன்". ஏதோ பொருந் தாதது போலிருந்தாலும் அதைவிட எனக்கு வேறு வழி அப்போது எனக்குத் தெரியவில்லை... அவன் சிரித்தான்... நான் மயங்கினேன்.... மசுக்குட்டி மாஸ்டரின் நடத்தை என்னில் பல தாக்கங்களை ஏற்படுத்தியது எனக்குப் புரிந்தது... என் கண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனையும் பெட்டைகளையும் சந்திக்கவேண்டும் என்றான்... நான் மௌனமாகத் தலை குனிந்திருந்தேன்.. தான் சாப்பாட்டிற்கு நிற்க வில்லை போகவேணும் என்று விட்டு எழுந்தான்.. அப்போதும் நான் பேசாமல் இருந்தேன்... "சரி நான் போட்டு வாறன்" என் மகனின் கையிலும் என் முதுகிலும் அழுத்தி அவன் விடை பெற என் தொண்டை அடைத்தது...

குட்டிச்சோறு காய்ச்சி விளையாடும் போது கண்ணுக்குள் தெறித்த தூசு ஊதாமல் வாயில் அவன் முத்தமிட்டிருக்கலாமோ என்று எண்ணத் தோன்றியது. ஈரம் ஊற நான் எழுந்து சாப்பிடப் போனேன்.

✦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டிடக் காட்டிற்குள்...

ஒரு பார்வையாளன் என்ற முறையில்தான் முதல் முதலில் அந்தக் கட்டிடத்திற்குள் நான் புகுந்து கொண்டது. அதன் பின்னர் காரணம் இன்றிப் பல தடவைகள் சென்று விட்டேன்.

இறந்தவர்கள் பலர் வேலையில் ஈடுபட்டிருந்தார்கள். எல்லோருமே தங்களை முதலாளி என்று, என்னிடம் நான் செல்லும் ஒவ்வொரு தடவையும் அறிமுகம் செய்து கொண்டார்கள்... ஒருவருக்கொருவர் சளைக்காமல் கட்டளையும் இட்டுக் கொண்டிருந்தார்கள்... அதில் மூவர் சந்தேகத்திற்கிடமாய் எனக்குப் பட்டார்கள்...

ஆண்களின் தொகை மிகவும் அதிகமாக இருந்தது. பெண்கள் எப்போதும் அழுது கொண்டிருந்தார்கள். ஒருத்தி மட்டும் முறைத்தபடி இருந்தாள்... அவள் தவறுதலாகப் பெண்ணாகப் பிறந்துவிட்டாள். பெண்கள் அழப்பிறந்தவர்கள் என்ற என் சந்தேகத்தைத் தீர்த்து வைத்தார்கள் மற்றைய பெண்கள்.

கட்டிடத்தின் மூலையில் இருக்கும் சமையலறையிலிருந்து அழுகிய தின்பண்டங்கள் எல்லோருக்கும் வழங்கப்பட்டது. வாரத்தின் இறுதி நாட்களில் இப்படியாக ஒன்றுகூடி எல்லோரும் சந்தோஷமாக உண்பதாகச் சொன்னார்கள்... இடையிடையே இருந்த அழுகாத உணவுகளை ஒருத்தி குப்பைத் தொட்டிக்குள் பொறுக்கிப் போட்டபடி இருந்தாள். என்னையும் உண்ணுமாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் வேண்டிக்கொண்டார்கள். எனக்கு அந்த அழுகல்கள் மிகவும் பிடித்திருந்தது. வீட்டில் இப்படிக் கிடைப்பதில்லையே என்ற ஆதங்கமும் ஏற்பட்டது. உங்களுக்குச் சொன்னா என்ன, நான் அங்கே அடிக்கடிச் செல்வது இப்படி ஏதாவது திருப்தியாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கையில்தான்... கட்டிடம் பற்றி எனக்கு அறிவும் கிடையாது, அதன் தரம் பற்றி எனக்குக் கவலையும் இல்லை.

அன்று எல்லாப் பிணங்களும் கூடி நின்றன... ஏதாவது விசேஷமோ என்ற என் கேள்வியை ஒருவரும் வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை... சிலர் முகத்தில் புன்னகை... சிலர் முகம் மிகவும் கோரமாகவும், இன்னும் சிலர் சோகமாகவும் உலவிக் கொண்டிருந்தனர்... இருந்தும் குசினிக்குள் தேங்கியிருக்கும் அழுகல்கள் என்னை அங்கே நிறுத்தி வைத்திருந்தது... வாரம் ஒரு முறை கூட்டம் நடக்கும்... இன்று கூட்டநாள். அதுதான் அப்படியாக எல்லோரும் ஒன்று கூடியிருந்தார்கள்... நான் கூட்டத்திற்கு அனுமதிக்கப் படுவேனா இல்லையா என்று ஒன்றும் எனக்குப் புரியவில்லை. இருந்தும் நான் அசையவில்லை. கூட்டம் ஆரம்பமானது. நான் அமைதியாகக் கூட்டத்திற்குள் புகுந்து கொண்டேன். ஒன்றும் ஒன்றும் மூன்று என்று பாடம் நடத்தப் பட்டது... எல்லோரும் ஆர்வமாகக் கற்றுக் கொண்டார்கள்... எனக்கு முன்பே தெரிந்திருந்தாலும் நான் புதிதாகக் கற்பது போல் மிக ஆர்வமாக முகத்தை வைத்துக் கொண்டேன்... பின்னர் எல்லோரும் ஒன்றுகூடி, கட்டிடத்தை உயர்த்த வழி சொன்னார்கள்... எல்லா முதலாளிகளும் செய்யப்பட வேண்டியதை ஒரு பேப்பரில் குறித்துக் கொண்டார்கள்... அடுத்த வாரம் மீண்டும் கூட்டம் கூடும். அதே கோரிக்கைகள் வைக்கப்படும். மீண்டும் குறிப்பெடுத்துக் கொள் வார்கள். கடந்த வாரம் தாம் சாதித்தவற்றைக் கூறி ஒருவர் தோளில் ஒருவர் தட்டிக் கொள்வார்கள். சில சமயங்களில் தம்மைத் தாமே தட்டியும் கொள்வார்கள்.

இருக்கும் கட்டிடங்களுள் தமது கட்டிடம் தான் மிக உயர்ந்தது என்றும்... இன்னும் உயர என்ன வழி என்றும் ஒருவர் தலையோடு ஒருவர் மோதிக்கொள்வார்கள்... அதில் ஒருவன், தான் தொடர்ந்து பல தவறுகளைச் செய்து வருவதாகவும் அது கட்டிடத்தை உயர்த்த வழிவகுக்கும் என்றும் கூறினான். உடனே அவனுக்குப் பதவி உயர்வு அளிக்கப்பட்டது. முறைக்கும் பெண்ணை அழைத்து அவன் செய்த தவறுகளுக்காய்க் கடுமை யாகக் கண்டித்தார்கள்... அவள் மீண்டும் முறைத்துக் கொண்டு உள்ளே போனாள்... உடனே அவனுக்குப் பதவிஉயர்வோடு அதிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பளமும் வழங்கப்பட்டது. அந்தப் பெண் பதவி இறக்கம் செய் யப்பட்டாள்... அவளின் இடத்தில் வேறு ஒரு பெண்ணை இருத்தி... வேலையைப் பத்தாகப் பிரித்து முதலாளிகள் இரவு பகலாக உழைத்தார்கள்...

கடுமையான உழைப்பினால் பிணங்கள் சோம்பலாகின... தாமும் இறந்து விட்டதாய் முகமூடி போட்ட மூன்று மனிதர்கள், முகமூடியின் வேட்கை தாங்காது அவ்வப்போது கழற்றி எறிந்தார்கள்.. பிணங்களின் உற்சாகம் குறைந்து விடலாம் என்றஞ்சி வாரம் ஒருமுறை இலவசக் கூழ் அறிமுகப்படுத் தினார்கள்.. பிணங்களுக்குக் கொண்டாட்டம்... அவர்களின் பெருந்தன்மையை எண்ணி எக்களித்தன. பின்னர் இலவசக் கூழுக்கும் அவர்களின் கக்கூஸ் உபயோகத்திற்கும் என்று சொல்லி சம்பளத்தில் வெட்டியும் கொண்டார்கள்... இன்னும் இலவசக் கூழ் என்ற பெயரில் வாரம் ஒருமுறை கூழ் ஊத்திக் கொண்டு தான் இருக்கின்றார்கள்..

எல்லோரும் கக்கூஸ் கழுவவேண்டும் என்று முதலாளி களில் ஒருத்தன் அட்டவணை போட்டான். அதனைக் கட்டிடத் தின் மத்தியில் ஒட்டியும் விட்டான். பிணங்கள் ஒன்று கூடின. கக்கூஸ் கழுவுவது பெண்களின் வேலையன்றோ? என்று கேள்வியும் எழுப்பின. பெண் பிணங்கள் தொடர்ந்து அழுது கொண்டிருந்தன. அட்டவணையின் வர்ணங்களையும் அது வரையப்பட்ட அழகையும் பார்த்து மகிழ்ந்தன ஆண் பிணங்கள். அட்டவணையில் ஒரு சிறுதூசு கூடப்படாதவாறு பாதுகாத்த தோடு மட்டுமல்லாது நிரந்தரமாக அதைப் பாதுகாக்கவென்று ஒரு துடிப்பான இளம் பிணத்தை நியமித்தும் விட்டன. கக்கூஸ் கழுவப்படாமலேயே கிடந்தது.

சமத்துவம் பேசியதால் இறந்து போன இரு பிணங்கள் திமிறின... சம்பள உயர்வு கேட்டன... முகமூடியை இறுக்கிய படியே முதலாளிகளில் ஒருவன் அன்பாக அதுகளை அழைத்துக் கடந்த மூன்று வாரங்களாகத்தான் பட்டினி கிடக்கும் சோகக் கதையை இரு நாட்களாகக் கூறினான்... தனது முடி காடாக இருப்பதற்கும் உடைகள் அலங்கோலமாக இருப்பதற்கும் அதுவே காரணம் என்றும் கூறி ஓவென்றழுதான்... இது எமது இனத்திற்கும் எம்மைப் போன்று இறந்து போனவர்களுக்குமான கட்டிடம், பணம் வெறும் காகிதம் என்று கையால் வரைந்த ஆயிரம் டொலரை எடுத்து உடனே நெருப்பு வைத்துப் பொசுக்கிக் காட்டினான்... பணம் வெறும் காகிதம் என்பதை ஏற்றுக் கொண்ட இரு பிணங்களும், தாம் இலவசமாக வேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதாக உறுதியளித்ததோடு மட்டுமல்லாது பத்தாயிரம் டொலர்களையும் அவனுக்குக் கொடுத்துதவின... அந்த இரு பிணங்களும் பணம் கொடுத்ததை அறிந்த மற்றைய பிணங்கள் போட்டி போட்டுக்கொண்டு தமது உடைமைகளை விற்று முதலாளிக்குப் பணம் கொடுத்தன..

கட்டிடம் உயர்ந்து விட்டது, கூட்டத்தில் ஒரு நாள் அறிவிக்கப்பட்டது. எல்லாப் பிணங்களும் ஆடிப்பாடின. அன்று அழுகல்களுக்குப் பஞ்சம் இல்லை. "கற்கள் உறுதியற்றவை எப்போதும் கட்டிடம் சரியலாம்.." ஒரு பிணம் அலறியது... உடனே அந்தப் பிணத்தைக் கொதிக்கும் எண்ணெய்க்குள் போட்டு எடுத்தார்கள்.. அதன் ஒரு கண்ணைப் பிடுங்கி நெற்றியில் வைத்து முழங்காலால் நசுக்கினான் ஒரு முதலாளி. தவறான தகவலைச் சொல்லும் பிணம் என்று அதற்குப் பெயர் சூட்டி கேலி செய்தன மற்றைய பிணங்கள்... ஒற்றைக் கண் பிணமாக அது அன்று தொடக்கம் அலைந்து கொண்டிருந்தது.

பிணங்கள் ஒன்றுகூடி ஒருவரைப்பற்றி ஒருவர் புகார் செய்வது கூடி வருவதைக்கண்ட முதலாளிகளில் ஒருவன் ஒற்றுமையின் மகத்துவத்தை அதுகளுக்கு விளக்கினான்... ஒருவர் கையை ஒருவர் பற்றி வட்டமாக நடக்கச் சொல்லிக் கொடுத்தான். முகத்திற்கு விலையுயர்ந்த மா வாங்கி வந்து பூசி விட்டு அழகோ அழகென்று ஆடிக்களித்தான்... பிணங்கள் முகம் சிவக்கச் சிரித்தன... புகார் கூறுவது தவறென்று தம்மைத் தாமே சவுக்காலடித்துக் கொண்டன...

துப்பாக்கியுடன் ஒருத்தன் கட்டிடத்திற்குள் நுழைந்தான்.. பிணங்கள் செய்வது அநியாயம் என்றான்... எம்மினத்திற்குக் கேவலம் என்றான்.. எல்லாப் பிண்ங்களுக்கும் பேச்சு, மற்றும் சிந்திக்கும் சுதந்திரம் வேண்டும் என்றான். நாம் இருப்பது ஜனநாயக நாடு என்றான்... இங்கும் யாருக்காவது அடிமைப் பட்டுப் போயின் பிணங்களை மீண்டும் உயிர் பெறச் செய்து விடுவேன் என்று மிரட்டினான்.. பிணங்கள் கிலியுடன் அங்கு மிங்கும் ஓடி ஒன்றோடொன்று மோதி உடைந்து விழுந்தன... ஒன்று இரண்டு பிணங்கள் துப்பாக்கிக்காரனுடன் ஓடியும் விட்டன.. அதில் ஒன்று, முறைக்கும் அந்தப்பெண் பிணம்.

இது எமது இனத்திற்கு நாம் செய்யும் துரோகம்.. எம்மினத்திற்குள் இருக்கும் ஒற்றுமையின்மையை இது எடுத்துக் காட்டுகின்றது என்று முதலாளிகள் மூவரும் தலையிலடித்துக் கதறினர்... ஓடிச்சென்ற இரு பிணங்களுக்குமாய், தான் இருவரை அழைத்து வருவேன் என்று ஒரு பிணம் தனது கண்ணைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோண்டி நெற்றியில் வைத்து அழுத்திச் சத்தியம் செய்து முதலாளிகளுக்கு ஆறுதல் கூறியது... முதலாளிகள் நிரம்பிய பைகளுடன் பச்சைக்கண்ணீரைத் துடைத்துக் கொண்டனர்...

திடீர்க் கூட்டம் ஒரு நாள் அறிவிக்கப்பட்டது. கட்டிடத்தின் நிலை மோசமாக இருப்பதாகவும் கற்களின் தரத்தை உயர்த்த வேண்டும் என்றும் முதலாளிகள் சோகமாக அழுதனர்... வயதில் மூத்த ஒரு பிணம் தனது அனுபவமும் திறமையும் கட்டிடத்தை உயர்த்த உதவும் என்றும், தான் இப்படிப் பல கட்டிடங்களை உயர்த்திக்கிழிக்க உதவியதாகவும் மார்பில் அடித்துத் தனக்கு ஒரு சந்தர்ப்பம் தரும்படியும் கேட்டுக் கொண்டது... முதலாளிகள் தமது தலைகளை மோதிக்கொண்ட பின்னர் ஒத்துக் கொண்டனர்... இருந்தும் தமது கண்களில் ஒன்றை முதிர்ந்த பிணத்தின் நெற்றியில் ஒட்டிவிட்டார்கள். முதிர்ந்த பிணம் இளம் பிணங்களைப் பின்னே தள்ளி, கட்டிட உயர்விற்கு இன்னும் நான்கைந்து முதிர்ந்த பிணங்கள் தேவை என்றது. உடனே ஓராயிரம் வயதுடைய பல பிணங்கள் அழைத்து வரப்பட்டன. இவற்றைப் பார்த்துக்கொண்டிருந்த இளம் பிணம் ஒன்று, முதிர்ந்த பிணத்தின் கால்களில் விழுந்து நக்கியது. உடனே அதையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டது முதிர்ந்த பிணம். தனக்குப் பின்னர் இந்தப்பதவி உனக்குத்தான் என்று மேடை போட்டுப்பேசி கைநாட்டிட்டுப் பத்திரமும் வழங்கியது. கால் நக்கிப்பிணம் என்று மற்றையவை மறைவில் அந்த இளம் பிணம் பற்றிக் கிசுகிசுத்தன.

பணத்தைச் சேமிப்பதோடு பிணங்களின் ஒற்றுமையை நாம் எல்லோருக்கும் காட்ட வேண்டும். எனவே அழுகல் தின்பதைத் தவிர்த்து மலிந்த விலையில் கழுநீர் குடித்து வயிற்றை நிறைக்க வேண்டும் என்றும், பாஸ்மதி அரிசிப்பைகள் கொண்டு உடைகள் தைக்க வேண்டும் என்றும் எல்லாப் பிணங்களிடமும் சத்தியப் பிரமாணம் கேட்டுக் கொண்டனர் முதலாளிகள். இருக்கும் இரண்டு மூன்று விரல்களுடன் கைகளை நீட்டிப் பல பிணங்கள் ஆவேசமாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டன... முறைத்த பிணங்களின் முகத்தில் பூஞ்சிப்போன கேக்கை தேய்த்து மகிழ்ந்தன, பெண் பிணங்கள் அழுதபடியே...

கொம்யூனிஸ்ட் பிணங்களுக்குத் தாம் ஏமாற்றப்படுகிறோம் என்ற சந்தேகம் எழுந்தது. முதலாளிகள் எப்போதும் தொழிலாளிகளை ஏய்ப்பவர்கள் என்ற தத்துவத்தை அவை நம்பின... தத்துவப் புத்தகங்களைப் புரட்டிப் பார்த்து உறுதியும் செய்தன... வெளியூர் பத்திரிகைகளுக்கு முதலாளிகள் ஒழிக எனப் புனைபெயரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரைகள் எழுதின. தமது திறமை, தரம் முதலாளிகளுக்குத் தெரியவில்லை என்று மேடையில் கோஷம் எழுப்பின.. அவை களின் வாய்கள் தைக்கப்பட்டு மீண்டும் வேலைக்கு அழைத்து வரப்பட்டன.

தரமற்ற கற்களுக்குக் கவர்ச்சியான நிறங்கள் அடிக்கப் பட்டுக் கட்டிட வேலை மிகவும் மும்முரமாகி வருகின்றது.. முனகும் பிணங்கள் இருட்டில் வைத்துச் சவுக்கடி கொடுத்து, புன்னகைத்த முகத்துடன் வெளியே அழைத்து வரப்படுகின்றன. கட்டிடக் காட்டிற்குள் புகுந்து கொண்ட எந்த ஒரு பிணமும் இனிமேல் வெளியேறாது. பூட்டி கதவிற்குள் முகமூடி போட்ட முதலாளிப் பிணங்கள் முணுமுணுத்துச் சிரித்தன. இருந்தும் சில பிணங்கள் வெளியேற முயல்கின்றவனவாம்.

✦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாதுமாகி நின்றாள்

**"எ**ன்ன பதிலைக் காணேலை?" புருவம் உயர ஆர்த்தியை ஆழமாகப் பார்த்தான் ராகுல். பின்னர் தன்னைச் சுதாரித்த படியே "சரி பிடிக்காட்டி விடுங்கோ" குரலைத் தாழ்த்திச் சிறிது குழைவதைப் போலச் சொன்னான். அவன் கேள்வியையே தான் காதில் வாங்காதது போல் பாவனை செய்து ரோட்டோரம் தம்மை மறந்து இறுகத் தழுவிக்கொண்டு நின்ற அந்த இளம் ஜோடியைக் கண்வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் ஆர்த்தி. அவர்களின் தழுவல் அவளுக்கு எந்தவிதமான சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. மாறாக எரிச்சலையே தந்தது. இருந்தாலும், தான் சலனப்பட்டதைப்போல் பாவனை செய்தவள், சிறிது வெட்கத்தையும் வேட்கையையும் முகத்தில் சிரமப்பட்டு வரவழைத்துக்கொண்டு ராகுலின் கண்களை மெதுவாக நோக்கினாள். அவன் சற்று சங்கடத்துடன் நெளிவது அவளுக்குப்புரிந்தது. அவள் எதிர்பார்த்ததும் அதைத்தான். இனிமேல் அவன் தன் கேள்வியையே மறந்து விடுவான். மனதில் சிறிது நிம்மதி ஆர்த்திக்கு. இருந்தும் இப்போதெல்லாம் அடிக்கடி அவன் இந்தக் கேள்வியைக் கேட்பதும் தான் பதில் கூற முடியாமல் தடுமாறுவதும் கூடிக்கொண்டே போகிறது. இன்றோடு சேர்த்து ஆறு, ஏழு முறைகள் கேட்டுவிட்டான். இனி மேலும் கேட்பான். ஏதாவது ஒரு பதிலை அவன் நம்பும்படியாகக் கூற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். அவள் திட்டமிட்டபடியே காய்கள் அழகாக நகர்ந்து கொண்டிருக்கும் வேளையில் ஏதாவது உளறி வைத்து அவனின் சந்தேகத்திற்குள்ளாக அவள் விரும்பவில்லை.

ராகுல் அவள் கைகளை மெதுவாகப் பற்றியபடியே நகர்ந்து ஒட்டுவது போல அமர்ந்து கொண்டான். அவனின் உடலில் இருந்து வந்த விலையுயர்ந்த வாசனைத்திரவியத்தின் நறுமணம் அவளின் நாசியைத்தாக்கியது. கைகளில் சிங்கப்பூரிலிருந்து அவன் அண்ணா சிவம் கொண்டு வந்து கொடுத்த கைக் கடிகாரம். ஆர்த்தியால் இவை ஒன்றையும் ரசிக்கமுடியவில்லை. இருந்தும் எல்லாமே பிடித்தது போல் தன்னைச் சிறிது ஒடுக்கிக் கொண்டு அவன் தோள்மேல் சாய்ந்து கொண்டாள். அவனின் வழிக்கப் படாத தாடி அவள் கன்னத்தைக்குத்தியது. ராகுல் கண்களை மூடி அந்த நெருக்கத்தை அனுபவிப்பது அவளுக்குப் புரிந்தது. குற்றஉணர்வால் நெஞ்சம் படபடத்தாலும் தானும் அந்தச் சுகத்தை அனுபவிக்க எண்ணிக்கொண்டவளாய்க் கண்களை மூடிக்கொண்டாள்.

இருந்தும் மனம் முழுவதும் ராகுல் சந்தேகப்படும்படியாய் எதுவும் நடந்துவிடக்கூடாது என்பதில் தீவிரமாக இருந்தது. திடீரெனத் தீப்பொறிபோல் அவள் மனதில் அந்த எண்ணம் தோன்றியது. உடனே சிறிது விலகி இருந்தவள், ராகுலின் முகத்தைப் பார்த்து "அப்போதை என்ன கேட்டனீங்கள்? ஏன் ரெண்டு மணித்தியாலம் travel பண்ணி அங்க இருந்து இங்க உள்ள college க்கு வாறன் எண்டா?" இப்போது அதற்கான பதிலைக் கேட்கும் mood இல் ராகுல் இல்லை. அது ஆர்த்திக்குப் புரிந்திருந்தாலும் இப்போது சொல்ல மறந்துவிட்டால் அவன் மீண்டும் ஒருமுறை கேட்கும்போது தான் தடுமாறிப் போகலாம் என்ற எண்ணம் எழ, தனது முகத்தைச் சோகமாக வைத்தபடியே "ஏன் எங்கட வீட்டுப் பிரச்சனை எல்லாத்தையும் உங்களுக்குச் சொல்லுவான் எண்டுதான், இவ்வளவு நாட்களும் நீங்கள் கேக்கேக்க சொல்லாமல் சமாளிச்சனான். ஆனால் இனியும் உங்களை என்னட்டை இருந்து பிரிச்சுப்பார்க்க நான் விரும் பேல்லை" கூறியபடியே அவன் கைகளைப்பற்றித் தன் நெஞ் சோடு அணைத்துக்கொண்டாள். ஆர்த்தியின் சோகம் கண்டு உணர்ச்சிவசப்பட்ட ராகுல் "இல்லை. நான் சும்மாதான் கேட்ட னான். அதிலை பிரச்சினை இருந்தால் விட்டிடுங்கோ." அவன் தடுமாறுவது கூட ஆர்த்திக்குப் பிடித்திருந்தது. அவனின் அன்பு, உண்மையான காதல், சிறிய கோழைத்தனம் எல்லாமே ஆர்த் திக்கு மிகவும் பிடித்திருந்தது. பாவம் ராகுல். என் மேல் எவ்வளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு வைத்திருக்கிறான். இவனைப் போய் நான் எப்படி? மீண்டும் மனச்சாட்சி அவளைக் கேள்வி கேட்க பலவந்தமாக அதைத்தள்ளிவிட்டு அவனைக் கண்கலங்கியபடியே பார்த்தவள் விம்மலோடு, "இல்லை. வீட்டிலை அண்ணியாலை எனக்கு ஒரே பிரச்சினை. வெளியிலை இருக்கிற நேரம்தான் கொஞ்சம நிம்மதியா இருக்கிறன். அதுதான் இப்பிடி." அம்மாவுக்கும் மேல் அன்புகாட்டும் அண்ணியைத் தன் சுயநலத்துக்காய் மனச்சாட்சி யின்றி வில்லியாக்கினாள். Travellingக்கே கனநேரம் போயிடும். அதாலை வீட்டிலை இருக்கிற நேரம் குறையும்தானே. கூசாமல் பொய் கூறிவிட்டு மீண்டும் விம்மத் தொடங்கினாள். ராகுல் துடி துடித்துப் போனவனாய் அவள் முகத்தைத் தன் கைகளில் ஏந்தி அவள் கண்ணீரைத் துடைத்துவிட்டான். பாவம் பெண்களாகப் பிறந்து விட்டாலே எவ்வளவு கஷ்டங்கள், எண்ணிக் கொண் டவன், "எனக்கு இப்ப விளங்குது நீங்கள் ஏன் கலியாணத்துக்கு அவசரப்படுத்திறீங்கள் எண்டு. பேசாமல் உங்கடை சாமான்களை எடுத்துக்கொண்டு என்னோடை வந்திடுங்கோ. எங்கடை அண்ணாவும் அண்ணியும் நல்ல ஆக்கள். உங்கடை அண்ணா, அண்ணி மாதிரி இல்லை. ஒண்டும் சொல்லமாட்டினம். நானும் கெதியா ஒரு வேலை தேடி எடுக்கிறன். அண்ணா சிங்கப்பூராலை வந்தவுடனை கலியாணத்தை வைக்கலாம்" என்றான்.

மீண்டும் வேதாளம் முருக்க மரத்தில் ஏறுவதைப் போல் சினம் வர, அண்ணா அண்ணா... எப்ப பார்த்தாலும் அண்ணா தான். வாய்விட்டுக் கத்த வேண்டும்போல் ஆத்திரம் வந்தது அவளுக்கு. "என்ர அண்ணி தன்ர தம்பியைக் கலியாணம் செய்யச் சொல்லி என்னைக் கரைச்சல் படுத்திறா. என்னாலை எவ்வளவு நாளைக்குத் தாக்குப்பிடிக்கலாம் எண்டு தெரியேல்லை. இப்பப் போய் உங்கடை அண்ணா வந்த பிறகுதான் கலியாணம் என்று நீங்க இழுத்தடிச்சா என்னை மறந்திடுங்கோ." சொல்லிய படியே கோபமாக எழும்பியவளின் கைகளைப் பிடித்து இழுத்துத் தனக்குப் பக்கத்தில் அமர வைத்த ராகுல், "சரி. கோவிக்காமல் என்ன செய்யலாம் எண்டு சொல்லும். எனக்கு ஒரே குழப்பமா இருக்கு. உமக்கே தெரியும் எனக்கு எல்லாமே என்ரை அண்ணா, அண்ணிதான். அவேலிட்டைச் சொல்லாமல் நான் ஒண்டும்...." ராகுல் கூறிக்கொண்டே போக, இவன் தன் அண்ணா மேல் வைத்திருப்பது ஒருவித பக்தி. இப்போது நான் அவசரப்பட்டால், எனக்கு நீர் வேண்டாம், அண்ணாக்குத் தெரியாமல் நான் ஒண்டும் செய்யமாட்டன் என்று கூறி என்னைக்கூட அவன் கைகழுவக் கூடும். பிறகு என் திட்டம் என் வாழ்க்கை எல்லாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விக்குறியாகிவிடும். இப்ப நான் ராகுல் மனம் நோகாமல் அவசரப்படாமல் முக்கியமாக என்மீது எந்தவிதச் சந்தேகமும் எழாமல் கதைக்க வேண்டும், எண்ணியவளாக, “இல்லை... எங்கட அண்ணா பற்றி உங்களுக்குத் தெரியாது. திடீரெண்டு ஒரு நாளைக்கு இண்டைக்கு உனக்குக் கலியாணம் எண்டு சொல்லி என்னையும் உங்களையும் பிரிச்சுப் போடுவினமோ எண்ட பயம் எனக்குக் கூடிக்கொண்டே வருகுது. நீங்கள் இல்லாமல் எனக்கு...” ஆர்த்தி கண்களைக் கசக்கியபடியே அவனைப் பார்த்தாள்.

அவளுக்கு அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. இவனை நான் எப்படி எல்லாம் வதைக்கிறேன். என் வாயிலிருந்து எவ்வளவு அழகாகப் பொய்கள் வந்து குவிகிறது. எவ்வளவு வடிவாக நடிக்கப் பழகிக்கொண்டு விட்டேன். அவளுக்குத் தன்னை நினைக்க வெறுப்பாக இருந்தது. தன் கலியாணத்தில் முழுச்சுதந்திரமும் கொடுத்திருக்கும் என் அண்ணா அண்ணி மேல் கூசாமல் இப்பிடி ஒரு பொய்யைச் சுமத்தி, இவை எல்லாம் எனக்குத் தேவைதானா? மீண்டும் அவள் குழம்பிப் போனாள். ஆர்த்தி சிந்தனையில் ஆழ்ந்துபோக “என்ன கோபமா? ஏன் பேசாமல் இருக்கிறீங்கள்? சரி, நீங்கள் சொன்னது போலவே செய்வம். அண்ணா வந்தாப்பிறகு விளக்கமாச் சொன்னா அவருக்கு விளங்கும். உம்மட அண்ணா மாதிரி இல்லை என்ரை அண்ணா. நல்ல understanding உள்ளவர்”. பெருமையோடு அவள் முகம் பார்த்துச் சொன்னான் ராகுல். ஆர்த்திக்குச் சிரிப்பாக வந்தது. என் பக்கம் காற்றடிக்கத் தொடங்கிவிட்டது, எண்ணிய வளாய் “அப்பிடி எண்டா. நீங்க என்ன சொல்லுறீங்கள்.” சிறிது சந்தேகத்துடன் அவனை நோக்கியவள் பின்னர் முகத்தில் சந்தோஷத்தை வரவழைத்தபடியே “அப்பிடியெண்டா நீங்கள் கலியாணத்துக்கு” ஆர்த்தியின் முகத்தில் தோன்றிய அந்த தேஜஸ் ராகுலின் நெஞ்சை நெகிழ வைத்தது. “ஓம். நான் அந்தப் பகல் வேலைக்குப் போகப் போறன். college ஐ இரவுக்கு மாத்தலாம் தானே.” ராகுல் கூற ஆர்த்தி உணர்ச்சிவசப்பட்டவளாய் ராகுலின் கைகளைப்பற்றிக் கொண்டாள். ராகுல் தொடர்ந்தான். “பிறகு பேசாமல் register பண்ணிப் போட்டு ஒரு இடம் பார்த்துக் கொண்டு போவம். என்ன... இப்ப சந்தோஷமா?” ராகுல் முகத்தில் சந்தோஷத்தை வரவழைக்க முயன்றாலும், தன்னைக் கனடாவுக்குக் கூப்பிட்டு ஆளாக்கிவிட்ட அண்ணாவுக்குத் தெரியாமல் கல்யாணம் செய்வதில் அவனுக்குக் கொஞ்சமும் விருப்பமில்லை. என்ன செய்வது? ஆர்த்தியும் பாவம்தானே. எந்த ஒரு காரணத்துக்காகவும் அவன் ஆர்த்தியை இழக்கத் தயாராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. அவன் அப்படிக் கூறியதும் ஆர்த்தி சந்தோஷம் தாளாமல் ராகுலை அணைத்துக் கன்னத்தில் முத்தமிட்டாள். "சரி சரி போதும். யாராவது பார்க்கப் போகினம்" என்ற ராகுல் "நான் இப்ப வீட்டைப் போகவேணும். இரவுக்கு call பண்ணுறன். சரியே." கூறிவிட்டு "ஒண்டுக்கும் யோசிக்காதையும். எல்லாம் நல்லபடியா நடக்கும். எல்லா ஒழுங்கையும் நானே செய்யிறன். நீர் வீட்டைவிட்டுக் கவனமா வந்தாப் போதும்." அவன் விடைபெறத், தனது பல நாளைய திட்டம் கைகூடும் நாள் கிட்டிவிட்ட சந்தோஷத்தில் ஆர்த்தி ஆகாயத்தில் மிதப்பதைப் போல உணர்ந்தாள்.

ஆர்த்தியின் அண்ணா அண்ணிக்கு ஒன்றுமாய்ப் புரிய வில்லை. எதற்காக அவரசப்பட்டுத் தங்களுக்குக் கூடச் சொல்லாமல் இப்படித் திருமணம் செய்து கொண்டுவந்து நிற்கிறார்கள். நாங்கள் ஒன்றும் காதலை எதிர்ப்பவர்கள் இல்லை என்று ஆர்த்திக்குத் தெரியும். அப்படி இருக்கும்போது ஏன் இந்த அவசரம். சரி ஏதோ சிறுபிள்ளைத்தனத்தில் செய்து விட்டார்கள். நாங்கள் தான் மன்னிக்க வேண்டும் என்று குழப்பத்தோடு தம்மைச் சமாதானம் செய்து கொண்டார்கள்.

ராகுலும் ஆர்த்தியும் தனிக்குடித்தனம் போய் நான்கு மாதங்கள் ஓடிவிட்டது. தன் தாம்பத்திய வாழ்க்கையில் ஏதும் குழப்பங்கள் வருமோ என்று சந்தேகத்தில் இருந்த ஆர்த்திக்கு எல்லாமே அழகாக அமைதியாகப் போய்க் கொண்டிருப்பது சந்தோஷத்தைத் தந்தது.

அன்று காலை வழமைபோல் ஆர்த்தியும் ராகுலும் வேலைக்குத் தயாராகிக் கொண்டிருக்கும்போது தொலைபேசி அழைப்பு வந்தது. ராகுலின் அண்ணா சிங்கப்பூரிலிருந்து வந்து விட்டதாகவும் ராகுலின் இந்தத் திடீர்த்திருமணத்தில் அவர் சிறிது மனம் நொந்துபோய் இருப்பதாகவும் அவர்கள் இருவரை யும் உடனே வீட்டுக்கு வந்து அவருக்கு ஆறுதல் கூறும்படியும் ராகுலின் அண்ணி ராகுலைக் கெஞ்சிக் கேட்டாள். அண்ணா மனம் நொந்துபோய்விட்டார் என்றதும் ராகுல் சோர்ந்து விட்டான். "அண்ணா எனக்கு எவ்வளவெல்லாம் செய்தார். நான் அவருக்குத் துரோகம் செய்துபோட்டன்." அவன் கலங்கி னான். ராகுலின் அண்ணா வந்துவிட்டார். செய்தி கேட்டதும் ஆர்த்தியின் மனத்தில் சொல்லமுடியாத பல அலைமோதல்கள். இன்று நான் அவரைச் சந்திக்கப் போகிறேன். இரண்டு ஆண்டு களுக்குப் பின்னர் மீண்டும். அவருக்கு என்னை நினை விருக்குமா? இல்லாவிட்டால் நான் சொல்லப்போவ தில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு ஒரு நல்ல வாழ்க்கை வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அது ராகுலின் மூலம் எனக்குக் கிடைத்து விட்டது. பழி வாங்கும் எண்ணம் இப்போது எனக்கு இல்லை. ஒரு வேளை என்னைக் கண்டதும், நடந்தது எல்லாவற்றையும் ராகுலிடம் அவர் கூறிவிட்டால்? ராகுல் என்னை வெறுப்பானா? வேண்டாம் எனக்கு நீ என்று என்னைத் தூக்கி எறிந்து விடுவானா? எது எப்படியாயினும் துணிவாக நின்று எதிர்கொள்ள வேண்டும். எண்ணியவளாக ராகுலுடன் அவன் அண்ணனைச் சந்திக்கப் புறப்பட்டாள் ஆர்த்தி.

வீட்டின் அழைப்புமணியை அழுத்திவிட்டு நிலை கொள்ளாது தவித்தான் ராகுல். கதவு திறக்க, ராகுலின் அண்ணி தயங்கியபடியே "உள்ளுக்கு வாங்கோ. அண்ணா மேலை நிக்கிறார். கூப்பிடுறன்" கூறிவிட்டு உள்ளே சென்றாள். ஆர்த்திக்கு கைகள் வியர்த்துப்போனது. வாழ்க்கையில் இன்று எனக்கு நிச்சயம் மறக்க முடியாத நாளாகத்தான் இருக்கும். நெஞ்சம் படபடக்க ஒன்றுமில்லாதது போலொரு வெறுமை உணர்வு அவளுக்குள் எழத்தொடங்கியது. மிகவும் சிரமப்பட்டுத் தன் உணர்வுகளை ஒரு நிலைப்படுத்திக் கொண்டாள். ராகுல் கைகளைப் பிசைந்தபடி தவிப்பது அவளுக்குக் கவலையைக் கொடுத்தது. அண்ணாவுக்குத் தெரியாமல் கல்யாணம் செய்து விட்ட குற்றஉணர்வு அவனுக்குள். எல்லாம் என்னால் வந்த வினை. என் சுயநலமான உணர்வில் ஒரு அப்பாவியைத் தவிக்க வைத்துவிட்டேன். மீண்டும் அவளுக்குள் குற்றஉணர்வு எழத் தொடங்கியது.

வீட்டின் படிகள் ஏற்படுத்திய ஒருவிதமான விநோதமான ஒலி, யாரோ இறங்கி வருகிறார்கள் என்று ஆர்த்திக்குக் கூறியது. பேசாமல் எழுந்து ஓடிவிடுவோமா, சிறுபிள்ளைபோல் அவள் மனம் தடுமாறியது. அருகில் இருந்த ஒரு பத்திரிகையை அவசரமாக எடுத்துப் படிப்பது போல் சிறிது முகத்தை மூட முயன்றாள். கைகள் நடுங்குவது அவளுக்குப் புரிந்தது. தாம் என்ன செய்கிறோம் என்றே அவளுக்குப் புரியவில்லை. திடீரெனத் தான் கோழையாகிப் போய்விட்டது போலொரு உணர்வு அவளுக்குள். ராகுல் எழும்புவது அவளுக்குத் தெரிந்தது. ஒருவித வினோதமான அந்த மணம், அவளுக்குப் பரிச்சயமான அந்த மணம், ஆர்த்திக்கு பழைய நினைவுகளை இழுத்து வர முயன்றது. சிறிது தலைசுற்றுவது போலிருந்தது அவளுக்கு. "ம்.. எப்படி இருக்கிறாய்?" அந்தக் கரகரத்த குரல். ஆர்த்தியின் உடல் இப்போது இலேசானது போல் இருந்தது. நாம் பறக்கிறோமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுக்குச் சந்தேகமாக இருந்தது. "ஆர்த்தி" ராகுலின் குரல் எங்கோ கிணத்துக்குள் இருந்து கேட்டது போல் இருந்தது. பத்திரிகையை அருகில் வைத்துவிட்டு நிமிர்ந்தாள். முகத்தில் புன்னகையுடன் அவளை நோக்கிய ராகுலின் அண்ணாவின் முகம் யாரோ ஓங்கி அறைந்தது போல் ஒரு முறை அசைந்து கொண்டது. அந்தக் கருமையான முகம் இறுக்கத்தாலும் கோபத்தாலும் மேலும் கருகிவிட்டதை அவள் உணர்ந்து கொண்டாள். "இது அண்ணா. ஆர்த்தி வாரும். காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்குவம்." ராகுல் ஆர்த்தியின் கைகளைப்பற்ற அதைப் பார்க்கச் சகிக்காமல் "அதெல்லாம் வேண்டாம்" அவசரமாக விலகிக் கொண்டார் அவர். பின்னர் "நான் அவசரமா வெளியிலை ஒருக்காப் போகவேணும். வந்து கதைக்கிறன். நீங்கள் நிண்டு சாப்பிட்டிட்டுப் போங்கோ." சொல்லிவிட்டு அவசரமாக வெளியே போய்விட்டார் அவர். ராகுல் மௌனமானான். அவன் கண்கள் கலங்கிவிட்டது. "அண்ணாக்கு இன்னம் கோபம் போகேல்லை" கூறியபடியே அண்ணியை நோக்கினான். அவள் புரியாதவளாக "நீங்கள் வந்திருக்கிறீங்கள் எண்டு நல்ல சந்தோஷமாக வந்தவர். உந்தாளுக்கு என்ன நடந்தது" குழம்பிப் போனாள் அவள். ஆர்த்தியிடம் இருந்து ஒரு பெரிய பெருமூச்சு வெளிவந்தது. என்னை அடையாம் கண்டுகொண்டு விட்டார். நிச்சயமாக என் வாழ்வில் இனிமேல் பிரச்சனைதான். அவளுக்கு வாய் விட்டு அழவேண்டும் போல் இருந்தது. இனி என்ன செய்வது என்று தெரியாமல் எல்லோரும சிறிது தடுமாறிப்போய் நின்றுவிட வீட்டுக்கு வந்தவர்களை உபசரிக்க வேண்டிய கட்டாயத்தை உணர்ந்த அண்ணி "அண்ணா கெதியா வந்திடுவார். நான் டீ போட்டுக் கொண்டு வாறன் இருங்கோ." அவள் குசினியை நோக்கிச் சென்றாள். "நானுங்களுக்கு help பண்ணிறன்" ஆர்த்தி அண்ணியைப் பின் தொடர்ந்தாள், ராகுலை நிமிர்ந்து பார்க்கும் திராணியின்றி.

அண்ணியுடன் சேர்ந்து சமையல் வேலையில் ஆர்த்தி ஈடுபட்டுவிட, ராகுல், அண்ணாவின் பிள்ளைகளுக்கு விளைாட்டுக் காட்டிக் கொண்டிருந்தான். இப்படியே ஒரு சந்தோஷமான சூழ்நிலை என் வாழ்வில் நிலைக்காதா? இப்போது ராகுலின் அண்ணாவின் மனநிலை எப்படி இருக்கும். ஆர்த்தி தவியாய்த் தவித்தாள். இப்படியே கேள்விக்குறியாக எப்படிக் காலம் தள்ளப் போகிறேன். அவள் சிந்தனையைக் கலைப்பதுபோல் தொலை பேசி சிணுங்கியது. Receiverஐக் கையில் எடுத்த அண்ணி "என்னப்பா அவேலை வரச் சொல்லிப்போட்டு அப்பிடி உங்களுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கென்ன வேலை." கேட்டவளின் முகம் இறுகிப்போனது. ஆர்த்தி யின் கைகள் நடுங்கத் தொடங்கியது. அண்ணி சிரமப்பட்டு முகத்தில் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு "ராகுல் அண்ணா போனிலை. உம்மோடை கதைக்க வேணுமாம்" கூறிவிட்டு ஆர்த்தியைப் பார்த்து "எல்லாத்துக்கும் ஒரு கோவமும் கத்தலும்" என்றாள் சினத்துடன். ஆர்த்திக்கு அப்பாடா என்றிருந்தது. தன்னைப்பற்றி ஒன்றும் கூறவில்லை. ஆனால் ராகுலுடன் கதைக்கும்போது...? ஆர்த்தி அவசரமாகக் கைகளைக் கழுவிவிட்டு வெளியே வந்து பிள்ளைகளுடன் விளையாடுவதுபோல் ராகுலின் முகத்தை நோட்டமிட்டாள். "ஓம் அண்ணா... இல்லை அண்ணா..." என்று அவன் குழைந்து குழைந்து முகத்தில் சந்தோஷத்துடன் கதைத்துக் கொண்டிருந்தது ஆர்த்திக்குக் கொஞ்சம் வியப்போடு கூடிய சந்தோஷத்தைத் தந்தது. அப்படியானால் அவர் தன்னைப் பற்றி ராகுலுக்குச் சொல்லப்போவதில்லை. என் இந்த வாழ்க்கை நிலையானது. அவள் மனம் குதூகலித்தது. அண்ணாவின் பிள்ளைகளைச் சந்தோஷத்துடன் கட்டிக்கொண்டாள் அவள். அவர்கள் அவளை வினோதமாகப் பார்த்தார்கள். ஆர்த்தி வாய் விட்டுச் சிரித்தாள்.

அண்ணா தனது திருமணத்தை ஏற்றுக்கொண்டுவிட்டார். வாழ்த்தும் கூறினார். ஏதோ அவசரமான வேலையாம். அதனால் தான் போய்விட்டார். கெதியாக வந்துவிடுவார். ராகுல் தன்னைத் தானே சமாதானம் செய்துகொண்டான். ஆனால் இரவுவரை நின்று பார்த்தும் சிவம் வீட்டுக்கு வரவில்லை. இரண்டு மூன்று தடவைகள் போன் செய்து தான் வந்த வேலை இன்னும் முடிய வில்லை என்று ராகுலிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். ஆர்த்திக்குப் புரிந்தது. தாம் அங்கு நிற்கும் வரை அவர் வீட்டுக்கு வரப்போவதில்லை. மீண்டும் ஒருமுறை அவளைச் சந்திப்பதை அவர் தவிர்ப்பது அவளுக்குப் புரிந்தது. அதனால் நாளைக்கு வேலை. கெதியாகப் படுக்கைக்குப்போகவேண்டும் என்று கூறி ராகுலை வீட்டுக்கு அழைத்து வந்துவிட்டாள். ஆனால் அவள் மனம் தவித்தது. எத்தனை நாளைக்கு நானும் சிவமும் இப்படிக் கண்ணாமூச்சி ஆடமுடியும். பேசாமல் கெதியாக அவர் சிங்கப்பூர் போய்விட்டால் நல்லது என்று எண்ணிக்கொண்டாள்.

அடுத்த நாள் அவள் அலுவலகத்தில் வேலையில் மூழ்கி இருக்கும்போது அவளைத் தேடி யாரோ வந்திருப்பதாகத் தகவல் வந்தது. யாராக இருக்கும் என்று எண்ணியபடியே வெளியே வந்தவள் ஒரு கணம் திகைத்துவிட்டாள். கையில் சிகரட்டும் சிவந்த கண்களுமாகத் தனிமையான ஒரு இடத்தில் சிவம் நின்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தார். இவர் எதற்காக இங்கே வந்தார்? ஒருவேளை தான் செய்த தவறுக்கு மன்னிப்புக் கேட்கப் போகிறாரோ? ராகுலிடமும் அண்ணியிடமும் தன்னைப்பற்றிச் சொல்ல வேண்டாம் என்று கெஞ்சப் போகிறாரோ? நான் எப்படி என் கதையை அவர்களுக்குச் சொல்லமுடியும். எண்ணியவளாக மெதுவாகச் சிவத்தை நோக்கி நடந்து வந்தாள். சிவத்தின் முகத்தில் ஏளனப் புன்னகை எழுவது அவளுக்குத் தெரிந்தது. ஆர்த்தியின் மனதில் மெல்ல மெல்ல ஆக்ரோசம் எழுந்து தீ ஜுவாலை போல் கொழுந்துவிடத் தொடங்கியது. இவர் சமாதானத்துக்கு வரவில்லை. மீண்டும் ஒருமுறை என் உணர்வுகளோடு விளையாடிப் பார்க்க வந்திருக்கும் கொடிய பாம்பு இது. அருகில் வந்தவள் “என்ன வேணும்? எனக்கு நிறைய வேலை இருக்கு” என்றாள். சிவம் வாயை ஆவென்று பிளந்துசிரித்தபடியே “ஓ... என்ன வேலையாக்கும்” என்றான் நக்கலாக. பின்னர் “நல்லாத்தான் பத்தினிக்கு நடிக்கிறாய். பேசாமல் படங்களிலை நடிக்கப் போகலாமே. நல்ல காசு கிடைக்கும்.” கூறிவிட்டுத் தன் ஜோக்கைத் தானே ரசித்துச் சிரித்தான். “உன்னோட கதைக்க எனக்கு நேரமில்லை” கூறிவிட்டு ஆர்த்தி திரும்ப, “என்ன மரியாதை குறையுது. உன்ரை உந்த வாழ்க்கை எத்தினை நாளைக்கு? ஆ.. என்ரை தம்பியை ஏமாத்திக் கெட்டிக்காரத் தனமாக் கலியாணம் செய்துபோட்டன் என்று மட்டும் நினைக் காதை. பேசாமல் பெட்டி படுக்கையோடை போயிடு. இல்லாட்டி நடக்கிறதே வேறை. இந்தச் சிவத்தைப் பற்றி உனக்குத் தெரியாது.” கோபக்கனல் முகத்தில் தெறிக்க கத்தத் தொடங்கினான் சிவம். ஆர்த்திக்கு மனம் இபபோது இரும்பாகி விட்டது போல் இருந்தது. இனிமேல் நடப்பது நடக்கட்டும். இவருக்கு ஒரு பாடம் படிப்பிக்காமல் நான் விடப்போவதில்லை. எண்ணியவள் வாய் விட்டுச்சிரிக்க தொடங்கினாள். “என்னடி சிரிக்கிறாய்?” கேள்வி யோடு பல கெட்ட வார்த்தைகளும் சிவத்தின் வாயி லிருந்து வரத் தொடங்கியது. “ஓ... உன்னைப்பற்றித்தான் எனக்கு நல்லாத் தெரியுமே. cheap ஆ ஆக்களைக் கூட்டிக்கொண்டு வாறன். எங்கட ஆக்களுக்கு help பண்ணவேணும் எண்டு சொல்லிப் போட்டு, தெரியாத இடங்களுக்கு பொம்பிளைகளைக் கூட்டிக் கொண்டு போய், உன்ரை ஆசைக்குக் கட்டுப்படவேணும் இல்லாட்டி அங்கேயே விட்டிட்டுப் போய்விடுவன் எண்டு பொம்பிளை யளைப் பலி போடுற ஆசாமி நீ. எத்தினை எத்தினை பொம்பிளைகள் பயத்தாலை உன்ர ஆசைக்குப் பலியாச்சினம். கலியாணம் செய்தவரைக் கூட நீ விட்டுவைக்கேலை. உன்னால


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் பாதிச்சுத் தற்கொலை செய்தாக்களைக்கூட எனக்குத் தெரியும். உன்ர விளையாட்டு எல்லாரிட்டையும் சரிவராது.

இந்த ஆர்த்தியைப் போவும் சில ஆக்கள் இருக்கத்தான் செய்யினம். அப்ப உன்னட்டை அம்பிட்டுப் பயத்திலை பலியாகிப் போனது உண்மை தான். ஆனால் நீ இப்ப பாக்கிற ஆர்த்தி வேற. நான் எதுக்கும் துணிஞ்சிட்டன். உன்ர குடும்பத்தைப் பழிவாங்க வேணும் எண்டுதான் உன்ர தம்பியைக் கலைச்சுக் கலைச்சு காதலிச்சன். பிறகு தான் தெரிஞ்சுது, உன்னட்ட இருக்கிற எந்தக் கெட்ட குணமும் ராகுலிட்ட இல்லை. எனக்கு அவர் தான் புருஷன். உன்னாலை முடிஞ்சதைச் செய்துபார். ஆனால் ஒண்டு மட்டும் சொல்லுறன். ஏஜென்சி ஆக்களைக் கூட்டிக்கொண்டு வாறன் எண்டு இனி மேலும் சிங்கப்பூர் பக்கம் போனால் நான் சும்மா இருக்கமாட்டடன். உன்னைப்பற்றின முழுவிபரமும் எழுதி என்ர ஃபிரண்ட் இட்டக் குடுத்திருக்கிறன். எனக்கு ஏதாவது நடந்தால் அந்த லெட்டர் உடனடியாய் போலீஸ் இட்டப் போகும். பேசாமல் போய் இனியாவது குடும்பத்துக்கு ஒரு நல்ல ஆம்பிளையா இருக்கிற அலுவலைப்பார்." சொல்லிவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் வேகமாக அலுவலகத்தை நோக்கி நடந்த ஆர்த்தியைப் பிரமை பிடித்தது போல் பார்த்துக் கொண்டிருந்தான் சிவம்.

✦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ள்" களும் "ன்" களும்

நடு நிசியின் நிசப்தம். இரவில் இரை தேடும் உயிர்கள் கூடு உண்ட பின் குட்டித் தூக்கம் போடுகின்றனவோ? அலறியடித்துக் கொண்டு உயிர் காக்க விரையும் அம்புலன்ஸ் கூட இன்று இல்லை. எல்லாமே களைத்து, எல்லாமுமே ஓய்வெடுத்துக் கொள்வதாய் என் மனதில் ஓர் பிரமை பிடித்திருந்தது. உயிரினங்கள் அச்சம் விடுத்து, ஆழ்ந்து தூங்குதல் எனக்கும் பிடித்திருந்தது.

கலவிக்குப் பின்னர் களைத்துவிட்ட உடம்பு, மீண்டும் உயிர் பெறப் புரண்டு படுக்கிறேன்.

நிசப்தத்தை நிக்கிரகித்த மெல்லிய காலடி ஓசை. திரும்பிப் பார்க்கிறேன். அவன் ஆழ்ந்து தூங்கிக்கொண்டிருந்தான். "மேலறையில் எல்லாரும் நல்ல நித்திரை கீழ வந்து சாமான்களை எல்லாம் களவெடுத்துக் கொண்டு போட்டான்கள்". கேட்ட போது நம்ப முடியவில்லை. எப்படிச் சாத்தியம்? எல்லோரையும் விட எனக்கொரு புலன் கூடுதலாக இருப்பதாய் ஒரு நினைப்பு. (என் வீட்டில் இன்னும் களவு போகவில்லை) கதவைத் திறந்து எட்டிப் பார்க்கிறேன். ரிஷி நடை பயின்றுகொண்டிருந்தான். பகலில் தொம் தொம்மென்றிருக்கும் அவன் நடை, நகங்களை ஆழமாகக் கடித்துக் கொண்டிருந்தான். ஏதோ நேற்றுத்தான் push... push என்று கூறக்கேட்டு வழுக்கி வந்து வெளியே விழுந்தவன் போலிருப்பவன் இன்று நெஞ்சில் முடியும் அரும்புமீசையும் என்னை அண்ணாந்து பார்க்க வைக்கிறான். அவன் ஆழமாகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திப்பது தெரிந்தது.

போன தடவை இதே போல் நடுஜாமம் நடை பயிலக் கண்டு அடிவயிற்றில் புளி கரைய "என்னப்பு" என்று தலை தடவிக் கேட்ட போது சிரித்தபடியே "இல்லையம்மா exam வருது அதுதான் படிக்கிறன்" என்றான். எனக்குப் புஸ்ஸென்று போய் விட்டது. (பெரிதாக ஒரு பிரச்சனை எதிர்பார்த்தேன் போலும். அமைதியான வாழ்க்கை கூட சலிப்படிக்கும் சில வேளைகளில்) நான் அசடு வழியச் சிரித்தேன். படிப்பதிலும் எத்தனை வகை.

என் தம்பி கிச்சா Ph.D. முடித்தவன். மேசை முழுவதும் பேனாக் குத்தல்கள். "அருமந்த மேசை" அம்மா அடிக்கடி அலுத்துக் கொள்வாள். என் வீட்டு மேசை தப்பித்ததாய் நான் ஒரு போதும் எண்ணியதில்லை. ஆயிரம் மேசைகள் வாங்கிக் குவிப்பதற்கும் தயாராய் இருக்கும் தாய் என்பது என் எண்ணம். எனக்குப் பெருமையாய் இருந்தது. ஒரு நாளேனும் exam வருகுது போய்ப்படி" சொல்வதற்கு ரிஷி எனை வைக்கவில்லை. உலகம் புரிந்தவன். நிச்சயம் ஜெயிப்பான். மீண்டும் அவன் தலை தடவி "ஏதாவது குடிக்க வேணுமே?" கேட்ட போது வெட்கப்பட்டான். இப்போதெல்லாம் பிறந்த நாளுக்கு மட்டும் கன்னத்தில் முத்தமிடலாம். நான் வேண்டுமென்றே கட்டிப் பிடித்து அவனைச் சீண்டிப் பார்த்த நாட்கள் பல. "Mom please" கன்னங்கள் சிவக்கும். எனக்குப் பெருமையாயினும் என் வயது நினைவிற்கு வர மனம் களைத்தது. (இதுதான் சுகமான சுமையோ?)

ஆனால் இன்று? இது இரண்டு மாத விடுமுறையின் முதல் வாரம். "exam வருகுது படிக்கிறன்"

நிச்சயம் சொல்ல முடியாது.

அப்படியானால் என்னவாக இருக்கும்?

இந்த முறை உண்மையிலேயே பிரச்சனை தானோ?

முதல் காதல் முறிந்திருக்குமோ?

என் குஞ்சை ஏமாற்றிய அந்த முகந்தெரியாத ராட்சசியை மனதுக்குள் திட்டித்தீர்த்தேன். இருக்காது. அவனுக்கும் எனக்கு மான உறவு காதலாயினும் சொல்ல வைக்கும் என்ற நம்பிக்கை எனக்குள் இருந்தது.

அம்மாவுக்கும் மேலாய்... கட்டிலுக்குக் கீழே ஈரமாயும், காய்ந்தும் toilet paper.

கையால் நான் அள்ளிக் குப்பைத் தொட்டிக்குள் போட துடித்துப் போய்த் தவறு செய்து விட்டதாய்த் தலை குனிந்தவன். "இனிமேல் குப்பைத் தொட்டிக்குள் போட வேணும்" கூறிவிட்டுப் போனபோது கண்கள் மிளிர நன்றியோடு எனைப் பார்த்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்தவன்.

காதல் வந்திருப்பின் பகிர்ந்திருப்பான் என்னோடு. நம்பிக்கையிருந்தது. ஒருத்தருக்கும் கிடைக்காத அம்மா நானென்பது என் நினைப்பு.

காதல் இல்லாவிடின் என்னவாக இருக்கும். தேடல் தொடர்ந்தது. நான் அவன் மனம் நோக ஏதாவது... நானா? ச்சீ... "The perfect Mom in the world" அவனுக்கும் எனக்குமான உறவு மிகவும் தெளிவானதும் கூட. தாய்மை என்ற உறவின் தூய்மையை விட, தனிமனிதச் சுதந்திரத்தை நேசிக்கும் தெளிவு அவனிடமிருப்பது அவன் பேச்சில் நான் கண்டு மலைத்ததுண்டு.

அம்மாவேயாயினும் அவளும் ஆசாபாசங்களுக்குட்பட்ட தனி மனுஷி. அவளின் சுதந்திரத்தில் தலையிடல் மகனாக இருப்பினும் நாகரீகமற்றது. புரிதல் தெரிந்த புதல்வன் அவன். சுதந்திரம் அவனுக்கும் எனக்கும் அழகாகவும் அளவாகவும் இருந்தது.

அப்படியாயின் இன்று இந்த நடுநிசி நடைக்கு என்ன காரணம்? தேடல் தெளிவுற்றுப் போக அவனிடமே கேட்டேன். கண்கள் தடுமாற சிரமப்பட்டுச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு "Its nothing mom. நாளைக்கு வேலைக்குப்போக வேணும் போய்ப் படுங்கோ". அவன் கூற எங்கோ தொலைவில் போய் விழுந்தது போலொரு உணர்வு எனக்குள் முதல் முறையாக எதையோ என்னிடமிருந்து மறைக்கிறான். இருவருக்குள்ளும் கற்பனையாய் அகன்றது இடைவெளி. (எவ்வளவு காலத்திற்குத் தான் Mama's boy ஆக வைத்திருக்கும் எண்ணமோ?) அவனைச் சிறிது நேரம் வைத்த கண் வாங்காமல் பார்த்தேன். கண்களைத் தாழ்த்திக் கொண்டான் அவன். எனக்குக் கோபம் வந்தது. எப்படி இவனால் என்னிடமிருந்த "The perfect mom in the world" ஆட்டங்கண்டது. அழுது விடுவேனோ? பயம் வந்தது. "நாளைக்கு வேலைக்குப் போக வேணும்" சொல்லிவிட்டு நகர்ந்தேன். "ராஸ்கல், முளைச்சு மூண்டு இலை விடேலை" ஒரு நொடிப் பொழுதில் சாதாரண தாய்க்கும் கீழே போய் வந்தேன். ஏமாற்றங்கள் மனிதரை எப்படியெல்லாம் மாற்றிவிடும். கட்டிலில் தொப்பென்னு வேண்டுமென்றே விழுந்தேன். அவன் குறட்டை ஒருமுறை அடங்கி மீண்டும் தொடர்ந்தது. "மேலே அறைக்குள்ள எல்லாரும் நல்ல நித்திரை" இவனும் அவர்களில் ஒருத்தன். எரிச்சல் வந்தது. வீணீர் அருவருத்தது. சில மணிநேரம் முன்பு பார்த்துப் பார்த்துப் பூரித்த முகம் இப்போது எரிச்சலானது. அழகான அமைதியான வாழ்க்கை ஒருத்தருக்கும் இல்லை. வாய் முணுமுணுக்க, தனித்தது போலொரு பிரமை. வாழ்க்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுத்தது.

தண்டவாளத்தில் தலையைக் குடுத்து இவர்களையெல்லாம் தவிக்க விட்டால் என்ன? குரோதம் வந்தது.

நித்திரை கண்களைச் சுழற்ற, கனக்கும் நெஞ்சம் விழி விழி என்று உலுக்கிப்போட்டது.

ரிஷி அறைக்குள் சென்று பூட்டிக் கொள்ளும் சத்தம் கேட்க பெரிய்ய..... இவர் அம்மாட்ட இருந்து மறைக்குமளவுக்கு ரகசியம் வந்து விட்டது வாழ்க்கையில். நாளை மதிய உணவிற்குப் பின் வேலையில் சுழற்றிப் போடுவது ஞாபகத்திற்கு வர கண்களை இறுகமூடி, சிந்தனையை நெற்றிப்பொட்டிற்கு நகர்த்தி மிதப்பதற்கு முயன்றேன். பொக்கை வாய்ச்சிரிப்போடு தத்தித் தத்தி நடந்து வந்து பிஞ்சுக்கைகளால் கழுத்தைக்கட்டி முத்தமிட்ட குட்டிப் பயல். எட்டு வயதானபோதும் அம்மா முதுகில் காலகட்டி தூங்கி எழும் குண்டுப் பயல் என்னடா அப்பிடி ரகசியம்... கோபம் தணிய, பாசம் சோகமாக, ரிஷியின் அறைக்கதவைத் தட்டிவிட்டு உள்ளே போனேன். (வளந்த பிள்ளைக்குப் privacy வேணும் வெள்ளையரின் policy ஐ அப்படியே கடைப்பிடித்தேன்.) படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை வைத்துவிட்டு என் முகம் பார்த்தான் ரிஷி. நான் மௌனம் சாதித்தேன். "Stupid me mom... its really nothing" என்றான். என் மௌனம் தொடர்ந்தது.

அவன் கண்கள் கலங்கின, "என்ர ராசா உனக்கு என்ன கவலை". கட்டிக் கொண்டு கதற மனம் ஏங்கியும் நான் புல்லாகிப் பூடாய், (புழுவாய்) மரமாகி அசையாதிருந்தேன். என் மௌனம் அவனுக்குப் பயத்தைத் தந்ததோ என்னவோ மீண்டும் சிறிது நேரம் சிந்தித்தபடியே அறைக்குள் அங்குமிங்கும் நடந்தான். எனக்கு ஏனோ குணா திரைப்படக்கமல் கண்முன்னே வந்து போனது. சிறிது நேரத்தின் பின்னர் அருகில் வந்திருந்தான் ரிஷி. அவன் இதழ்கள் அழுகையை அடக்கத் துடித்தன. கால்கள் நிலத்தை உதைந்தன. கைகள் ஒன்றையொன்று ஆதரவாக அழுத்திப் பிடித்தன. என் அடிவயிற்றின் உருண்டை, தன் வேலையைத் தொடங்கியது. அவன் கூறப்போவதைக் கேட்டு நடுநிசியின் நிசப்தம் கலையப் போவதாய்க் கவலைப்பட்டேன். பயத்தோடு ரிஷி என் முகம் நோக்கினான். குழந்தை போல் சிரித்தான். மீண்டும் "Stupid me mom சொன்னாச் சிரிப்பீங்கள்" என்றான். என் பொறுமை கடைசித் தேர்வுக்கு நகர்ந்தது.

"இல்லை mom புது High School க்குப் போறதை நினைக்கப் பயமா இருக்கு. எல்லாமே புதுசா இருக்கக் போகுது. என்ர friends ஐ விட்டிட்டு..." விம்மியபடியே என் தோளில் சாய்ந்தான். இப்போது எனக்குப் புஸ்ஸென்று போகவில்லை. ஏனோ மனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலித்தது. தோளில் சாய்ந்திருந்தவனின் தலை தடவி, முகம் தூக்கிக் கண்ணீரைத் துடைத்துவிட்டேன். நான் பல்கடித்து வர இருக்கும் கண்ணீரைக் கட்டுப்படுத்திச் சிரிக்க முயன்றபடியே "என்னப்பு எல்லாரும் தானே புதுசா வரப் போகினம். நீ நல்ல கெட்டிக்காறன். உனக்கு நல்ல friends கிடைப்பினம். யோசிக்காத சரியா". என்னால் முடிந்தது இதுதான் போல் கூறினேன். அவன் விளங்கியும் விளங்காமலும் என்னைப் பார்த்தான்" "ஒரு ஒண்டு ரெண்டு கிழமைக்கு ஒரு மாதிரித்தான் இருக்கும். பிறகு எல்லாம் சரியாகீடும். இப்பிடித்தான் நானும் school மாறேக்க பயந்தனான் பிறகு பள்ளிக் கூடமே என்ர கையுக்க தான் தெரியுமே" சொல்லி விட்டுப் பொய்யாகச் சிரித்தேன். (இது எனக்குப் பழக்கப்பட்ட ஒன்று)

ரிஷி நிம்மதியோடு எனைப் பார்த்துவிட்டுத் தலையணையை என் பக்கமாகக் கொஞ்சம் இழுத்துவிட்டுச் சாய்ந்து கொண்டான். என் முகம் பார்த்து பொக்கை வாய்ச் சிரிப்புச் சிரித்துப் பிஞ்சுக்கையால் தலைமயிர் பிடித்திழுக்கும் குட்டிப் பயல் போல், சில நிமிடங்கள் எனக்குப் பட்டது. அவன் அருகில் படுத்து அணைத்துக்கொண்டேன். "See Mom I told you... its really nothing" என்றான் மீண்டும். Nothing.... Nothing... இல்லை இது Something ஆகவே எனக்குப்பட்டது. கண்களை மூடி மூச்சிழுத்து நிம்மதியை நான் தேட, நிம்மதி அடைந்ததற்கு அடையாளமாய் ஒரு பெரு மூச்சுடன் கண்ணயர்ந்தான் ரிஷி.

வெள்ளைச்சட்டை, வெள்ளை socks, வெள்ளைச் சப்பாத்து, எண்ணெய் வைத்து இறுக இழுத்து இரட்டைப் பின்னல் பின்னி, கறுப்பு ரிப்பனால் மடித்துக் கட்டி, அளவாகப் powder போட்டு சிரட்டைப் பொட்டு வைத்து... ம் அப்பாவின் மகாராணி கண்ணாடியில் அழகாகத்தான் இருக்கிறாள். மூக்கின் நுனியில் மெல்லிய மஞ்சள் நிறச்சளியுடன் ஒற்றை விரலை வாயுக்குள் வைத்துச் சூப்பியபடியே பொறாமை பொங்கும் கண்களுடன் சிட்டுவையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் கிச்சா. அருகில் வந்து தன்னைத் தொட்டு விடுவானோ என்ற அச்சத்தில் அடிக்கடி கண்ணாடியிலிருந்து கண்களை அகற்றி கிச்சாவைப் பார்த்தாள் சிட்டு. அவள் பார்க்காத வேளைகளில் மெல்ல மெல்லத் தன் கால்களை அவள் பக்கம் நகர்த்திக் கொண்டிருந்தான் கிச்சா. சிட்டு தன் விரல்களை இறுக மடித்துக் கைகளைப் பலப்படுத்திக் கொண்டாள்.

கிச்சா தன்னைத் தொடும் போது விண் என்று அவன் முதுகில் ஓங்கிக்குத்த அவள் கண்கள் இடம் தேடிக் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தாள். பட்டணத்தில் அவள் படித்ததில்லை. பட்டணத்துப் பாடசாலைக்கு மகளை நேரத்திற்குப் அனுப்பிவிடும் அவசரமும் பதட்டமும் அவளுக்கு.

அப்பாவின் முகத்தில் பெருமை. தனக்குப் பிறகுப் பட்டணத்துப் பாடசாலைக்குப் படிக்கப் போகும் மகளை பெருமையுடன் பார்த்தார் அவர். கழுத்தில் sethoscope உடன் அவர் அன்பு மகாராணி சிரித்துக் கொண்டு நின்றாள். பக்கத்து வீட்டுப் பதினாறு வயதுப் பெண்ணுக்குப் பேய் பிடித்தபோது ஒரு மாதமாக அவர்களுடன் தங்கிப் பேயை விரட்டிய சாமியாரிடம் தன் மகளின் எதிர்காலம் பற்றிக் கேட்டிருந்தார் அப்பா. “உங்கட மகள் நிச்சயம் குழாய் மாட்டுவாள்” என்று சாமியார் கூறியிருந்ததன் பேரில், சிட்டு பட்டணத்துப்பெரிய பாடசாலைக்கு மாற்றப்பட்டாள். (சிட்டு குழாய் மாட்டியது நிச்சயம். கனடாக் குளிர் அவளைக் குழாய் மாட்ட வைத்திருந்தது)

அம்மாவிற்கு ஒரு பெரிய முத்தத்தைக் கொடுத்துவிட்டு கிச்சாவின் மேல் ஒரு ஏளனப்பார்வையை வீசிவிட்டு அப்பாவின் சைக்கிளில் ஏறிப்பட்டணம் புறப்பட்டாள் சிட்டு.

வழி நெடுக அலுப்படிக்கும் புத்திமதிகளை அள்ளி வீசிக் கொண்டு வந்தார் அப்பா.

பெருமையால் நிறைந்திருந்த சிட்டுமனம் பாடசாலை நெருங்க நெருங்க பயத்தினால் படபடக்கத் தொடங்கியது. அந்தப் பெரீய்ய... பழைய ரகக்கட்டிடத்தைக் காட்டி இதுதான் உன் பாடசாலை என்றார் அப்பா. சிட்டுவின் கால்கள் குளிர்ந்து சோர்ந்து போனது. பேயறைந்தது போல் அப்பாவைப் பார்த்தாள் அவள். அப்பா முதுகு தடவி அணைத்துக் கொண்டார்.

சிட்டு வகுப்பறைக்குள் நுழைந்தபோது பெரிதாக ஒருத்தரும் அவளைக் கண்டு கொள்ளவில்லை.

அப்பா பாடசாலையில் அவள் காலடி எடுத்து வைத்து விட்டாலே கூட்டமாக ஓடி வந்து அவளைச் சூழ்ந்து கொண்டு அவள் கைபிடிக்கப் போட்டி போடும் தோழிகள்.

பின்னால் போடப்பட்டிருந்த மேசையும் கதிரையும் அவளுக்குக் கொடுக்கப்பட்டது. அப்பா பாடசாலையில் எப்போதுமே முன் வரிசையில் அவளுக்கு இடமிருக்கும். தயக்கத் துடன் சுற்றுமுற்றும் பார்த்தாள் சிட்டு. பட்டுப்போல கன்னங் களுடன் கருகருவென்ற தலைமுடியைக் கட்டையாக வெட்டி விட்டு ஹிந்திப்படச் சிறுமிகள் போல் காட்சியளித்தனர் பலர். சிட்டு ஏனோ தனிமைப்படுத்தப்பட்டது போலுணர்ந்தாள். எண் ணெய் வடியும் முகத்துடன் கறுப்பாய்க் கொஞ்சம் அழுக்காய் அவள் சிரிக்க சிட்டு ஒட்டிக் கொண்டாள். ஆசிரியர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணக்கம் போய் Good Morning பயத்தைத் தந்தது. வெளிநாட்டு ரக பென்சில்கள் பல வித நிறங்களில் விதவிதமாய் மணக்கும் அழி ரப்பர்கள். சிட்டு மெல்ல மெல்லச் சுரங்கத் தொடங்கினாள். தன் தகரப் பெட்டியை வெளியே எடுக்கக் கூச்சப்பட்டாள். இடை வேளை நேரத்தில் அப்பா அருகில் அமர்ந்து ரீயும் பிஸ்கெட்டும் சாப்பிடும் போது சுவர் ஓரம் நின்று ஒட்டிப் பார்க்கும் சிறுமிகள் அவள் கண்முன்னே வந்துபோயினர். பெருமையோடு தலை நிமிர்ந்திருந்த அவள் திடீரெனப் பின்தள்ளப்பட்டது போலு ணர்ந்தாள். அப்பா பள்ளியில் எப்போதும் முதலாம் பிள்ளை. ஆனால் இப்போது... "போகப் போகச் சரியாயிடும்" (அப்பாவிற்கு இன்னும் குழாயின் ஞாபகம் போலும்) விளையாட்டுப் போட்டி கள் கலைவிழாக்கள் அப்பா பள்ளியில் தலைவியாய் மிளிர்ந்த சிட்டுவிற்கு முயன்று பார்க்கும் சந்தர்ப்பம் கூட இங்கே வழங்கப் படவில்லை. ஆசிரியரின் செல்விகளுக்கும் அந்தஸ்த்துக்காரிகளுக் கும் அயலவர்களுக்கும் அறிந்தவர்களுக்கும் அதுவும் இல்லா விட்டால் குறைந்தது வெள்ளைத் தோலாவது இருக்க வேண்டும் கலை விழாக்களில் பங்கு கொள்ள.

கலைவிழாக் காலங்களில் மாணவியர் தெரிவிற்கு வகுப்பறைகள் ஆசிரியர்களின் கண்களால் துளாவப்படும். சிட்டு மேல், பார்வை விழும்போது நெஞ்சம் படபடக்க நின்றிருப்பாள்.

பார்வைகள் கடந்து செல்லும் சிட்டு துவண்டு போவாள். அப்பா பாடசாலையில் நாட்டியப் பரிசு பெற்றிருக்கிறேன். எண்ணெய் வழியும் ரெட்டைப் பின்னலுக்கு அவள் சொல்லி மனம் தேறுவாள். கறுப்பாய்ப் பிறந்ததற்குக் கலங்கிப் போகும் அவள் மனம். சவர்க்காரம் பல கரைந்தும் போகும். கிச்சாவின் முதுகு அடிக்கடி விண்ணென்றும். அவன் வெள்ளையாய்ப் பிறந்ததிற்குக் கிடைக்கும் பரிசு அது.

பாடசாலை வெறுத்தது சிட்டுவிற்கு. படிப்பில் ஆர்வம் போய், அடிக்கடி பொய்க்காய்ச்சலும் வந்தது. பின் மேசையும் கடைசிப் பிள்ளையும் நிரந்தரமானது. முடியும் என்றது போய், முயன்று பார்க்கும் சந்தர்ப்பமும் இன்றி எதிர்காலம் இருண்டது. ஏதோ சாட்டுக்காய் என்று இழுபட்ட காலம் அது.

போர்ப் புலப் பெயர்வு... "ஐயோ எங்கட நாடு எவ்வளவு நல்ல நாடு" கேட்ட போது இரத்தம் கொதித்தது.

செம்மண் நல்லது
மா பலா வாழை நல்லது
வீட்டு நாயும், பூனையும், கோழியும், ஆடும், மாடும் நல்லது
மழை நல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகை மணத்துடன் வந்து போகும் மெல்லிய காற்றும்
நல்லது

பனை நல்லது
தென்னையும் நல்லது
மிளகாய், கத்திரி, புகையிலை, வயல்வெளி அத்தனையும்
நல்லது

மலை நல்லது
குளம் நல்லது
வற்றாது ஓடும் நதியும் நல்லது
எமது நாடு நல்லது
எமது மாங்கொட்டைத் தீவு மிகமிக நல்லது.
ஒரு மானிடப் பிறவி அங்கே இல்லாவிட்டால்...

புலம் பெயர்ந்துவிட்டேன். சந்தோஷமாக இருக்கிறது. தமிழினத்தை நசுக்கி அடித்துத் துரத்தியதால் என் திறமைகள் எனக்குத் தெரிந்தது (சிங்கள அரசிற்கு நன்றி)

குழந்தைகளிடம் இல்லாத திறமைகளைத் தேடிக்கண்டு பிடிக்கின்றார்கள் இங்கே. இருக்கும் திறமைகளையும் தமது வக்கிர மனத்தால் புதைத்து விடுகின்றார்கள் எம் நாட்டில்.

Child psycholo பல அறியாத சிந்திக்கத்தெரியாத குறுகிய மனங்கள் பாடசாலை ஆசிரிய அந்தஸ்துப் பெற்று இன்னும் எத்தனை எத்தனைக் குழந்தைகளின் எதிர்காலத்தை இருட்டில் தள்ளியதோ? வீணீருடன் குறட்டை விடும் என் பாதிக்கு இதைக் கூற "முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" பழமொழி சொன்னது எனக்கு. "ஒண்டுமில்லாத எத்தனை பேர் படிச்சு முன்னுக்கு வரேலையே.. இது உமக்கு ஒரு சாட்டு" தத்துவம் சொன்னது. இருக்கலாம் எத்தனையோ பேர் இருக்கலாம். ஆனால், இது நான் எத்தனையோ பேர் அல்ல. நான் ஒரு தனி மனுஷி.

என் பாதிப்பு எனக்கு மட்டுமேயானது. என்னைப் போல் பலர் பாதிக்கப்பட்டிருக்கலாம். இல்லாமலும் போகலாம். தத்துவங்கள் வேண்டாம். பழமொழிகள் வேண்டாம். நெஞ்சம் கனக்க ரிஷியைத் திரும்பிப் பார்க்கிறேன். அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான்.

அவனின் பயத்தைத் தெளிவுபடுத்த வேண்டும். என்னால் முடியாது. அனுபவம் உள்ள ஒருவரிடம் அழைத்துச் செல்லலாம். நிம்மதியாக நானும் கண்களை மூடினேன்.

✦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோஜா

ஏதோ ஒன்றின் வரவிற்காக வரிசையில் காத்திருப்பதைப் போல் அந்த வீடுகள் வரிசையில் நின்றன. பார்வைக்கு ஒத்தவையாக இருந்தாலும் கொஞ்சம் ஊன்றிப்பார்த்தால் நிறம் அளவு வேறுபட்டிருப்பது தெரிந்துவிடும். சொந்தக்காரர்களின் பணவசதி ஆர்வம் என்பனவற்றைப் பறை சாற்றிக் கொண்டு வீட்டின் முன் பகுதி நின்றது. பச்சைப் பசேலென்று மெத்தை போல் ஒரே அளவில் அமைப்பாக வெட்டப்பட்ட புற்தரை. அழகாக அடுக்கப்பட்ட கற்களுக்கிடையில் பல நிறப் பூஞ் செடிகள்... இன்னும் செயற்கை மிருகங்கள். பறவைகள்... கிடைக்கும் மூன்று நான்கு மாதக்கோடை காலத்தை வீட்டின் முன்பகுதியை அழகுபடுத்துவதில் பலருக்குப் போட்டி. பக்கத்து வீட்டுக்காரர் தம்மைக் குறைவாக நினைத்துவிடக் கூடாது என்பதற்காய் ஏனோ தானோ என்பதாய்ச் சில பூஞ்செடிகளுடன் சில வீடுகளும் இருக்கத்தான் செய்தன.

என்னை முதலில் பெண் பார்க்க வந்தபோது நான் போகும் வீடு வீட்டுக்காரர்கள் பற்றிய பதைபதைப்பும் கனவும் எனக்குள் இருந்தது. ஆனால் நாட்கள் செல்லச் செல்ல நான் புறக்கணிக்கப்பட்டு என்னுடைய நண்பிகள் தெரிவு செய்யப் பட்டபோது என்னை விரும்ப இந்த உலகத்தில் ஒருத்தருமில்லை என்று மனம் நொந்த நாட்கள்தான் பல. உணவு, தண்ணீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊட்டச்சத்து என்று கவனம் செலுத்தியும் நான் பாசிபடர்ந்து சோர்ந்து... அழகில்லாமல் UV அலேர்ஜியோ என்னவோ...

என்னை ஒருவரின் கையில் பிடித்துக் கொடுக்கும்வரை எல்லோருக்கும் பிரச்சனைதான். அழகில்லாவிட்டாலும் என்னிடம் குணம் இருந்தது. கொஞ்சம் அறிவு ஜீவியும் கூட. இந்தக் காலத்தில் இதற்கெல்லாம் மதிப்பெங்கே... நன்றாகக் கொழுக்கு மொழுக்கென்றிருந்தால் எல்லோரும் சுற்றிச்சுற்றி வருகிறார்கள்.. ம் என்ன செய்வது..

ஒரு நாள் ஒரு கறுப்புப்பெண்மணி என்னை நோக்கி வந்தாள்... அவளின் தொடையும் இடையும்.. உடையும்.. நான் பெண்களை அவர்களின் தோற்றம் உடை என்பவற்றிலிருந்து கணிப்பதில்லை. எனவே மௌனமாக இருந்தேன்.. அவள் என்னருகே வந்து குனிந்து பார்க்க பக்கத்தில் நின்ற என் நண்பன் சிலிர்த்துப் போனான்... காற்றைச் சாட்டாக வைத்து மெதுவாக அவளின் மென்மையான மார்புகளை ஒருமுறை உரசி வந்தான். 'அச்' அவள் மார்பைத் தடவியபடி விலகிக் கொண்டாள்... சின்னதாக மார்பில் சிவப்புக்கோடு... நான் அவனைப் பார்த்து முறைக்கச் சிவந்துபோய்ச் சிரித்தான்.. பின்பு அவனுக்கும் வேலை கிடைத்து அவனும் போய் விட்டான்.. நானும் என்னைப் போல் பசலை படிந்த சிலரும் காத்திருந்தோம் யாரோ ஒருவரின் வரவுக்காய்...

கோடையின் இடைக்காலத்தில் "Sale" என்ற மட்டை என் கழுத்தில் மாட்டப்பட்டுப் பல பேரின் பார்வைக்காக வைக்கப் பட்ட போது தன்மானத்தால் தற்கொலை செய்து விடலாம் போலிருந்தது. என்னைச் சுற்றிச்சுற்றி வந்து பார்த்துவிட்டு முகஞ்சுளித்துப் போனவர் பலர். பருவமாற்றத் துக்கு முன் நான் இறந்து விடுவேன். மனம் அடிக்கடிச் சொன்னது...

"அம்மா இஞ்ச மலிவாப் போட்டிருக்கினம்" குரல் அடங்கவில்லை. ஒரு குடும்பம் என்னைச் சூழ்ந்து கொண்டது.. இன்று எனக்கு ஒரு வீடு கிடைத்துவிடும். அருகில் வந்த பெண்மணி என்னைத் தடவிப் பார்க்கக் குப்பென்று ஒரு வித மணம் அவளில் இருந்து வீசியது.. ஐயோ இந்த வீடு வேண்டாமே

இரண்டு வாண்டுகள் என்னைத் தூக்க வீடு மாற்றப் பட்டேன்.. போகும் பாதையெல்லாம் இதுதான் என் புதுமனையோ என்ற ஆவலோடு நான். ஒவ்வொரு வீடாகக் கடந்து... கடைசியில் பற்றை போல் புற்கள் வளர்ந்தும் பல கால மாகத் தண்ணியே கண்ணில் காட்டப்படாததும் பொருக்கு வெடித்த சுவருடனும் இருந்த வீட்டின் முன்னால் தொப்பென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இறக்கப் பட்டேன்...

சவக்குழி தோண்டி என்னைப் புதைத்து விட்டு அவசரமாக அவள் உள்ளே சென்றாள்... மூச்சு முட்டியது எனக்கு... பசி. தாகம். குரல் கொடுத்தேன். கேட்பார் ஒருவருமில்லை. பக்கத்து வாசம் செழிப்பாக இருந்தது. ஏக்கத்துடன் அவர்களை நோக்கினேன். பல நிறங்களில் செழிப்போடு நின்று என்னைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தார்கள்.

சின்ன வாண்டு கையில் ஒரு குவளையுடன் ஓடி வந்தான். தீராத என் தாகத்திற்குத் தண்ணி காட்டப் போறான் போல... அருகில் வந்து குந்தி இருந்து என்னை உற்றுப் பார்த்தான். அவனின் காற்சட்டை விலகி எலிக்குஞ்சு நிலத்தைக் கௌவத் தாவியது. அவனிலுமிருந்து ஒருவித வீச்சம். வீட்டு அம்மணி நன்றாகச் சமைப்பாள் போல... சிறிது நேரம் உற்றுப் பார்த்தவன் கையிலிருந்த குவளையைக் கைவிட்டு என் தலை மேல் தண்ணீரை ஊற்றி விட்டு ஓடிவிட்டான்... ஆ... ஊ... அச்சோ ஐயோ நான் கதறினேன்... என் உடம்பு கொப்பளித்துப் போக நான் இறப்பதற்கு என்னைத் தயார் செய்தேன்... எதிர்காலம் இருள, மேகமும் இருண்டது... மெல்லச் சில துளிகள் என்மேல் விழுந்து, மீண்டும் வாழும் ஆசை எனக்குள்....

நான் அழகாகத் துளிர்க்கத் தொடங்கினேன்... பாசி அகன்று ஒருவிதப் பசுமை படர்ந்தது... வாண்டுகளைத் தவிர என் அழகை ரசிக்க அங்கே ஒருவருமில்லை... எலிக்குஞ்சு வைத்திருக் கும் வாண்டு காலை எழுந்தவுடன் முகம் கூடக்கழுவாமல் எனை வந்து பார்ப்பான்... அவனுக்கும் எனக்குமிடையில் ஒரு வித நட்பு... எப்படியும் கால மாற்றத்துக்கிடையில் அவனுக்கு நான் ஒரு பரிசளிக்க வேண்டும்... என் உணர்வுகளையெல்லாம் ஒன்று திரட்டி தண்ணீருக்கும் உணவிற்கும் பக்கத்து வீட்டுப் பரிவாரங் களை ஏமாற்றி உறிஞ்சி எடுத்து ஒரு வழியாக மொட்டுவிட்டேன். அதன் பின்னர் எனக்கு ஏக வரவேற்பு. வாண்டுகளிடமிருந்து தான்.... வீட்டுக்காரி எப்போதாவது முட்டைக் கோது தேயிலை சக்கை போன்றவற்றை எனக்குப் போட்டுவிட்டு... சில நிமிடங்கள் பார்த்துவிட்டுப் போய் விடுவாள். வீட்டுக்காரன்... காலையில் மிகவும் நேர்த்தியாக உடையணிந்து ஏதோ ஊரே தனக்குள் தான் அடக்கம் என்பதாய் காரில் சொர்ரென்று போவான்... என்னை ஒரு நாளும் அவன் கண்டுகொள்வதில்லை.. எனக்கும் அவனைப் பிடிக்காது... இரவானால் நேர்த்தி கலைந்து அனேகமாகத் தள்ளாடிய படி வருவான்.

அன்று ஒரு நாள் இப்படித்தான் தள்ளாடியபடியே உள்ளே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தான். சிறிது நேரத்தின் பின்னர் "ஐயோ ஐயோ" அவள் கத்தும் சத்தம். வாண்டுகளும் அலறுவது கேட்டது... நான் என் இயலாமையால் வெறுப்போடு கொதித்தேன்.. என்னால் முடிந்தது அவ்வளவே...

காலை அவன் வழமை போல் நேர்த்தியாக வெளியில் சென்று விட... மெல்லப் பதுங்கிப் பதுங்கி கையில் இரண்டு சாம்பல் நிறப்பைகளுடன் வாசலுக்கு அவள் வந்தாள்.. வந்தவள் அங்குமிங்கும் பார்த்துவிட்டு வெளியே வந்து தூரத்தில் யாரோ வருவதைக் கண்டதும் பைகளை என்னருகில் போட்டு விட்டு உள்ளே ஓடிவிட்டாள்... அப்பா... என்ன வீச்சம்.. நான் மூச்சு முட்டினேன்... சிறிது நேரத்தின் பின்னர் போனவள் மீண்டும் திரும்பி வந்து எட்டிப்பார்த்து ஆள் நடமாட்டம் இல்லை என்பதை நிச்சயம் செய்து கொண்டு பைகளை ஓடிச் சென்று ரோட்டோரம் வைத்துவிட்டு ஓட்டமாய் வீட்டுக்குள் புகுந்து கொண்டாள். அவள் கண்களுக்குக் கீழே பெரியதொரு கண்டல்... பாவம் அவள்... அவளை வருடிக்கொடுக்கலாம் போலிருந்தது... ஆனால் நான் வருடிவிட்டால் தான் எல்லோரும் கத்துவார்களே.

சின்னவாண்டு வெளியில் வந்தான். கண்கள் பொங்கியிருந்தது... மெல்லக் குனிந்து கண்கள் மின்ன என்னை முகர்ந்து பார்த்தான்... வழமை போல அவனின் மணத்தை நான் பொறுத்துக்கொண்டேன். இயற்கை தனது கடமையைச் செவ்வனே செய்ததால்.. என் இருப்பும் நிச்சயமானது...

அன்று பாடசாலை விட்டு வரும் போது பெரியவாண்டு ஒரு பெண்ணோடு வந்தான்... நீண்ட முடியும் அகன்ற கண்களும் வயதுக்கு மீறிய வளர்ச்சியுடனும் அவள் அழகாக ஏன்ஜல் போலிருந்தாள்... வாண்டு தன் சில்மிஸங்களை விட்டுப் பெரியவன் போல பாவனை செய்து கொண்டிருந்தான்.. அவளை அழைத்து வந்து என்னைக் காட்டிவிட்டுப் பெருமையோடு நின்றான்... கண்கள் மலர என்னைப் பார்த்தாள் அவள்.. தன் நீண்ட விரல்களால் மெதுவாக எனைத்தடவி முகர்ந்து பார்த்தாள். இந்த ஆண்களுக்குத்தான் எவ்வளவு திறமை....

"வேணுமா?"

"ச்சீ வேண்டாம்.. பாக்க எவ்வளவு வடிவா இருக்கு இப்பிடியே இருக்கட்டும்.."

"தண்ணி விடுவமா?"

"நான் விடட்டா.. எங்கட வீட்டிலதான் கார்ட்டினே இல்லையே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சைக் குழாய் கொண்டு என்னைக் குளிப்பாட்டினார்கள்- பெரிய வாண்டு அவளுக்கும் தண்ணி அடித்தான்.... "க்கீ" கத்திய படியே அவள் துள்ளி ஓடினாள்- பின்னர் அவன் கையிலிருந்த குழாயைப் பறித்து அவனை நனைத்தாள்... முகங்களில் ஒரு விதப் பிரகாசம்... பெரியவாண்டு துள்ளி மரம் ஏறிக் குதித்தான்... அவளைப் பார்க்காதது போல் பார்வையால் தடவியபடியே குட்டிக்கரணம் போட்டான். துடிப்போடு அவனைச் சுற்றிச் சிரித்த படியே அவள் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தாள்...

சின்ன வாண்டு வந்தான். அவன் வாயைச் சுற்றிச் சாப்பாடு அப்பியிருந்தது- அவன் ஏன்சலைக் கண்டதும் முகத்தில் எழுந்த பிரகாசம் பெரிய வாண்டின் சிரிப்பைக் கண்டதும் அடங்கியது. முகத்தைத் தூக்கி வைத்தபடியே நிலத்தைத் தேய்த்துத் தேய்த்து நடந்தான்- எலிக்குஞ்சு எட்டிப் பார்க்கும் பிரக்ஞை அற்று- குந்தியிருந்து புல் பிடுங்கிக் காற்றில் பறக்கவிட்டான். "க்ளுக்" அவள் சிரித்தாள். அவன் அவளைக் கண்வெட்டாமல் பார்த்துவிட்டு என்னை முகர்ந்து, பின் மீண்டும் அவளைப் பார்த்தான்... அவள் மெல்லப் புன்னகைத்தாள்... திடீரென்று வேகம் கொண்டு ஒரு வட்டம் ஓடித்திரும்பி வந்தான்- பெரிய வாண்டிற்கு அவன் செய்கை ஒன்றுமே பிடிக்கவில்லை... "போ.. போய் வாயைக் கழுவு" விரட்டினான்-

"என்ன பேர்" அவள் கேட்கப் பெரிய வாண்டு அவனைத் தள்ளி விட்டான்... சின்ன வாண்டு திமிறினான்.... அவள் பதட்டத்துடன் பார்த்துக்கொண்டு நின்றாள்- சின்ன வாண்டு மீண்டும் ஒருமுறை கலைத்துக்கொண்டு அவளைப் பார்த்துப் புன்னகைதான்... பெரிய வாண்டு "முட்டை" என்றான். சின்ன வாண்டின் முகம் மாறியது. பாய்ந்து அவனைத் தாக்கினான்... பெரிய வாண்டு ஒருமுறை தடுமாறிப்பின் கோபத்தால் முகம் சிவக்கச் சின்ன வாண்டு மேல் பாய்ந்தான். சின்ன வாண்டு உயரத்தில் குறைவாக இருந்தாலும் உரமாக இருந்தான். பெரிய வாண்டு தடுமாறித் தடுமாறிக் கொண்டு கோபத்தில் துடிக்கச் சின்ன வாண்டைத் தாக்கினான்... "Stop it" ஏன்ஜல் கத்தினாள். பெரிய வாண்டு அவளின் கையைப் பிடித்திழுத்துக் கொண்டு தோட்டத்தின் மறுபக்கம் போனான். சின்ன வாண்டு காலால் கற்களைத் தட்டிக்கொண்டு அவனை முறைத்தான்.

வேகமாக வந்து திரும்பிய காரில் இருந்து தள்ளாடிய படியே நேர்த்தி கலைந்து இறங்கிய அவன்- பெரிய வாண்டின் முதுகில் பளார் பளார் என்று இரண்டு அறையும் சின்ன வாண்டின் தலையில் ஒரு குட்டும் வைத்துவிட்டு ஏன்ஜலைத் திரும்பிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தான். அவள் வீல் என்று கத்திய படியே ஓட்டம் பிடித்தாள்... "பள்ளிக் கூடத்தால வந்தால் படிக்காமல் வெளியில என்ன வேலை" கத்திவிட்டுத் தடுமாறியபடியே வீட்டிற்குள் புகுந்து கொண்டான்.

சின்ன வாண்டு தலையைப் பிடித்துக் கொண்டு ஆவென்று அழுதபடியே உள்ளே செல்ல, பெரிய வாண்டு முதுகைத் தடவிய படியே ஏன்ஜல் ஓடிய திசையைப் பார்த்துக் கொண்டு நின்றவன் பாய்ந்து பாய்ந்து சுவரைக்காலால் உதைத்தான்... அவன் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது.

சிறிது நேரத்தில் வீட்டுக்குள்ளிருந்து அவளின் அலறல் குரல்... இன்று வழமையிலும் பார்க்கக் கொஞ்சம் கூடுதலாகவே இருந்தது. என் முட்கள் துடித்தன. அவன் ஆவேசத்துடன் வெளியே வந்து ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தான்.... நான் பாய்ந்து அவன் கால்களைத் தாக்கினேன். "சனியன்" உதைத்து விட்டுக் காலைப்பிடித்தான். கீறலாக இரத்தம் ஓடியது. நான் சரிந்து விழுந்தேன். என்னால் முடிந்த சின்ன உதவி அவளுக்கும் வாண்டுகளுக்கும் செய்த நிம்மதி என்னுள்...

அடுத்தநாளும், பெரிய வாண்டுவுடன் ஏன்ஜல் வந்தாள். சின்னவாண்டுவின் முகம் சிவந்து போனது. இன்று அவன் அழகாகக் கச்சிதமாக உடையணிந்திருந்தான். முகத்திலும் தேவைக்கதிகமாகப் பெளடர் அப்பியிருந்தான். பெரியவாண்டு அவனைக் கண்டு கொள்ளவில்லை. ஏன்ஜல் சின்னவாண்டுவின் பக்கம் திரும்புவதை முடிந்தவரை பெரியவாண்டு தடுத்தபடியே இருந்தான். எனக்கு வேடிக்கையாக இருந்தது. சின்னவாண்டுவும், ஏன்ஜலும் கண்களால் பேசுவது போல் எனக்குப் பட்டது. தந்தையின் கார் தொலைவில் வரும்வரை பெரியவாண்டும், ஏன்ஜலும் தமக்குள் கதைத்தபடியே இருந்தார்கள். சின்னவாண்டு என் பக்கத்தில் அமர்ந்திருந்து, அவனும் தனக்குள் ஏதோ கதைத்த படியிருந்தான்.

இது வாடிக்கையாய் போயிற்று. பெரியவாண்டுவுடன் ஏன்ஜல் வருவது, அவளுக்காய், இனிப்பு வகைகள், ஒரு டொலர் கடையின் விளையாட்டுப் பொருட்கள் என்று பெரியவாண்டு சேகரித்து வைத்து அவளுக்குப் பரிசளித்தல், முகத்தைத் தொங்கப் போட்டபடியே ஏக்கத்துடன் இதையெல்லாம் சின்னவாண்டு பார்த்தபடி என்னருகே அமர்ந்திருத்தல். சின்னவாண்டுவின் சோர்வு எனக்கு போர் அடித்தது. நாளை இப்படி ஒரு திருப்பம் வரும் என்று எனக்குத் தெரிந்திருக்காததால்.

அடுத்தநாள், பாடசாலையால் வந்தவுடன் சின்னவாண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசரமாக உள்ளே சென்று, அழகாக அலங்கரிக்கப்பட்ட , ஒரு பெட்டியை எடுத்துக் கொண்டு வந்து என் அருகில் அமர்ந்தான். பெட்டியைத் திறந்தான். மெல்லிய கிறங்க வைக்கும் மணம் உள்ளேயிருந்து வந்தது. பெண்களின் அழகு சாதனப்பொருட் களும் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. நிச்சயமாக இது வாண்டுவின் அம்மாவினதாக இருக்காது. அவளுக்கும் அழகிற்கும் தான் எட்டாப் பொருத்தமே! இந்தப் பொருட்களை நிச்சயமாக டொலர் கடையிலும் வாங்கியிருக்கமாட்டான். பெரியவாண்டு ஏன்ஜலுடன் வந்தான். அவன் பார்வை சின்னவாண்டுவின் மேல் கேள்விக்குறியாக விழுந்தது. முகம் கடுப்பாகியது. ஏன்ஜல் ஓடி வந்தாள். சின்னவாண்டுவின் கை யிலிருந்த பெட்டியை அதிசயத்துடன் பார்த்தாள். வீட்டினுள்ளே தமிழ் நாடகம் பெரிய சத்தத்துடன் போய்க்கொண்டிருந்தது. பெட்டியைத் திறந்து ஏன்ஜலுக்குக் காட்டினான் சின்னவாண்டு. அவள் கண்கள் மின்னின. அவளிடம் பெட்டியை நீட்டினான் சின்னவாண்டு. ஆச்சரியத்துடன் பெட்டியை வாங்கியவள் சின்ன வாண்டைக் கட்டிப்பிடித்துக் கன்னத்தில் முத்தமிட்டாள். பெரிய வாண்டுவின் முகம் கோபத்தால் சிவக்க, ஓடிவந்து சின்ன வாண்டைத் தள்ளி விட்டான். தள்ளலில் தொடங்கி, கை கலப் பாகி, ஒருவரையொருவர் தரையில் புரட்டி எடுக்க, ஏன்ஜல் செய் வதறியாது வீட்டுக்கதவைத் தட்டித் தாயாரை அழைக்க முயன்றாள்.

வேகமாக வந்த கார், வீட்டின் முன்னே நின்றது. கண்கள் சிவக்கத் தள்ளாடியபடியே இறங்கிய தந்தையைக் கண்டதும் பெரியவாண்டு ஓடிவிட, ஏன்ஜலின் கையிலிருந்த பெட்டியைக் கண்டு ஆவேசம் எழ சின்னவாண்டுவைக் காலால் ஓங்கி உதைத்தான் நேர்த்தியானவன். பந்தாக எழுந்து என்மேல் விழுந்து உருண்டு பிரண்டு வீட்டுச்சுவருடன் மோதி அடங்கினான் சின்னவாண்டு. நான் முறிந்து போனேன்.

வெப்பந்தணிந்து குளிர் தொடங்கியது... காலநிலை மாற்றத்தைக் கண்டு நான் கலங்கவில்லை... எதிர்பார்ப்புக்கள் ஏதுமின்றி வெறுமனே கிடந்து வாடினேன்.. கிடைக்கும் கொஞ்ச நஞ்ச உணவையும் புறக்கணித்து மீண்டும் பாசி படரத் தொடங்கினேன்... . நாட்கள் நகர வெண்பனி எனை மூடிக் கொண்டது... நான் மெல்ல மெல்ல உறைந்து போனேன். மீண்டும் துளிர்க்கும் எண்ணம் இன்றி..

✦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பவர் கட்

குவியாய் ஊத்தை உடுப்பின் வீச்சம். இனி பழஞ்சோற்றுக் கறியும் வீச்சம் விடும். இரண்டு நாட்களாயிற்று மீள எழ. மின்விளக்குகளின்றி இறந்துகொண்டிருந்தன இரவுகள். தொலைபேசிகளும் தொலைந்து போயின. இனி இருத்தலின் நினைவு வரும். அபி சந்துரு வீட்டில். அபிக்கு மாது சோறு தீத்துவாள்... மடியில இருத்தி ரீவீ காட்டுவாள். அம்மாவைக் கேட்டால் வேலை விஷயமா தூரப்போயிட்டா வர நாளாகும் என்று சொல்லுவாள்.

இரண்டு நாட்களும் சந்துரு வந்து கதவைத் தட்டிப்பார்த்து உயிருடன் இருப்பதற்காய் இருமிக்காட்டிய பின் திரும்பி விட்டான். கோழை எண்டு அவன் உரிமையோடு கத்தியது காதில் கேட்டது. இன்று மாதுவும் வந்திருப்பது தெரிந்தது. இருமி இருமிக் களைத்துவிட்டேன். போவதாய்க் காணோம். அபியின் குரல் இல்லை... இருவரையும் ஏதாவது கேவலமாய்ப் பேசி நோக வைக்க ஆசை வந்தது... நாக்குவரை பேச்சு வந்து அடங்கியது. சந்தரு இவனை எனக்கு எத்தனை நாட்களாகத் தெரியும். எப்பிடி என்மேல் உரிமை கொண்டாடுகிறான்.

"நீங்கள் எழுதின கட்டுரை வாசிச்சனான்... நல்லா இருக்கு... நாங்களும் ஒரு தொகுப்பு விட இருக்கிறம் ஏதாவது எழுதினது இருந்தா தாங்கோ போடலாம்." சிரித்தபடியே சந்துரு சொன்ன போது அதிகப் பிரசங்கித்தனமாகப்பட்டது. "ஏதோ கேட்டிட்டினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்டு சும்மா கிறுக்கிக் குடுக்க இனிப் பல்லை இளிச்சுக் கொண்டு வருவினம்" விலகிக்கொண்டேன்.

"கவி நீங்கள் இண்டைக்குக் கதவைத் திறக்காட்டி கட்டாயம் உடைச்சுக்கொண்டு உள்ளுக்க வருவம்... பிறகு நீங்கள் தான் கதவுக் காசு கட்ட வேணும்" மாது ஜோக்கடித்தாள். "அபி உங்களை மறந்திட்டாள் தெரியுமே" கதவு ஆடியது. எனக்குப் பசித்தது. திறந்தேன். "அப்பாடா" உள்ளே வந்தார்கள். சந்துரு ரிவியைப் போட்டான். மாது வோஸ் ரூமை நோக்கி ஓடினாள். "சமைக்கேலை சாப்பிடேலை என்ன" பாசலை நீட்டினான். முட்டி முட்டி வந்த அழுகையை அடக்கிய படியே பாசலுடன் குசினிக்குள் புகுந்து கொண்டேன்.

சந்துரு விசிலடிப்பது கேட்டது.

சந்துரு கட்டுரை கேட்டு மறந்து போய் இரண்டு மாதங்களின் பின்... மேல் வீட்டு மாமி கதவைத்தட்டி சந்துரு தந்து விட்டுப் போனதாக ஒரு புத்தகத்தைத் தந்தார். "யார் சந்துரு" மாமி மறைந்து விட்டாள். பிரித்துப் பார்த்தேன். சந்தரு கட்டுரை கேட்டது ஞாபகம் வந்தது. படித்துப் பார்த்தேன். எழுதியவர் கவிதா சுந்தரமூர்த்தி. இல்லாதது கவலையாக இருந்தது. புத்தகத்தைப் படித்து முடித்து மாமியின் கதவு தட்டி அருமையான புத்தகம். சந்துருக்குத் தாங்ஸ் சொல்லுங்கோ எண்ட போது மாமி என்னை ஒரு மாதிரிப் பார்த்தது போல் இருந்தது.

"ரீ போடப்போறன்" மாது கேத்தலைக் கொழுவினாள். என் வீட்டுக்குள் உரிமையோடு உலா வருகிறாள். "நீங்கள் சாப்பிடுங்கோ" சொல்லிவிட்டுப் போனாள். சந்துரு கச்சான் உடைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். எப்படி அவன் கைக்குள் போனது. தலை கிணுகிணுத்தது. "போங்கோ என்ர வீட்டுப்பக்கம் ஒருத்தரும் வரவேண்டாம். எனக்குத் தமிழ் ஆக்களைக் கண்டாலே பிடிக்கேலை... நான் வீடு மாறப்போறன் எங்கை யாவது தூரமா போகப் போறன்" அபி சந்துரு வீட்டில் அவன் பிள்ளைகளுடன் மேலும் கீழும் ஓடி விளையாடியபடி இருந்தாள்.

"கவிதா நிக்கிறியளோ... சந்தரு வந்திருக்கிறார். சும்மா நிண்டா ஒருக்கா மேல வாங்கோ" மாமி கதவைத் தட்டினாள். மாமி என்னை ஒரு மாதிரிப் பாப்பாள். வேண்டாம். அபியைத் தூக்கிக்கொண்டு மேல போனேன். சந்துரு எழும்பினான். மாது சிரித்தாள். பிள்ளைகள் அபியைப் பார்த்தன. நான் மாதுவைப் பார்க்க "என்னுடைய மனையாள் மாது. இது, பிள்ளைகள் கஸ்தூரி, கபிலன் "இவருக்குத் தமிழ் அறிவு கூடீற்றுது நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருங்கோ" மாது சிரித்தாள்.

"சாப்பிடேலையே... சாப்பிடுங்கோவன்... ஏன் பசி கிடக்கிறீங்கள்..." கண்கள் பனித்தது... துடைத்தேன்... "நாங்கள் ஒண்டும் கேக்க மாட்டம்... ஆனால் அண்டைக்கு முழுவதும் சந்துரு குடிச்சுப் போட்டு படு தூஷணத்தாலப் பேசிக்கொண்டு நிண்டார் எனக்கே பயமா இருந்தது."

"......"

"அழாமல் சாப்பிடுங்கோ... நான் ஒண்டும் கேக்கேலை..." மூண்டு ரீ போட்டு இரண்டை எடுத்துக்கொண்டு போனாள். நான் மெண்டு விழுங்கினேன்.

மாது கலகலப்பாகக் கதைத்தாள்... பிள்ளைகள் அபியுடன் ஒட்டிக்கொண்டன. சந்தரு தொடர்ந்து ஜோக்கடித்தபடியே இருந்தான். நான் பிரிந்திருப்பது மாமி சொல்லியிருப்பாளோ... என்னைப்பற்றி இவர்கள் என்ன நினைப்பார்கள். நான் கேள்வி களுக்கு மட்டும் பதில் சொல்லிவிட்டுச் சிரித்தபடியே இருந்தேன்.

"புத்தகம் வாசிச்சனீங்களா? எப்பிடி இருந்தது?" சந்தரு கேட்டான்....

"நல்லா இருந்தது... நான் மாமிக்குக் கூடச் சொன்னன்..." சாட்சிக்கு மாமியைத் தேடினேன்.

"உங்கட ஒண்டும் வரேலை எண்டு கவலையா இருந்திருக்குமே..."

"சந்தரு உங்களுக்கு கதைக்கத் தெரியாது." மாது முறைத்தாள்.

நான் சிரித்தேன். கொஞ்சம் அவமானமாய் இருந்தது.

"கவிதா எழுதினா உன்ர அடிபட்டுப் போயிடும் எண்ட கவலை உனக்கு" சந்தரு சிரித்தான்.

"மாடு" மாது ஓங்கிக் குத்தினாள்.

"ஆ" சந்தரு மாதுவைத் தள்ளினான்.

நீலப்படம் பார்ப்பது போல் சங்கடமாக இருந்தது எனக்கு... காப்பெற்றில் சிதறிக்கிடந்த துகள்களை அவசரமாக ஆராய்ந்தேன்.

"இந்தாங்கோ இது யுரொப்பில இருந்து வாரப் புத்தகம் வாசிச்சுப் பாருங்கோ..." சந்தரு நீட்டினான்.

"மாது எழுதிறங்களோ?"

"ஆ... அவ பெரீய்ய்ய் எழுத்தாளர்... உங்களுக்குத் தெரியாதே... தமிழச்சி எண்ட பேரில எழுதிறா" சந்துரு சிரித்த படியே சொல்லிவிட்டு உடலைச் சுருக்கிக்கொண்டான். மாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்தாள். களங்கமற்றிருந்தது...

துருப்பிடித்த இதயங்கள்...
பிளாஸ்டிக் சிரிப்புக்கள்
எப்போதும் பெண்டிரைக் குட்டிவிட்டு
வேடிக்கை பார்க்கும்
எவ்வரை உலகம் இது...
இனி உடையும்
வாய் திறந்து சிரிப்பேன் நானினி.

முதல் முதலாக ஓர் ஆணின் கண் பார்த்துக் கூச்சமின்றிச் சிரித்தேன். மனது நிறைந்து போனது.

சாப்பிட்டு முடித்து வந்தபோது சந்துருவும் மாதுவும் ஒரு ஆங்கிலப்படத்தில் மூழ்கிப்போயிருந்தார்கள். "கவி வாரீங்களா சிக்காகோக்கு போவம்... நல்ல படமாம் ஒஸ்கார் கூடக் கிடைச்சிருக்கு..." சந்துரு என்னைப் பார்த்தான். அவன் கண்களில் நோ தெரிந்தது. "நான் மாமியோட ஒருக்காக் கதைச்சிட்டு வாரன்" மாது திடீரென்று எழுந்து மேலே போனாள்... என் கண்கள் முட்டியது... சந்துரு ரீ கப்பைக் குசினிக்குள் வைத்துவிட்டு வந்தான். நான் கண்களை அழுத்தித் துடைத்தேன்.

ரெலிபோன் அடித்தது... சந்துரு... கட்டுரை கேட்டான். தருவதாகச் சொன்னேன். தொடர்ந்து என் கட்டுரைகள் பல சஞ்சிகைகளில் பிரசுரமானது. தனியே முட்டுமுட்டென்று முகப்பையும் நிலத்தையும் பார்த்துக்கொண்டிருந்த என் வாழ்வு அர்த்தமாகியது. எனக்குள் இருந்த என்னுடைய நான் மெல்ல மெல்ல வெளிவந்தேன்... சந்துருவுடன் காரில் தனியாகப் புத்தகக் கடைக்குச் செல்வதும்... மாதுவோடு யோகா ஸ்விமிங் செல்வதும் சகஜமாகியது. எல்லாம் சரி... "கவி வைன்" சந்துரு கேட்டபோது கூடியிருந்த ஆண்களின் பார்வை என்மேல் தீவிரமாக இருப்பதாய்ப்பட்டுச் சங்கடத்துடன் மறுத்தேன்... அப்பிள் ஜுஸ் வாங்கிக்கொண்டேன். மாது வைற் வைனுடன் என் அருகில் வந்து இருந்தாள். பெண்கள் எல்லோருமே சகஜமாக எதுவோ ஒன்றை மெல்ல உறிஞ்சினார்கள். பொரித்த இறைச்சி வகைகள் தூக்கலாய்... பொரித்த இறைச்சிக்கு அப்பிள் ஜுஸ் பொருத்தமில்லாமல்.... வேலைத்தளத்தின் பார்ட்டியில் ரெட் வைன் தயங்காமல் எடுக்கும் நான்... இன்னும் எனக்குள் இருக்கும் நான் எங்கோ முட்டியபடி இருந்தது. தமிழர்கள்... தமிழ் ஆண்கள் பெண்கள் கண்களும் நாக்கும் நீண்டு தொங்க என்னைப் பார்த்து ஆ...வென்று சிரித்தார்கள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் சகஜமாகியது... சந்துருவின் இரட்டை அர்த்த ஜோக்குகள் முதலில் சங்கடமாக இருந்தாலும் பதிலுக்கு அவனைக் கடிக்க நானும் பழகிக்கொண்டேன்...

மனிதர்கள் இல்லா உலகில்

தத்தளித்துத் திமிறி

என் உலகைச் சுருக்கி

எனக்காய் என் மனிதர்கள் நடுவில்

கால் நீட்டி இருந்து

போதும் இது...

குரலைச் செருமினான் சந்துரு... நான் மீண்டும் கண்களை அழுத்தித் துடைத்தேன். நான் வெறுமனே தமிழ்ப் பெண்ணாகிப் போயிருந்தேன். மாது வேண்டுமென்றே மாமியிடம் போய் விட்டாள். சந்துருவில் அவளுக்கு நிரம்பவே நம்பிக்கை இருந்தது... என்னைப் போல... பேச்சுகள் அற்று நோவுடன் சிரித்தான் சந்துரு... கண்கள் கலங்கிப் போயிருந்தன... மௌனமாய் சில நேரம் கழிந்தது... இவன் யார் இவனை எனக்கு எத்தனை வருடப் பழக்கம்... வாழ்க்கையில் எவரிலும் இல்லாத நம்பிக்கை இவன் மேல் எனக்கு எப்படி வந்தது... அகோரப்பட்டிருக்கும் தமிழரின் அசிங்கம் துடைத்து... ஒதுங்கும் எளியவர்களுக்கு எதையோ நிரூபிக்க முயன்று தோற்றுப் போய்க்கொண்டிருக்கின்றான். என் அழுகை... என் மௌனம்... என் கதவடைப்பு இவன் முயற்சியின் சறுக்கல்கள்... நான் மௌனமாக சந்துருவைப் பார்த்துக் கொண்டிருந்தேன் அவன் பார்வை தரை நோக்கியிருந்தது.

கண்ணனின் மகனின் பேர்த்டே பார்ட்டி... சந்துரு மூலம் அறிமுகமான பல குடும்பங்களுள் இதுவும் ஒன்று... தெரிந்த முகங்கள்... பூச்சுக்கள் அற்ற சிரிப்பு... "கவி ரெட் வைன்" சந்துருவின் குரல்... "யெஸ் ப்ளீஸ்" பாடல்கள் ஆட்டங்கள்... அபி சிரித்தபடியே சுத்திச்சுத்தி வந்தாள்... "உங்களுக்குச் சீலை நல்ல வடிவா இருக்கு" சந்துரு சிரித்தான். "இஞ்ச நானொருத்தி சுத்திக் கொண்டிருக்கிறன்... ஒருநாள்கூட இந்த ஆள் சொன்னதில்லை... வழியாதேங்கோ சந்துரு" மாது திமிறினாள்... "போங்கோ ஆம்பிளைகளோட நிண்டு அலம்புங்கோ" சந்துருவைத் தள்ளினாள். "வாங்கோ கவி நாங்கள் டான்ஸ் ஆடுவம்..." ஆடினோம்... ஏய் கவி நல்லா இருக்கு" கண்ணன் சிரித்துவிட்டுப் போனான்... கொஞ்சம் வெட்கமாக இருந்தது.... ஆங்கிலம் தமிழ் சிங்களம் என்று தாளம் மாறமாற மேடை நிறைந்தது... "நீங்கள் கவிதா என்ன... உங்கட கட்டுரைகள் நல்லா இருக்கு... நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்துருவின்ர ப்ரெண்ட்..." ஆடியபடியே நெருங்கினான் ஒருத்தன்... சிறிது சங்கடமாய் நான் விலக எங்களுக்கிடையில் புகுந்து கொண்டான் சந்துரு... நண்பனின் காதில் எதுவோ சொல்ல அவன் மெல்ல விலகினான்... "நல்ல பெடியன். ஆனால் கூடக் குடிச்சிட்டான். எண்டால் கொஞ்சம் ஓவராக் கதைப்பான் அதுதான்" சந்துரு சிரித்துவிட்டு விலகினான்... "உவர் பெரிய திறம்" மாது என்னைப் பார்த்துக் கண்ணடித்தாள்..

என் வாழ்க்கை மாறிப்போயிருந்தது... முகமூடி கழற்றி நாளாயிற்று... கேள்விகளற்று மறையும் பொழுதுகள்... சுகமாக இருந்தது... நிரம்பவே எழுதவும் முடிந்தது.

தலையணையில் முகம் புதைத்து நனையா பல இரவுகள்... இது தொடரும்...? வருடங்களாயிற்று. இனி எதற்குக் கேள்விக்குறி... இருந்தும்... இருந்தும்...

சந்துரு செருமினான்.... என்னைப் பார்த்தான்..

"என்ன நடந்தது" கேட்டால் என்ன சொல்வது... சங்கடமாக இருந்தது... மாது நிண்டிருக்கலாம்... இல்லை நிண்டிருந்தால் இன்னும் சங்கடமாக இருந்திருக்கும். தெரிந்துதான் போய்விட்டாள்....

"நீங்கள் அடுத்த நாள் சரியாக் குடிச்சனீங்கள் எண்டு மாது சொன்னாள்"

மௌனம்.

"அதிகமா எல்லாருமே எனக்குத் தெரிஞ்சாக்கள் தான்... இப்பிடிக் கேவலமா யார்..." சில நிமிட மௌனத்தின் பின்... "இது எங்கட கலாச்சாரம் பஸ்ஸில் கோயில்களில சொறியிறது... கிள்ளியது... ஆனால் என்ர வீட்டில் அந்த ரெண்டு நிமிஷ பவர் கட்டுக்குள்ள"

"இது என்ர அண்ணா சங்கர்... மொன்றியலில இருந்து வந்திருக்கிறார். இது என்ர ப்ரெண்ட் கவிதா நல்ல ஆய்வாளர்... கட்டுரைகள் எல்லாம் எழுதுவா..."

"அது என்ன உன்ர ப்ரெண்ட்... அப்பிடியெண்டால்..." ஆவென்ற சிரிப்பு... கண்களின் கருவில்லை என் கண்களில் ஆழப்பதிந்து அகன்றது... முகம் குனிந்து "அப்படியெண்டால்?"

விலகிக்கொண்டேன்... சந்துரு சங்கடத்துடன் அவன் கை பிடித்து வேறுபக்கம் போனான்... சின்னதாய் நெஞ்சில் ஒரு நடுக்கம்...

இட்டலிச்சட்டி குப்புறப்போட்டு கண்ணன் தாளம் தட்ட பாட்டுக்கச்சேரி தொடர்ந்தது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கவி ஏதாவது குடிக்க" மாது என்னைக் கடந்து போனாள்...

"இப்ப வேண்டாம்" ஏனோ மனம் நொந்தது... கண்கள் சந்துருவின் அண்ணா சங்கரைத் தேட.....

"உங்கட ஹஸ்பண்ட் வரேலையா?" நெருக்கமாகக் குரல் கேட்டுத் திடுக்கிட்டு... சிரித்து அசடு வழிந்து... விலகி மாதுவிடம் போனேன்...

"கவி ரெட் வைன்" சந்துரு நீட்டினான்... மறுக்க முடியாமல் வாங்கினேன்... ஏனோ மீண்டும் கண்கள் சங்கரைத் தேடியது... அவன் வில்லைகள் என்னிலிருந்து விலகுவதாய் இல்லை. அர்த்தமாகச் சிரித்தான்... முகம் திருப்பினேன். பாழாய்ப் போன நான் எதற்கு அவனைப் பார்க்கிறேன்...

"ஏய் பீட்ஸா வந்திட்டுது" சந்துரு தரையில் பெட்டிகளை அடுக்கினான்... பக்கத்திலிருந்தவள் ஒரு பீசை எடுத்து என்னிடம் நீட்டினாள்... வாங்கிக்கொண்டேன்... நெஞ்சு அடைத்தது... ஏனோ வெறுப்பாய் இருந்தது... கால் நீட்டி இருக்க கூச்சம் வந்தது. வைன் கிளாஸை தூரத்தில் வைத்தேன்... அபி பாடிக்கொண்டிருந்தாள். பீட்ஸாவை வாயில் வைத்துக்கடிக்க உள்ளே இறங்க மறுத்தது. வயிறு பசியில் அலறியது... கண்கள் சங்கரின் பக்கம் செல்லாமல் கவனமாய் இருந்தேன்... பாதிப் பீட்ஸாவைப் பெட்டியில் போட்டேன்... பக்கத்தில் இருந்தவள் ஏதோ கேட்க, பதிலளித்து விட்டுத் திரும்ப நான் போட்ட பாதிப் பீட்ஸா... கண்கள் உடனே சங்கரின் மேல் தாவ... நாக்கு நுனியால் நான் கடித்த பக்கத்தை நக்கியபடி இருந்தான்... கைகள் நடுங்கியது... அமுத்திக் கொண்டேன்... "கவி அலைபாயுதே பாடுங்கோ" தள்ளாடிபடியே சந்துரு சிரித்தான்.

"போடா" கத்தவேணும் போலிருந்தது... அழுகை வந்தது. அடக்கிக்கொண்டேன்... மாது பாடினாள்... துல்லியமாகத் தெளிந்த குரலில் "நின்னைச் சரணடைந்தேன் கண்ணம்மா" பாடினாள்... கண்ணனின் தாளத்தில் இட்டலிச்சட்டி நெளிந்து போயிருந்தது... நடந்தார்கள்... துவண்டார்கள்.... ஆடினார்கள்... பாடினார்கள்... கத்தினார்கள்... நான் சங்கரை மறந்து போனேன்... வாய்விட்டுச் சிரித்தேன்... வைன் எடுத்து பீட்ஸாவோடு வாய் நனைத்தேன்... கால் நீட்டி இருந்து... சந்துருவின் ஆட்டம் பார்த்து மாதுவோடு சேர்ந்து சிரித்தேன்... சிரித்தேன்... சிரித்தேன்...

"நீங்கள் சந்துரு எண்டு கத்தின கத்தல் இன்னும் என்ர காதில நிக்குது... முழு வெளியில நிண்டனான்... அடுத்த நிமிஷம் தெளிஞ்சிட்டன்... எப்பிடிக் கார் ஓட்டி எப்படி உங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டைக் கொண்டு வந்து விட்டனான் ஞாபகம் இல்லை..."

மெளனம்...

"சந்துரு பேசாமல் விடுங்கோ... இத்தோட விடுங்கோ... போதும்."

"அப்பிடி எண்டால் நீங்கள் என்ன செய்யப் போறீங்கள்... யார் எண்டு சொல்லுங்கோ பல்லுக்கழட்டிறன்"

"ப்ளீஸ் சந்தரு... இருட்டுக்க எனக்கு என்னண்டு தெரியும்." விசும்பல்.

"என்ன செய்யப் போறீங்கள்... முந்தின மாதிரி எங்கட ஆக்களுக்க இருந்து முழுசா விலத்தி இருக்கலாம்.. இல்லாட்டி எங்கட மனுசற்ற அகோரக் குணங்களுக்கு முகம் குடுத்துச் சமாளிக்கலாம்... இதில வெட்கப் பட வேண்டியது நீங்களில்லை... அந்த எளிய பாஸ்ட்டட் தான்..."

மனிதர்கள் இல்லா உலகில்
தத்தளித்துத் திமிறி
என் உலகைச் சுருக்கி
எனக்காய் என் மனிதர்கள் நடுவில்
கால் நீட்டி இருந்து
சங்கடங்களை முகம் கொண்டு...

"கொஞ்ச நேரம் நில்லுங்கோ நான் குளிச்சிட்டு வெளிக்கிட்டுக் கொண்டு வாறன் சிக்காகோ போவம்."

"வோர் நடக்குது... சார்ஸ் எண்டும் பயப்பிடுத்திறாங்கள் ரவல் பண்ணிறது அவ்வளவு நல்லதில்லை." சந்துருவின் சிரிப்பில இன்னும் நோ இருந்தது...

அவன் கண்கள் நோக்கி நானும் சிரித்தேன்... மாது வருவது தெரிந்தது.

✦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூன்யம்

புகாரை அப்பித் தேய்த்துக் கண்களைப் பொருத்தி உற்று நோக்க, தூரத்தில் அசைவின்றி எல்லாமே நிற்பதாய் ஒருபிரமை. திரண்ட புறாக் கூட்டம் வட்டமடித்து மீண்டும் அதே இருப்பைத் தேடி வந்தது. எப்போதும் எதுவும் நடக்கலாம். நடக்கும் வரை எதிர்பார்ப்புகளோடு தொடரும் வாழ்வு.

"சாப்பாடு போடவே?" இது சாரதாவின் குரல். இருக்கும் வரை வீடு நிறைய சிரித்து, கும்மாளித்து, அழுது, அமைதியாகி... இறுதியில் நிழலாய், காற்றாய், அசைவுகளில் மட்டும் என் உணர்வுக்குள் புகுந்து சூன்யமாய்ப் போனவள். திரும்பிப் பார்க்கிறேன். வீடு வெறித்துக்கிடக்கிறது சமையல் செய்த ஞாபக மில்லை. பசியுமில்லை. கிடைத்ததை விறைத்ததைக் கைகளின் நடுக்கம் போக்க மெண்டு விழுங்கிக் கழியும் பகல்கள்.

"சாப்பிடுவமே?" இது அவரின் குரல்... உறைப்பு, உப்பு, இனிப்பு, எண்ணெய் எல்லாமே குறைத்து ஒன்றாய், விதவிதமாய் சமைத்து, சமைத்ததில் ருசிகண்டு திருப்தியாய் வாழ்ந்த காலம் அது. விறைத்துநின்று உரத்து அதட்டியதெல்லாம் அடங்கி... சுருங்கிய கையை மெல்லத் தடவி நீவி விட்டு... கண்கள் பனிக்க பழையதைக் கதைத்தது... நெருக்கமாய் இன்னும் நெருக்கமாய்...

"என்னம்மா அப்பாக்கு நீங்களாவது சொல்லலாமே... இப்படித் தனிய வந்து முதியோற்ற இடத்தில் இருந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் கலைச்சுப் போட்டுதெண்டெல்லே ஆக்கள் சொல்லுவினம்..." ஆக்கள் நினைப்பினம், ஆக்கள் சொல்லுவினம், ஆக்கள் கதைப்பினம்... ஆக்கள், ஆக்கள்... உப்பு சுள்ளிட உறைப்பு தூக்கலாய் எண்ணெய்யில் பிரட்டி எடுத்ததை ரசித்துச் சாப்பிட்டபடியே மகன் சொல்ல மனைவியும் தலையசைத்தாள். வாய் நிரம்பிப் போயிருந்தது. நான் கதைப்பதை நிறுத்திப் பல நாட்களாயிற்று.

"அம்மா, அப்பா இருக்கமட்டும் ஏதோ வீம்புக்குத் தனிய வந்து இருந்தியள்... இப்ப அப்பாவுமில்லை உங்களுக்கு ஏனிந்தப் பிடிவாதம். என்னோட வந்து இருங்கோ நான் உங்களைப் பாக்கிறன்... வயது போன தாயைத் தனிய விட்டிட்டு இருக்கிறம் எண்டு சனம் கதைக்கிற கதை தாங்கேலாமல் இருக்கு..." மகள் குசுகுசுத்தாள். நான் கதைப்பதை நிறுத்திப் பல நாட்களாயிற்று... இஞ்சி தட்டிப் போட்ட தேத்தண்ணியை நீட்ட வாங்கிக் குடித்தவள். "யோசிச்சுச் சொல்லுங்கோ" எண்ட படியே போய் விட்டாள்.

கட்டையும், நெட்டையுமாய், வெள்ளையும், கறுப்புமாய், ஆறைப் பெத்துப் போட்டாயிற்று... காக்காய்க் கடிகடித்து மாங்காய் திண்டதும், கூட்டமாய் கோயிலுக்குப் போனதும்... கிட்டி அடித்ததும்... கெந்தி விளையாடியதும் ஆடியதும் பாடியதும் ஒன்றாய் அழுததும் வாய்விட்டுச் சிரித்ததும் அடித்ததும் உதைத்ததும்... மறக்காமல் ஞாபகமாய் மனதை வருட... கண்கள் பஞ்சாகிக் கைகள் சுருங்க, கால் நீட்டி ஆசுவாசம் கொள்ள நினைக்கையில் சுற்றிச்சுற்றி ஓடும் பேரக்குஞ்சுகளின் சிரிப்பையும் மீறி மூலைக்கு ஒன்றாய் முகம் தூக்கி நிண்டன. யாரோடு யார் சண்டை இன்று... அப்பா நியாயம் சொல்லுங்கோ... அம்மா நீங்கள் சொல்லுங்கோ... தமது கட்சிக்காய் ஆள் தேடி... நாங்கள் கதைப்பதை நிறுத்திக்கொண்டோம்.

"என்னப்பா நாங்கள் பெத்ததுகளே மூலைக்கு ஒண்டாய் வாழ்க்கையைப் போட்டியும் பொறாமையும் கொண்ட இருளாக்கி... ஒண்டை ஒண்டு கேவலப்படுத்திக்கொண்டு." அவர் மௌனமாக என்னைப் பார்த்துச்சிரித்தார்... குடிக்க ஏதாவது தரச் சொன்னார்... சாப்பாட்டில் உறைப்புக் குறைக்கலாம் என்றார்... முதியோர் கூட்டத்திற்குப் போய் பாடலாம் என்றார். எனக்கும் புரிந்தது... அவருக்கு அரசியலில் உடன் பாடில்லை... ஒரு போதும் ஓட்டுப் போட்டதுமில்லை.

"அம்மா எதுக்காக சாரதா ஆண்டீன்ர படத்தை அப்பான்ர படத்துக்குப் பக்கத்தில கொழுவி இருக்கிறீங்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்கு விசர் பிடிச்சிட்டுதெண்டு இவர் சொல்லுறார்... பாக்கிற ஆக்கள் என்ன நினைப்பினம் அம்மா..." சின்னவள் குரல் உயர்த்தினாள். எள்ளுரண்டையைப் பார்சலாகக் கட்டி வீட்டுக்கு எடுத்துப் போகச் சொன்னேன். சின்னவளின் கணவன் ரசித்துச் சாப்பிடுவான்.

கால்கள் கனகனத்தன... இவர் இருக்கும்வரை சுடுதண்ணி ஒத்தடம் பிடித்து நீவி விடுவார்... அவர் போன பிறகு நான் செய்த அதிர்ஷ்டம், சாரதா வந்து ஓட்டிக்கொண்டாள். ஏன் கால் நோ போக்க என்னோடு சேர்ந்து உடற்பயிற்சி செய்வாள்... முதியோர் ஒன்று கூடலில் அறிமுகமாகி நெருக்கமானவள்... சின்ன வயதிலேயே குடும்பப்பாரத்திற்கு பயந்து கணவன் தற்கொலை செய்து கொள்ள, குஞ்சு குறுமான்களாய் பத்தைத் தயங்காமல் சுமந்து வளர்த்தவள். கார் ஓட்டுவாள். நுனிநாக்கு ஆங்கிலம் சிகரெட் பிடிப்பது, வைன் குடிப்பதென்று தமிழ் கலாச்சாரத்தில் தொங்குபவர்களை அசரவும், அலட்டவும் வைத்தவள். பத்துப் பிள்ளைகளும் நல்லா இருக்கேக்க எதுக்கு முதியோர் இல்லத்தில் இருக்கறிங்கள் என்போருக்குப் புன்னகையில் பதில் சொன்னவள். இந்த வயதில இப்பிடி ஆட்டம் போட்டா பிள்ளைகள் கலைக்காமல் என்ன செய்யும் என்றதையும் கண்டு கொள்ளாதவள். இவருக்குப் பிடித்த ஒரே தமிழ் மூதாட்டி... அடிக்கடி வீட்டிற்கு வந்து எம்மைக் கலகலக்க வைத்தவள்... இவர் இறந்த பிறகு அவளுக்கு நானும் எனக்கு அவளும் என்றாகி விட்டது. பெத்ததுகள் தராத சுகத்தையும் இன்பத்தையும் எனக்குக் காட்டியவள். வலியின் கீறல்கள் ஏதுமின்றிப் புன்னகையுடன் படுக்கைக்குப் போனவள். தன் பயணத்தை இலகுவாக முடித்துக் கொண்டாள்...

இவர் இறந்த போது ஏற்படாத அயர்ச்சி சாரதா இறந்த போது ஏற்பட்டது. இவரின் படத்திற்குப் பக்கத்தில் சாரதா புன்னகையுடன் தொங்கிக்கொண்டிருந்தாள். கால்கள் கனகனத்தன.... தூக்கி நடக்கப் பயமாக இருந்தது... எப்போதும் எதுவும் நடக்கலாம். எதுவாயினும் கொஞ்சம் கெதியாக நடந்து விட்டால் நல்லது போல்பட்டது.

"எவ்வளவு நேரம் பசி கிடப்பீர் சாப்பிடுமன்..." கண்கள் பனித்தது... தூரத்தே அசைவற்ற வாகனங்கள் நின்று கொண்டிருந்தன... புறாக்களும் இனி கலைந்து விடும்.. இன்று சாப்பிட்ட தாய் ஞாபகம் இல்லை... பசியுமில்லை... கைகளில் நடுக்கம் மட்டும் தெரிந்தது.. யாராவது ஒருத்தர் பக்கத்தில் வேண்டும்.. பெத்ததுகள் ஆறு. அதுகள் பெத்ததுகள் எண்டு இரத்த உறவுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று மடங்காகிப் போயிருந்தது... இருந்தும் வெறுமை...

தொலைபேசி அழைத்தது. மூத்தவள்... எடுக்க மனம் வெறுத்தது... "அம்மா உங்களுக்கொண்டு தெரியுமே. அண்ணி ஆரோ ஒரு ஆம்பிளையோட காரில போறதை நான் என்ர கண்ணால கண்டனன்.. எனக்கு அண்ணான்ர குடும்பத்தில இருக்கிற அக்கறையில அண்ணாக்கு அடிச்சுச் சொன்னா பொத்தடி வாயை எண்டுறார்... உன்ர கதைய நான் இப்ப அவிட்டு விட்டா வீடு நாறும் எண்டு சந்தோஷமாவும் கௌரவமாவும் இருக்கிறன். அவன் இப்படிக் கேவலமாகக் கதைக்கிறான் அம்மா, நீங்கள் ஒருக்கா போன் பண்ணி என்ன ஏதெண்டு கேளுங்கோ" தொலைபேசி தொடர்ந்து அடித்துக் கொண்டிருந்தது... கால்களில் கனகனத்தது.

சாரதாவின் கடைசி நாள் அடிக்கடி நினைவிற்கு வந்து போனது... கண்கள் எப்போதுமே சிரித்தபடி இருக்க வாய் ஓயாமல் கதைத்துச் சிரிப்பவள்... ஒரு நாள் ஓய்ந்து போனாள் அதிர்ஷ்டம் செய்தவள்...

"அம்மா ஏனம்மா வீம்பு பிடிச்சு நிக்கிறியள்... பேசாமல் என்னோட வந்து இருங்கோ... அம்மா உங்களுக்கு ஒண்டு தெரியுமே நான் பெரிய வீடு வாங்கின உடனே தங்கச்சிக்கு இருப்புக் கொள்ளலை... ஓடித்திரியிறாளாம்... அம்மா ஏனம்மா அண்ணா இப்பிடி இருக்கிறார்... நான் என்ர பிள்ளைய எந்த எந்த வகுப்புக்கெல்லாம் அனுப்பிறன் எண்டு பாத்து அடுத்த கிழமையே தாங்களும் தங்கட பிள்ளைய கொண்டுபோய்ச் சேத்துப் போடுவீனம்... நாங்கள் எங்கட பிள்ளைகளுக்கு ஆசையா ஒண்டும் செய்யேலாமல் இருக்கம்மா... அம்மா சாரதா அன்ரியையும் அப்பாவையும் சேத்து இவற்ர வீட்டுக்காரர் ஒரு மாதிரிக் கதைக்கீனம் எனக்கு அவமானமா இருக்கு..."

தொலைபேசி அழைப்பு ஓயவில்லை... கண்கள் இவரையும் சாரதாவையும் மாறி மாறிப் பார்த்தது... படுக்கைக்குப் போக ஏனோ பயமாக இருந்தது... பிள்ளைகள் பேரக்குஞ்சுகள் கண்களில் வந்து வந்துபோனார்கள்... கால்களை நீவி விட்டுக்கொண்டேன்... தொண்டை வரண்டு போனது... தூரத்தில் வாகனங்கள் அசைவற்று அசைவது தெரிந்தது... அமைதி எங்கும். தொலைபேசி மட்டும் ஓயவில்லை.

✦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமதி ரூபன் கனடாவில் வாழ்கின்றார். மிகுந்த தமிழ் ஆர்வலராய், கனடா வாழ் தமிழரது கலா சார முன்னெடுப்பிலே நிச்சயமான பங்களிப்புச் செய்கின்றார்.

'தமிழச்சி' என்கிற புனைபெயரைப் பயன்படுத்தித் தமது, தமது படைப்பு ஆற்றல்களை வெளிப்படுத்து கின்றார்.

'யாதுமாகி நின்றாள்' என்கிற இக்கதைத் தொகுதி மூலம், புலம் பெயர்ந்து வாழும் பெண்களுடைய படைப்புப் பங்களிப்புக்குக் கௌரவஞ் சம்பாதித்துத் தருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org